
# The Wembley Exhibition

# உவெம்பிளி பல்பொருட் காட்சி

RAJARUTHNAM PILLAI



Price 10 As



பிரின்ஸ் ஆப் வேல்ஸ்.

THE

# WEMBLEY EXHIBITION

## உவெம்பிளி பல்பொருட் காட்சி

BY

T. A. RAJARUTHNAM PILLAI

ROJA MUT
47, HOSPITAL
KOTTAIYUR—62
P.M.DIST. IND

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1925

*First Edition*

# முன்னுரை

இப்புத்தகம் அச்சிலிருக்கும் காலத்தேயே காணக் கிடைத்தது. கண்டு மிகவும் களிகூர்ந்தேன். என்போன்று பிறரும் படித்துப் பயன்பெறுமாறு இந்நூலுக்கு முன்னுரையும் எழுத ஊக்கங்கொண்டேன்.

ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்ததின் பின்னர் நடந்தேறிய உலகசரித்திர நிகழ்ச்சிகளுளெல்லாம் சாலச் சிறந்தது முதன்முதலாய்ச் சென்ற வருஷத்தில் உவெம்பிளியில் உலகத்தோர் யாவரும் கண்டு ஆனந்தித்த அற்புதப் பல்பொருட் காட்சியேயாகும். ஐம்பெருங் கண்டங்களுக்கும் சிரோரத்தினமாய் விளங்கும் ஆங்கிலநாட்டு வாசிகள் தம் பராக்கிரமத்தாலே நாற்றிசையும் தம் புகழ் ஓச்சி வெற்றிக் கொடி நாட்டி உலகில் ஆறிலொருபாகப் பரப்பையும் நாலிலொருபாகக் குடிகளையும் தம் ஏகாதிபத்தியத்துக்குள்ளடக்கியோர், தம் செல்வச் சிறப்பையும் வர்த்தக வளத்தையும் கைத்தொழில் திறனையும் உலகத்தோர் கண்டு வியக்கும் வண்ணம் தம் ஆதிக்கத்துக்குட்பட்ட பலநாடுகளிலும் கடல்படும் அமுதமெனவும், கான்படும் அமுதமெனவும், தடவரை அமுதமெனவும் போற்றப்படும் பலவகைப்பட்ட அமுதக் களஞ்சியங்களைக் குறுகத்திரட்டி இம்மகா பெரும் பொருட் காட்சியில் அமைத்தனர். அவர் கருத்துக்கிணங்க ஆங்கிலக் கொடி பறக்கும் பிறநாட்டாரும் உவெம்பிளிச் சிங்காரவனத்தில் அவரவருக்கென ஒதுக்கிவிடப்பட்ட பாகங்களில் மனோவாக்குக் கெட்டாத பல விசித்திர மாளிகைகள் அமைத்து அவைகளில் தத்தம் நாட்டு விளைபொருட்களையும் தாவரங்களையும் கைத்தொழிற் சரக்குகளையும், காண்போர் கண்க

ளைக் கவருமாறு பரப்பி அவர் நோக்கம் நிறைவேறச்செய்யும் வண்ணம் அவருடன் ஒத்துழைத்த தன்மையை, ஆசிரியர் இராஜரத்தினம்பிள்ளை யவர்கள் போதிய உண்மை ஆதாரங் களைக் கையாண்டு, ஆங்காங்கு தக்க சித்திரப்படங்களுடன் இன்னும் படிக்கலாம், பின்னும் படிக்கலாமென்று ஆவல் தோன்ற இன்பம் பொழியும் இணையற்ற செந்தமிழ் நடையில் உள்ளதை உள்ளவாறு ஈண்டு விளக்கியுள்ளார். இந்நூல் பல பள்ளிக்கூடங்களிலும் பாட புத்தகமாய் அமையப் பெறின் மாணவர் பலர்க்கும் பெரும்பயன் விளைக்குமென் பது எனது திண்ணம்.

மயிலை
28-7-25

தி. நே. சிவஞானம்
வளர்ச்சி நெறி அமைச்சர்.

# AUTHOR'S PREFACE

THE object of this volume is to enable the large Tamil population to know what the British Empire Exhibition means to the Empire, how the different parts of this great Empire are inter-dependent economically and how the Empire is, and can continue to be, self-contained. It gives a vivid description of that great Exhibition and shows that it is a striking demonstration of the remarkable variety of people and resources which are found in that great Commonwealth of Nations known as the British Empire. It also shows that the Exhibition has strengthened the ties of friendship among the various nations of the Empire and has, by displaying their wealth, their industry and their skill, given rich proof of what the Commonwealth can do for itself and the prosperity of mankind after the devastation and ruin of the Great War.

The book gives a special account of the Indian Pavilion, its various courts and the noteworthy exhibits contained therein and deals with the Madras Court in particular. It contains ample materials for careful study, is extensively illustrated and it is hoped will be very interesting to the reader.

In preparing this volume I experienced many difficulties at the outset for want of materials. It is significant that not one book-seller in the city could supply any literature on the Wembley Exhibition although the English market has been flooded with such publications.

I have to acknowledge most valuable help from Dewan Bahadur T. Vijya Raghavacharyar, Rao Bahadur S. K. Sundaracharlu, and Mr. L. B. Green who readily placed many

papers and literature in their possession at my disposal and offered various suggestions. Dewan Bahadur T. Vijya Raghavacharyar and Mr. Green both supplied a number of photographs with permission to make blocks of them. The Government Reports furnished to me by Mr. Green were of immense use, whilst the frequent interviews which Mr. Sundaracharlu granted me helped to clear a number of doubts which naturally arose. The frequent talks I had with him gave me a full idea of the Exhibition.

My heartiest thanks are due to the Hon. Dewan Bahadur T. N. Sivagnanam Pillai, Minister of Development Madras Government, for his excellent Tamil Introduction.

My thanks are also due to Mr. P. Duraisamy Iyengar, the Editorial Assistant of the Christian Literature Society, for suggesting the topic and for the hints and suggestions he gave me to determine the scope of the book when the work was in progress; and also to Dr. A. J. Appasamy, M.A., PH D., for his valuable observations. I fervently hope the book will answer the purpose for which it has been written.

T. A. R.

# உவெம்பிளி பல்பொருட் காட்சி

# THE WEMBLEY EXHIBITION

## முதலாம் அதிகாரம்

## இங்கிலாந்தும் அதின் மகத்துவமும்

பூவுலகில் முன்னரொருபோதும் யாருமெவ்விடத்துங் கண்டு கேட்டறியாத மிகப் பெரிதும் அதியற்புதமுமான பல்பொருட் காட்சியொன்றை, இணையற்ற பராக்கிரமமும் மிக்க சம்பத்துமுடையதாய் விளங்கும் இங்கிலாந்தின் கண்ணேயுள்ள மிட்டில்ஸெக்ஸ் மாகாணத்தில் லண்டன் மாநகரத்திற்குச் சமீபத்திலிருக்கும் உவெம்பிளி என்னுஞ் சிங்காரவனத்தில் நமது ராஜாங்கவதிகாரிகள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட இந்தியா, பர்மா, ஆஸ்த்திரேலியா, ஆபிரிக்கா, கனடா முதலிய பற்பல தேசங்களினுதவியைக் கொண்டு சென்ற வருஷத்தில் வெகு விநோதமாய் ஏற்படுத்தினரென்பதையும், அக்காட்சி நிகழ்ந்தகாலத்தில் பிரதிதினமும் பல்லாயிரம் ஜனங்கள் ஆங்குள வதிசயங்களைக்கண்டு களித்தார்களென்பதையும், அவ்விநோதக் காட்சி இவ்வருஷமும் நடைபெற்று வருகின்றதென்பதையும் நம்மிற் பலரறிவர். இங்கிலாந்தின் தலைநகரும் ராஜதானியுமாயுள்ள லண்டன், தேம்ஸ் நதியினிருமருங்கினும் பரந்து தோன்றுமோர் புராதன நகரம். முதலாம் நூற்றாண்டில் ரோமர் அதைக் கைப்பற்றியபோதே அது வர்த்தகத்திற் பிரசித்தியடைந்து மிக்க சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கிற்று. அந்நாள்முதல் இந்நாள் வரையிலும் அது விர்த்தியடைந்து வருவதால் அது வர்த்தகம், செல்வம், நாகரீகம், பராக்கிரமம் முதலியவற்றில் மிக்க கீர்த்திபெற்று இங்கிலாந்தின் தலைநகராய்மாத்திரமன்றி உலகமனைத்திற்கும் வர்த்தக

சாலையாகவும் சிறந்து விளங்குகின்றது. அதின் விஸ்தீரணம் சுமார் எண்பது சதுர மைலென்றும், குடிஜனத்தொகை சுமார் எண்பது லக்ஷமென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. வியாபாரத்தின் பொருட்டு அந்நகரத்தின் துறையை வந்தடுக்குங் கப்பல்கள் எண்ணுவடங்கா. உலகத்திலுள்ள சமஸ்த ஜாதியாரையும் அங்கு காணலாம். பூவுலகின்கண் வழங்கும் பாஷைகள் யாவுமங்கு வழங்குமாயின் அந்நகரத்திற்குச் செல்வோர் மற்றைய பெரிய நகரங்களுக்குச் செல்வோரைவிட அதிகமென்றே சொல்லவேண்டும்.

லண்டன் நகரத்தின் பெருமையே இங்கிலாந்தின் பெருமைக்கும், பராக்கிரமத்திற்கும் முக்கிய காரணம்.

இங்கிலாந்தை ஜனன தேசமாகவுடைய ஆங்கிலேயர் பதினாறாம் நூற்றாண்டு முதல் தங்கள் தைரியம், ஊக்கம், நேர்மை, விடாமுயற்சி முதலிய சிறந்த குணங்களால் ஐரோப்பாவிற் றலைமைபெற்ற ராஜ்ஜியத்தவர்களுக்குச் சமானமானவர்களாய் விளங்குகின்றார்கள். இக்காலத்தில் அவர்களோடு போர் முகத்திற் சமர்புரிந்து அவர்களை ஜயிக்க வல்லவரேனும் அவர்களுக்கு நிகரான பலமுடையவரேனும் எங்குமில்லை. உலகத்தில் அளவற்ற செல்வமும் பெருஞ் சிறப்பும் பெற்று வாழ்கின்ற சில தேசத்தாருள் அவர்களை ஒரு தேசத்தவராகச் சொல்லலாம். வர்த்தகம், நெசவு, அதிசயமான யந்திரங்களை நிருமித்தல் முதலிய கைத்தொழில்களிலும், கல்வி, நேர்மை, மதாபிமானம், சுவாதீனம், தேசாபிமானம் முதலிய சிறந்த குணங்களிலும் ஆங்கிலேயர் மிகப் பிரசித்தி பெற்றவர்கள். அவர்கள் அதியற்புதமாயமைத்துள்ள போர்க் கப்பல்கள் எந்தச் சமுத்திரத்திலும் முதன்மை பெற்றவையாயிருக்கின்றன. அதிவீர சிகாமணியாய் விளங்கின நெப்போலியன் ஐரோப்பிய ராஜ்ஜியங்களையெல்லாந் திகிலுறச்செய்த காலத்தில் உவெலிங்டன் என்னுஞ் சேனாபதியைத் தலைமையாய்க் கொண்டு உவாட்டர்லூ என்னும் ஸ்தலத்தில் அவனை ஜயித்துச் சிறைப்படுத்தினவர் ஆங்கிலேயரன்றோ? கி. பி. 1914-ம் ஆண்டிலாரம்பமாகி உலகம் முழுவதையும் நடுங்கச் செய்த மகா யுத்தத்தில் வீரதீரராய் விளங்கிய ஜர்மனியரையும் அவர்க்குதவியாய்த் தோன்றிய நட்பரசரையும் வெகு கஷ்டத்தோடு ஜயித்து வெற்றிக்கொடி பறக்க ஜயபேரிகை முழங்க ஜயசீலராய் வெளிப்போந்தோர் ஆங்கிலேயரேயாவர்.

பண்டைக்காலம் முதல் ஆங்கிலேயர் தங்கள் அதிகாரத்தை யுறுதிப்படுத்தவேண்டுமென்னும் நோக்கமுடையவராய், பற்பல தேசங்களைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டு, தங்கள் விவேகத்தினாலும் புத்தி சாதுரியத்தினாலும் பராக்கிரமத்தினாலும் அவைகளைப் பரிபாலித்து வருகின்றனர். அவர்கள் வெளித் தேசங்களோடு வர்த்தக சம்பந்தமான உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு பற்பல அந்நிய தேசங்களில் தைரியமாய்ப் புகுந்து வர்த்தகத்தைச் சிறப்புற நடத்தி மிக்க கீர்த்தியும், செல்வமும் பெற்று வாழ்கின்றனர். பூர்வகாலத்தில் வர்த்தகத்தினாலும், செல்வத்தினாலும் அதிக கீர்த்தி பெற்று விளங்கிய தீரு, கார்தேஜ், வெனிஸ், நினிவே, பாக்தாத்து தமாஸ்க்கஸ், பாபிலோன் முதலிய பட்டணங்கள்தானும் இங்கிலாந்து இக்காலத்திலடைந்திருக்கும் கீர்த்தியையும் பிரசித்தியையுமடையவில்லை. தற்காலத்திலுள்ள மற்றைய பிரசித்திபெற்ற நகரங்களும் இத்தனை மகிமையை இன்னுமடையவில்லை.

கொலம்பஸ் கி. பி. 1497-ம் வருஷம் தென்னமெரிக்காவைக் கண்டுபிடித்த பின்னர், வட அமெரிக்காவிற் குடியேறி அதைக் கைவசப்படுத்திக்கொண்டவர்கள் வீரதீரரான ஆங்கிலேயரே. ஆங்கிலேய பாஷையில் யூனைட்டெட் ஸ்டேட்ஸ் என்று வழங்குகிற ஐக்கிய தேசமும் ஆங்கிலேயர் குடியேறின தேசமேயாம். பிரதமத்தில் இங்கிலாந்தினரசாட்சிக்குட்பட்டிருந்த அந்நாடு பின்னால் நிகழ்ந்த சில கலகங்களினால் தாய் நாடாகிய இங்கிலாந்தினின்றும் பிரிந்து குடியரசை ஏற்படுத்திக்கொண்டதேயாயினும் அந்த நாட்டு ஜனங்களும் கனடாவிலுள்ள ஜனங்களும் பெரும்பாலும் ஆங்கிலேயரும் அவர்கள் சந்ததியாருமே.

கி. பி 1759-ம் வருஷம் வட அமெரிக்காவிலுள்ள கனடா என்னுஞ் சிறந்த தேசம் ஆங்கிலேயர் கையிலகப்பட்டதால் அது முதல் அவர்களுடைய அதிகாரம் அங்கு விருத்தியாயிற்று. ஆகையால் இப்பொழுது மேலைத் தேசங்களில் கனடா முழுவதும் நியூபிரான்ஸ்விக் மாகாணமும், நோவாஸ்கோஷியா, நியூவவுண்லாந்து, பிறின்ஸ் எட்வர்ட் அயில்ஸ் முதலிய பெரிய தீவுகளும், மேற்கிந்திய தீவுகள் முதலிய அநேக சிறு தீவுகளும் ஆங்கிலேயர் அரசாட்சிக்குட்பட்டனவாயிருக்கின்றன.

இவ்வண்ணம் ஆங்கிலேயர் மேற்குத் தேசங்களில் மாத்திரமல்ல, கிழக்குத் தேசங்களிலும் தங்கள் ஆஞ்ஞா சக்கரத்தை நிலைநிறுத்தியிருக்கின்றனர். பரதகண்டமென்னும நம்மிந்தியா தேசமும் அதன் தென்பாலுள்ளதும் இலங்கா தீவென்றும் சந்த தீபமென்றுங் கூறப்படுகிறதுமான இலங்கைத் தீவும் ஆங்கிலேயர் கைவசமாயின. ஆகையால் இலங்கைத் தீவின் தென் பாகத்தேயுள்ள காலி முதல் இந்தியாவின் வடபாகத்தேயுள்ள இமயமலை வரையிலும் ஆங்கிலேய கொடியே பறக்கின்றது. மிகச் சிறுபாகம் நீங்கலாக மற்றைய இந்தியா முழுவதையும் ஆங்கிலேயரே அரசாண்டு வருகின்றனர். ஆசியாக் கண்டத்தில் ஆங்கிலேயர் இவைகளை ஆள்வதன்றி, அரேபியாக் கரையிலுள்ள ஏடின் துறைமுகத்தையும், தொடுவாய் ராஜ்ஜியம் (Straits Settlements), மலேயா நாடு முதலிய நாடுகளையும் போர்னியோ, ஹொங் கோங், லாபுவான் என்னும் இவற்றின் சில பாகங்களையும் தம்முடைய அதிகாரத்திற் குட்படுத்தியிருக்கின்றனர்.

தென் சமுத்திரத்திலுள்ள ஆஸ்திரேலியாவையும் ஆங்கிலேயரே கைப்பற்றி குடியேறி அதை முழுவதும் தங்கள் சுவாதீனத்தில் வைத்துப் பரிபாலித்து வருகின்றனர். அதின் சமீபத்திலுள்ள டாஸ்மானியா, நியூஸிலாந்து, வீஜி முதலிய பல தீவுகள், ஆங்கிலேய ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவை. இவையன்றி ஆபிரிக்காக் கண்டத்தில் கேப் கலனி, நேட்டால், டிரான்ஸ்வால் முதலிய குடியேற்ற நாடுகளும், ஸேயின்ட் ஹெலினா, ஆஸென்ஷன், மோரிஷஸ், ஸோகோட்ரா முதலிய தீவுகளும் ஆங்கிலேய அரசாட்சிக்குட் பட்டவை.

இவற்றோடு இங்கிலாந்து பக்கத்திலுள்ள அயர்லாந்து தீவையும், நெடுங்காலம் தன்னோடுருஞ் சமர்புரிந்து சுவாதீன நாடாய் விளங்கிய ஸ்கோத்லாந்து சீமையையும், உவேல்ஸ் நாட்டையும் தன்னகத்தே அடக்கியுள்ளது. ஆகையால் ஆதியில் மிகச் சிறியதாயிருந்த ஆங்கிலேய ராஜ்ஜியம் இக்காலத்தில் மிக்க விஸ்தீரணமுடையதாய் ஐம்பெருங் கண்டங்களிலும் பரவி ஆல்போற்றழைத்து அறுகுபோல் வேரூன்றி நிலைத்து நிற்கின்றமையால் அது சூரியன் அஸ்தமியாத ராஜ்ஜியமென்று பெயர்பெற்றிருக்கின்றது. உலகமெங்கும் பரந்திருக்கும் ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் தற்கால விஸ்தீரணம் சுமார் நூற்று நாற்பது லக்ஷம் சதுர மைல்; ஆங்கிலேய அரசாட்சிக்குட்

பட்ட ஜனங்களின் தொகை சுமார் நாலாயிரத்துத் தொண்ணூற்றைம்பது லக்ஷம்; ஆகையால் ஆங்கிலேயர் இவ்வுலகத்தில் ஆறிலொரு பாகத்திற் கதிகாரிகளாயிருக்கின்றனரென்றும், பூமியிலுள்ள ஜனங்களில் கால்வாசிப் பேர் அவர்களால் ஆளப்படுகிறார்களென்றும் தெளிவாகிறது.

இவ்விதமாய் இங்கிலாந்து உலகத்தின் எல்லாப் பாகத்திலும் தன் ஆஞ்ஞா சக்கரத்தை நிலைநிறுத்தியிருப்பதுமன்றி, பழமையானும் இராணுவ பலம், கப்பற் படை, ஆகாய விமானச் சேனை முதலிய வற்றாலுண்டான பலம், கல்வித் தேர்ச்சி, ராஜ்ஜிய தந்திரமாட்சி, செல்வப்பேறு, நாகரீகம் முதலியவற்றானும் மற்றைய நாடுகளுக் கோர் சிரோரத்தினமாகவும் விளங்குகின்றது. அதின் சேனை மேலான பலமும் அபார சக்தியுமுடையது. இங்கிலாந்திலும் அதினோதிபத்தியத்துள்ளடங்கிய மற்றைய ராஜ்ஜியங்களிலும் இலங்கை, ஆஸ்த்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகளிலுமுள்ள குதிரைப் படை, காலாட் படை முதலிய படைகள் வெகு தீரமும் திறமையுமுடையவை. இந்தியாவென்னும் எம் பரதகண்டம் இங்கிலாந்தென்னும் கிரீடத்தின் கண்ணே யிழைக்கப்பெற்ற மதித்தற்கரிய மாணிக்கமாக விளங்குகின்றது. இங்கிலாந்தில் நடைபெறுங் கைத்தொழிலனைத்தும் இந்தியாவில் பணமாய் மாறி பழையபடி இங்கிலாந்தை யடைகின்றன. இங்கிலாந்திற்குப் பகையரசரால் யாதேனுமிடுக்கண் நேரிடுமாயின் நமது இந்திய அரசர் தம்மையும் தமது சேனை, திரவியம் முதலிய யாவையும் இங்கிலாந்தின் பாதுகாப்பின் பொருட்டுச் சமர்ப்பிக்கத் தயாராயிருக்கின்றனர். சின்னாள் முன்னர் இங்கிலாந்திற்கும் ஜர்மனிக்கும் அகோர யுத்தம் நடந்த காலத்தில் நம்மிந்திய அரசர் அவ்விதமாய்த் தங்கள் ராஜ விஸ்வாசத்தையும், அனுதாபத்தையும் காட்டியுள்ளார்.

ஆங்கிலேயர் கூர்ந்த புத்தியும், பிரஜைகளை யடக்கி யாளுந்திறமையும் நன்றியமையப் பெற்றவர்கள். வர்த்தக விஷயத்திலும், போர்த் தொழிலிலும் அவர்கள் பெயர்பெற்றவர்கள். அது, வர்த்தகத்தின்பொருட்டு பிரதமத்தில் இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர் பிற்காலத்தில் இப்பெருந் தேசத்தைக் கைவசப்படுத்திக்கொண்டதினின்று நன்கு புலப்படுகின்றது. மகாராணி விக்டோரியா காலம் முதல் இதுவரையிலும் ஆங்கிலேயரடைந்துள்ள நாகரீகமும், அவர்கள் உபயோகித்து வரும்

புகை வண்டி, மின்தபால், புகைக் கப்பல், ஆகாய விமானம், மூழுகும் கப்பல் (ubSmarine) முதலியவைகளும் வியக்கற்பாலன. அவர்கள் தங்கள் ராஜ்ஜியத்தில் ஆங்காங்கியற்றியுள்ள இருப்புப்பாதைகளும், பிரமாண்டமான வாராவதிகளும், போர்க் கப்பல்களுஞ் செல்ல வல்ல கால்வாய்களும், தொழிற்சாலைகளும் கைத்தொழிலை விலகுவாக்கும்பொருட்டு நிரூபித்துள்ள அதிசயமான யந்திரங்களும் அவர்களுடைய திறமையை நன்கு விளக்குகின்றன. நினைத்த மாத்திரத்தில் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் சேனைகளையும் யுத்த உபகரணங்களையும் கொண்டு செல்ல வல்ல கப்பல்கள், புகை வண்டிகள் முதலிய சாதனங்கள் அவர்களிடத்திலுண்டு. நொடிப்பொழுதில் மருந்து, குண்டு, ரவை, வாள், ஈட்டி, துப்பாக்கி, பீரங்கி முதலிய யுத்த உபகரணங்களைச் செய்து முடிக்கக்கூடிய தொழிற்சாலைகளையும், யந்திரங்களையும் அவர்கள் தங்கள் ராஜ்ஜியத்தில் வேண்டியமட்டுமமைத்துள்ளார். உசிதமான ராஜ்ஜிய முறையைக் கைக்கொண்டு, எதெதற்கு எவ்வளவு திரவியம் வேண்டுமோ அவ்வளவு திரவியத்தைப் பிரத்தியேகமாய் எடுத்து வைத்துச் செலவை மட்டுப்படுத்தி ராஜ்ஜிய விஷயங்களை அதிக ஜாக்கிரதையாய் அவர்கள் நடத்தி வருகின்றமையால் அவர்களிடத்தில், வர்த்தக விருத்திக்கும் தொழில் முயற்சிகட்கும் வேண்டிய பணம் எப்பொழுதும் தயாராயிருக்கின்றது. மேலும் அவர்களுக்கு வேண்டும்போது உதவி செய்யக்கூடிய சிற்றரசர், பிரபலமான வர்த்தகர்கள் தனாதிபதிகள் முதலியோர் அவர்களுடைய பரந்த ராஜ்ஜியத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றனர். கூட்டுத் தொழிலின் முறையை அனுசரித்து அவர்கள் வர்த்தகத்தை நடத்தி வருவதினாலும் கைத்தொழிலை விசேஷமாய் விர்த்திசெய்வதினாலும் இங்கிலாந்து மிக்க செல்வமுடையதாய் மிக்க பராக்கிரமமடைந்து பெரும் பிரசித்தியும் பெற்று விளங்குகின்றது.

மானிட வாழ்க்கைக்கின்றியமையாதனவாகிய ஆகாரம், உடை முதலியவற்றிற்குக் காரணமாயுள்ள வஸ்துக்களிலும் ஆங்கிலேய ராஜ்ஜியம் சிறந்ததாக மதிக்கப்படுகின்றது. கோதுமை, வாற்கோதுமை முதலிய தானியங்கள் பிரித்தானியா தீவுகளிலும், நெல்லு, கோதுமை, தினை, சோளம், கேழ்வரகு, வரகு முதலியவைகளும் பின்னும் பலவகையான அநேக தானியங்களும் ஆங்கிலேய ஏகாதி

பத்தியத்தன்னடங்கிய இந்தியா, கனடா, ஆஸ்த்திரேலியா, இலங்கை முதலிய புறநாடுகளிலும் விசேஷமாய் விளைகின்றன. இவையன்றி எண்ணிறந்த காய் கனி வர்க்கங்களும் சுவைக்கிருப்பிடமாயுள்ள கரும்பு, மிளகாய், மிளகு, புளி முதலியனவும், ஏலம், இலவங்கம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கறுவாப்பட்டை முதலிய வாசனைத் திரவியங்களும் ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் பல பாகங்களிலகப்படுகின்றன. அவற்றுள் பரதகண்டத்திற்குத் தென்பாலுள்ள இலங்கைத் தீவு வாசனைத் திரவியங்கட்குத் தலைமைபெற்றதாகலின் அதற்குக் கந்த தீபமென்று பிறிதோர் பெயர் வழங்குகின்றது.

உடைக்கு அவசியம் வேண்டிய நூலைத்தரும் பருத்திச்செடி இந்தியாவில் விசேஷமாய்ப் பயிராகின்றது. பூர்வீக காலமுதல் இந்தியா பருத்திக்கும் பருத்திநூலால் நெய்யப்படும் துணிக்கும் பேர் போனது. முற்காலத்தில் வட இந்தியாவிலுள்ள டாக்காவில் நெசவு செய்யப்பட்ட மிகவும் நயமான மஸ்லின் என்னும் துணியை அக்காலத்தில் வர்த்தகத்தின் பொருட்டு இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் வாங்கிக்கொண்டுபோய்த் தாங்கள் செல்லும் பற்பல தேசங்களில் விற்று அதிக லாபமடைந்தனர். இந்தியா அக்காலத்தில் நயமான துணிக்குப் பேர்போன தேசமென்று உலகமெங்கும் பிரசித்தி பெற்றிருந்தது. இந்தியாவில் விளையும் பருத்திப் பஞ்சில் அநேகவகை உண்டு. அவற்றில் சில மிகவும் மேலானவை. ஆங்கிலேய வர்த்தகர்கள் அந்தப் பஞ்சை ஏராளமாகத் தருவித்து தங்கள் தொழிற்சாலைகளிலுள்ள நெசவு யந்திரங்களின் சகாயத்தால் நூலாக நூற்றும் பலவிதமான துணிகளாக நெசவு செய்தும் பற்பல தேசங்களுக்கனுப்பி வர்த்தகம் செய்கின்றனர். ஆகையால் ஆங்கிலேய ராஜ்ஜியம் தனக்கு வேண்டிய உடையைச் செய்துகொள்வதுமல்லாமல் பற்பல வேறு தேசங்களுக்கு உடையளிக்கும் தேசமாகவுமிருக்கின்றது. இங்கிலாந்தின் வர்த்தகத்திற்கும் செல்வ விருத்திக்கும் பேராதாரமாய் விளங்குவது துணிவர்த்தகமேயாகலானும், இங்கிலாந்தில் நெசவாகும் துணிகள் பெரும்பாலும் இந்தியாவிலே செலவாகின்றமையானும் இந்தியாவை இங்கிலாந்தின் சந்தையென்று கூறவமையும்.

இப்பொழுது இங்கிலாந்திலிருந்து வரும் பற்பல வகையான துணிகள் எத்தனைச் சிறப்பு வாய்ந்தவை. கிளாஸ்கோ நகரிலி

ருந்து வரும் மல்நினிசுகள் எவ்வளவு நாணயமானவை? அவை ஆங்கிலேய தொழிற்றிறனையும் துணியின் நயமான தன்மையையும் இந்தியாவில் விளையும் பருத்தியினுயர்வையும் நன்கு விளக்குகின்றன.

பட்டு நெசவுத்தொழிலிலும் ஆங்கிலேய ராஜ்ஜியம் மிக்க பிரசித்தியடைந்திருக்கிறது. அச்சிறந்த தொழில் எலிஸபெத் ராணி காலம் முதல் இங்கிலாந்தில் நடந்துவந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் அத்தொழில் மிகப் பிரபலமாய் அங்கு நடந்துவந்ததாகவும் அத்தொழில் வல்லார் நாற்பதினுயிரம் பேர் இங்கிலாந்தில் வசித்ததாகவும் கூறப்பட்டுள்ளன. கைத்தொழில் விஷயத்தில் பாம்பரையாய் வருமனுபவமே அத்தொழிலை மென்மேலுஞ் சிறப்புறச்செய்வது. ஆங்கிலேயர் இக்காலத்தில் பட்டுநெசவுத் தொழிலிலடைந்திருக்கும் பெருங்கீர்த்திக்கு அதுவே காரணம். முற்காலத்தில் வழங்கிவந்த நெசவு தறிகளைப் பெரும்பாலும் நீக்கிவிட்டு வெகு வேகமாய் நெசவு செய்ய வல்ல யந்திரங்களை இப்பொழுது உபயோகப்படுத்திவருகின்றனர். இவ்விதமான யந்திரம் முதலில் கி. பி. 1720-ம் வருஷம் ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் அடுத்த சில வருஷங்களுள் அவ்வகையான யந்திரங்கள் நாடெங்கும் பரவினமையால் மிகச்சிறந்த பட்டுத்துணிகளையும் நெசவுசெய்வதற் கேதுவாயின. இக்காலத்தில் இங்கிலாந்தில் மிகவும் மெல்லிய பட்டுநூலினுல் வெகு நாணயமான பட்டுத் துணிகள் நெசவு செய்யப்படுகின்றன. பிரித்தானியா ராஜ்ஜியத்தில் இப்பொழுது சுமார் முப்பது பட்டணங்களில் பட்டு நெசவுத்தொழில் விசேஷமாய் நடைபெற்றுவருகின்றது. பளபளப்பிலும், உறுதியிலும், நயமான தன்மையிலும், அழகிலும் இங்கிலாந்தில் நெய்யப்படும் பட்டுத்துணி, மற்றைய தேசங்களில் நெய்யப்படும் துணிகளுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததன்று. பட்டு நெசவுத்தொழிலை விர்த்திசெய்வதற்காக, பட்டு நெசவுத் தொழிலாளர் சங்கம் என்று ஒரு சங்கம் இங்கிலாந்தி லேற்படுத்தப்பட்டிருக்கின்றது. அச்சங்கத்தார் பட்டு நெசவை மென்மேலும் விர்த்தியாக்குவதற்கு வேண்டிய வேற்பாடு செய்துவருகின்றனர்.

ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்குட்பட்ட இந்தியாவிலும் ஆச்சரியமான பட்டுத்துணிகள் நெசவாகின்றன. பட்டுப்புடவைகள், குட்டைகள், அங்கவஸ்திரங்கள், தலைக்குட்டைகள், ரவிக்கைகள், பீதாம்

பாங்கள் விதம்விதமாய் இந்தியாவெங்ஙனும் நெய்யப்படுகின்றன. இந்தியாவில் நெசவு செய்யப்படும் பட்டு தினுசுகள் பெரும்பாலும் சரிகையோடு சம்பந்தப்பட்டவையாய், கண்டோர் ஆச்சரியப் படுவனவாயிருக்கும். விசேஷமாய், புடவைகளின் கரையிலும் முன்தானையிலும் பொன் வெள்ளிச் சரிகையினால் செய்யப்படும் வேலை உலகத்தவரைப் பிரமிக்கச் செய்யும்.

ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் சகலவிதமான தாதுவர்க்கங்களும் ஏதேஷ்டமாய் அகப்படுகின்றன. அது மிக்க செல்வமும் அதிக பல முமடைந்திருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாம். பொன், வெள்ளி, ஈயம், இரும்பு முதலிய லோகவகைகள் ராஜ்ஜியத்தின் பல பாகங்களில் பூமியிலிருந்து தோண்டி யெடுக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளிலுள்ள பிரமாண்டமான யந்திரங்களியங்குவதற்கு அவசியம் வேண்டிய நிலக்கரி இங்கிலாந்திலும் அதினுளுகைக்குட்பட்ட வேறு சில தேசங்களிலும் அகப்படுகின்றன. இங்கிலாந்து, இரும்பை அதிகமாயுபயோகப்படுத்தி அதியற்புதமான இரும்பு வேலைகளை இஷ்டப்படி செய்வதிலும் அதிசயமான யந்திரங்களை நிரூபித்தலிலும் பெயர்பெற்று உலகத்தில் கைத்தொழிலிற் சிறந்த தேசமாக விளங்குவதற்குக் காரணம் நிலக்கரியாலேற்பட்ட சௌகர்யமேயாம். வாள், ஈட்டி, துப்பாக்கி, பீரங்கி முதலிய போராயுதங்கள் நிலக்கரியின் சகாயத்தைக்கொண்டு இரும்பினாற் செய்யப்படுகின்றன. தீபங்களை யேற்றுவதற்கும், மோட்டார்வண்டி ஆகாயவிமானம் முதலியவற்றை யோட்டுவதற்குமாதாரமாயுள்ள மண்ணெண்ணெய் (Petrol) முதலியன ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் சில பாகங்களிலகப்படுகின்றன.

இனி, கடல்படுமமுதும், கான்படுமமுதும் தடவரையமுதமென்றுலகராற் புகழப்படும் பல்திறத்தவாய வமுதங்கள் மலிந்து பொலிந்து விளங்குவதும் ஆங்கிலேய ராஜ்ஜியத்தின்கண்ணே யாம். விலைமதித்தற்கரிய முத்து, பவளம், சங்கு முதலிய கடல்படு திரவியங்களும், பல ஜாதியான மச்சவகைகளும் சமுத்திரத்தில் ஏதேஷ்டமாய் அகப்படுவதினால் ராஜாங்கத்தார் பெருஞ்செல்வத்தையடைகின்றனர். தேக்கு, கருங்காலி, சந்தனம், முதிரை, பாலை, நூக்கமரம் முதலிய பலவகையான விருக்ஷங்களும், யானை, குதிரை, மான், மரை முதலிய மிருகஜாதிகளும் காடுபடு திரவியங்களாம். மன்

ளர்க்குரிய நால்வகைச் சேனைகளுள் கஜம், துரகம் என்னுமிரண்டும் யானை குதிரைகளாலாவன. இவற்றால் ராஜ்ஜியத்திற்கு எத்தன்மை யான பலம் ஏற்பட்டிருக்கிறதென்பது கவனிக்கற்பாலது. பொற் பொடிகளும் விலையேறப்பெற்ற வைரம், வைடூரியம், கோமேதகம், மரகதம் முதலிய இரத்தினங்களும், ஆற்றுமணலிலும் மலைச்சாரல் களிலும் அகப்படுகின்றன. இவையன்றி மலைகளில் விசேஷமாய் அகப்படும் சலவைக்கல் கருங்கல் முதலிய பலவிதமான கற்கள் எவ் வளவு பிரயோஜனமானவை.

மேலேகூறிய யாவற்றையு மொருங்கே உய்த்து நோக்குமிடத்து, ஆங்கிலேய ராஜ்ஜியம் சகலவிதமான சம்பத்துகளும் நிறைந்த பூரண ராஜ்ஜியமென்பதும் அதற்கிணையான ராஜ்ஜியம் பிறிதொன்றில தென்பதும் நன்கு புலப்படும். அது மகா கீர்த்தியும் அதிகாரமும் கல்வியும் செல்வமும் அமையப்பெற்றதாய் வெகு சிங்கார வலங்காரம் பொருந்தி மிக்க பராக்கிரமமுடைய ராஜ்ஜியங்களின் மத்தியில் விளங்குகின்றது. அதின் பிரபலமும் மகிமையும் பெருமையும் வர்த்தகமும் செல்லாத நாடுகளில்லை. அரசாட்சியில் பிரபையுள்ள சந்திரனைபோன்று இடாசலத்தைப்போல் ஊடே செல்லமுடியாத பராக்கிரமமுடையதாய் பற்பல தேசத்தரசர் அன்புடன் ஒத் துழைக்க வெண்கொற்றக் குடை நிழற்ற நீதியும் செல்வமும் இனி தோங்க, அரசு செலுத்தும் மகாபாக்கியம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத் திற்கே யுரியது. ஆங்கிலேயர் எவ்விதமான பெருமுயற்சியையுங் கைக்கொண்டு நிறைவேற்ற வல்லவராதலின் இப்பெரும் பல்பொருட் காட்சி வைபவத்தையும் கையேற்று நடத்தி இனிது முடியுமாறு செய்யவல்லவர் அவரே யாவர். இக்காலத்தில், ஆங்கிலேய திரு முடி புனைந்து, செங்கோல் கட்கம் முதலிய ராஜ சின்னங்கள் திருக் கரத்திற்றாங்கி, அன்பே திருவுருவாய்க்கொண்டு, அஷ்டதிக்கும் புகழ் பரவ, அரியாசனத் தமர்ந்து ஆங்கிலேய மகா மன்னராயும் எமது சக்கரவர்த்தியாயும் துலங்குபவர் மன்னர்பிரானுகிய ஐந்தாம் ஜார்ஜ் மகிபரே. இப்பல்பொருட் காட்சி விஷயத்தில் அவரும் மேரி ராணியாம் ராஜ பெருமாட்டியும், நமதிளவரசரும் ஏனைய ராஜ குடும்பத்தவரும் எடுத்துக் கொண்ட சிரத்தையும் ஊக்கமும் எவ்வள வினதென்று அளவிடற்கரிதாம். தேக சௌக்கியத்தைச் சிறிதும் பாராட்டாது எம்மன்னர் பிரான் மூடுபனியிலும் மழையிலும் வெயிலி

னும் பல்பொருட் காட்சியை நடத்த உத்தேசித்திருந்த ஸ்தானத்திற்குப் பன்முறை சென்று அதன்பொருட்டு நடைபெற்ற வேலைகளை அடிக்கடி பார்வையிடுக் காம சபையாரை ஊக்கியது அவர்மாட்டுள்ள பரோபகார சிந்தையை விளக்கிக் காட்டுகின்றது. இளவரசர் இவ்விஷயத்தி லெடுத்துக்கொண்ட சிரத்தை எத்தன்மையதென்று அடுத்த அதிகாரங்களிற் காண்டலாகும்.

உவெம்பிளியில் இவ்விதமான பெரிய பல்பொருட் காட்சியை நடத்தும் விஷயத்தில் இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் எடுத்துக்கொண்ட சிரத்தை மிகப்பெரிது. தொழிலாளிகளாயுள்ள ஆங்கிலேயர் பல்பொருட் காட்சி விஷயத்தில் ஒத்துழைக்கவில்லையென்றும், அவர்கள் ராஜாங்கத்தக்கு விரோதிகளென்றும் சிலர் அபிப்பிராயப்படலாம். இது முற்றிலும் தவறு. தொழிலாளர் ராஜ்ஜிய விஷயங்களைக் குறித்தும், ராஜ்ஜிய முறையைக் குறித்தும், குறை கூறுவதும் இடித்துரைப்பதும் வாஸ்தவமே. அதனால் அவர்கள் விரோதிகளென்று கூறவமையுமா?

பல்பொருட் காட்சி நடப்பதற்குச் சாதனமாயிருந்த பற்பல மாளிகைகளையும் கட்டடங்களையும் கட்டினவர்கள் தொழிலாளிகளே. இங்கிலாந்தில் யுத்தத்தின்பின் ஒருவிதமான உத்தியோகமுமகப்படாது சும்மாவிருந்த பலருக்கு இப்பல்பொருட் காட்சி ஜீவனமார்க்கம் காட்டியது.

---

# இரண்டாம் அதிகாரம்

## பல்பொருட் காட்சியும் அதின் உற்பத்தி விபரமும்

ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் மத்திய ஸ்தானமாயுள்ள இங்கிலாந்தில் பெரியதோர் பல்பொருட் காட்சியை யேற்படுத்தி, ஆங்கிலேய ராஜ்ஜியமடைந்திருக்கும் பராக்கிரமத்தையும் அதின் கைத்தொழிற்றிறமையையும், அதின் பலத்திற்காதாரமாயுள்ள சகலவிதமான சம்பத்துகளையும் உலகினர்க்கு விளக்கிக் காட்டவேண்டுமென்னுமெண்ணம் பிரதமத்தில் காலஞ்சென்ற லார்ட் ஸ்ட்றத்கோனு என்னும் பிர

புவின் உள்ளத்தே உதயமாயிற்று. உடனே அவ்விஷயத்தைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து தீர்மானஞ் செய்யுமாறு மான்ஷன் ஹவுஸ் (Mansion House) என்னும் சிங்கார மாளிகையில் கி. பி. 1913-ம் வருஷம் ஒரு மகா சபை கூடிற்று. ஆங்கிலேய ராஜாங்கத்து மந்திரிமார் ராஜ்ஜிய தந்திர நிபுணர், நீதிபதிபர், நியாயதுரந்தரர், வர்த்தகர், கைத்தொழிலாளர் முதலிய பல்திறத்தவர் கூடிய அம்மகா சபையில் அவ்விதமான பல்பொருட் காட்சி யொன்றை இங்கிலாந்தில் நடத்துவது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் அடுத்த வருஷத்தில் ஐரோப்பிய மகா யுத்தமென்னுங் காரிருட்படலம் ஆங்கிலேய ராஜ்ஜியத்தை மாத்திரமல்ல, உலகம் முழுவதையும் அந்தகாரத்திலாழ்த்தியபோது இவ்விஷயம் சிலகாலம் ஆங்கிலேய பிரபுக்களுளத்தை விட்டகன்றது. இங்கிலாந்து யுத்த விஷயத்தில் ஊக்கங் கொண்டிருந்தமையானே இவ்விஷயத்தைக் கவனிக்கப் போதிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. பின்னர் யுத்தம் முடிவெய்தி, சமாதான மென்னுங் கதிரவன் தன் கிரணங்களைப் பரப்பவே பல்பொருட் காட்சி விஷயமும் பழையபடி வெளியாயிற்று. அகோரமான மகா யுத்தம் நடந்த காலத்தில் இரணகளத்தில் தாய் நாடாகிய இங்கிலாந்தும் அதோடு சம்பந்தப்பட்டுள்ள ராஜ்ஜியங்களும் குடியேற்ற நாடுகளு மொன்றுசேர்ந்து பகையரசினரோடு சமர்புரிந்து ஜயசீலராய் வெளிப்போந்தது அவைகளுக்கிடையேயுள்ள போன்பையும் அநுதாபத்தையும், ஒற்றுமையையும் விளக்கிக் காட்டிற்று. இங்கிலாந்து தனக்கும் தன்னோதிபத்தியத்திற்குமுட்பட்ட மற்றைய ராஜ்ஜியங்கட்கும் இடையேயுள்ள சம்பந்தம் எவ்வளவினதென்றும், தானும் மற்றைய ராஜ்ஜியங்களுமடைந்துள்ள கைத்தொழில் விருத்தியும் பராக்கிரமும் எத்தன்மையதென்றும் யுத்தத்தின்பின் தான் அறியலாயிற்று. யுத்தகாலத்தில் மலைகள் தம்மிடத்தைவிட்டகன்று நீரில் மிதந்து வந்தாற்போலச் சமுத்திரத்திற்றோன்றிய கப்பற் படைகளின் சிறப்பும், பற்பல தேசங்களிலிருந்து வந்து போர்முகத்தே நிரை நிரையாகத் தோன்றிய போர்வீரரின் சிறப்பும், அவர்களணிந்திருந்த பலவகையான உடைகள், ஆயுதங்கள் முதலியவற்றின் சிறப்பும், துப்பாக்கி, பீரங்கி முதலியவற்றின் சிறப்பும், சேனைவீரரையும் அவர்களுக்கு வேண்டிய ஆகாரம் மருந்து முதலியவற்றையும் கொண்டு விரைந்து செல்லும் புகை வண்டி, மோட்டார் வண்டி என்

னுமிவற்றின் சிறப்பும், பழைய புராணங்களிற் கூறப்பட்டுள்ள திரிபுரங்களைபோன்று ஆகாயத்தின்மீதெழுந்து வட்டமிட்டுக் குண்டுப் பிரயோகஞ்செய்த ஆகாய விமானங்களின் சிறப்பும், ஆங்கிலேயருக்கும் அவர்க்குதவியாய் யுத்த பூமியிற்றோன்றிய மற்றைய அரசினர்க்கும் பெரும் வியப்பையும் திருப்தியையுமுண்டாக்கின. இங்கிலாந்தும் அதினேகாதிபத்தியத்திற்குள்ளடங்கிய மற்றைய நாடுகளும் சென்ற ஐம்பது வருஷங்களுள் அடைந்துள்ள நாகரீகம், கைத்தொழில் விருத்தி, சேனுபலம், பராக்கிரமம், செல்வாக்கு முதலியவற்றிற்கு இவையனைத்தும் தக்க உதாரணங்களன்றோ? ஆதலின், உலகத்தின் பல பாகங்களிலும் வியாபித்துப் பலத்து வேரூன்றிய நமது ராஜ்ஜியத்தில் ஆங்காங்கு விளையும் விளைபொருட்களையும் அகப்படும் தாதுவர்க்கங்களையும் கைத்தொழிலின் பயனாய்த் தோன்றும் லக்ஷக்கணக்கான விநோத பொருட்களையும் அதிசயமான யந்திரம் முதலிய தொழிற் கருவிகளையும் நமது ஆங்கிலேய ராஜாங்கவதிகாரிகள் ஒரே யிடத்தில் ஒன்றாய்ச் சேர்த்து உலகமுழுவதும் அதைக் கண்டானந்திக்கவும், ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரோடும் தம் பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிலுள்ள குறைவுகளை நிவாரணஞ் செய்துகொள்ளவும், நிறைவுகளிவையெனக் கண்டு, அவற்றைக் கைக்கொள்ளவும் வேண்டுமென்னும் அபிப்பிராயத்தோடு இவ்வித பொருட் காட்சியொன்றை ஸ்தாபிக்கத் தீர்மானஞ் செய்ததைச் சர்வ ஜனங்களும் தக்க ஏற்பாடென்று அங்கீகரித்தனர்.

ஆகையால் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டியவேற்பாடுகளைச் செய்வதற்காக முதலில் இரண்டு வெவ்வேறு சபைகள் ஏற்படுத்தப் பட்டன. ஒன்றிற்கு லண்டன் நகர பல்பொருட் காட்சி மகா சபை என்றும், மற்றதற்கு ஆங்கிலேய ராஜ்ஜிய பல்பொருட் காட்சி சபை என்றும் பெயர். பின்னர் அவை யிரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து தக்கவாறு பிரயத்தனங்களைச் செய்வது அதிக பயனைத் தருமெனக் கருதி, கி. பி. 1919-ம் வருஷம் அவை யிரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே சபையை ஏற்படுத்தினார்கள். அச்சபைக்கு லார்ட் மோறிஸ் பிரபு சபாநாயகராக நியமனம் பெற்றார். அக்காலத்தில் ஆங்கிலேய மகா மந்திரியாம் ஸ்தானத்தை வகித்த லாயிட் ஜார்ஜ் பிரபு அத்தகைய பல்பொருட் காட்சி யொன்றை நடத்துவதற்கு அனுமதி கொடுத்ததுமன்றி ராஜாங்கத்தார் தம்மாலியன்றமட்டும்

அப்பெரு முயற்சிக்குதவி செய்வதாகவும் உறுதிமொழி கூறினர். பின்னர் இப்பல்பொருட் காட்சி விஷயமாய் வேறொரு பெரிய சபை ஏற்படுத்தப்பட்டது. நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் சிரேஷ்ட குமாரரும் அவருக்குப் பின் திருமுடி புனைந்து எம்மை யாளப்போகின்றவரும் சில வருஷங்களுக்கு முன் நமது பெருந் தேசத்தைத் தரிசித்து நம்மனைவருக்கும் நற்காட்சி தந்து சென்றவருமான உவேல்ஸ் இளவரசர் அம்மகா சபையில் சபாநாயகர் ஸ்தானத்தை வகிக்கத் திருவுளங்கொண்டார். தக்ஷணமே, இளவரசர் அவ்விஷயத்திற் கண்ணுங் கருத்துமுடையவராகி, விசேஷ சிரத்தை யெடுத்துக்கொண்டு இங்கிலாந்திற் பற்பல விடங்களில் இது விஷயமாய் நடத்தப்பட்ட பல சபைகளில் பல்பொருட் காட்சியைக் குறித்தும் அதினால் இங்கிலாந்திற்கும் அதின் ஏகாதிபத்தியத்தினடங்கிய மற்றைய நாடுகளுக்கும் உண்டாகக்கூடிய விசேஷ நன்மைகளைக் குறித்தும், உபந்நியாசித்து ஜனங்களுக்குப் பல்பொருட் காட்சி விஷயத்தில் அதிக சிரத்தையும், ஊக்கமுமுண்டாகும்படி செய்தனர். பல்பொருட்காட்சி விஷயமாய்ச் செய்யப்படும் மிகச் சிறிய பிரயத்தனத்திலும் அவர் மிக்க கண்ணோட்டமுடையவராய் தாமெடுத்துக் கொண்ட பெரிய விஷயம் யாதொரு விக்கினமுமின்றி இனிது முடிதற்பொருட்டுத் தம்மாலான யாவற்றையும் செய்துவந்தனர்.

பல்பொருட் காட்சியை நிறைவேற்றுவதற்கு அவசியம் வேண்டிய திரவியத்தைச் சேகரித்தற்பொருட்டு பின்னரும் மான்ஷன் ஹவுஸ் மகா மண்டபத்தே ஒரு சபை கூடிற்று. இவ்விஷயத்திற்காக ஒரு லக்ஷம் பவுனுக்குக் குறையாமல் கொடுக்கக்கூடியவர்களுடைய உறுதிமொழியைப் பெறுவதே அச்சபையின் நோக்கம். இங்கிலாந்திலுள்ள மந்திரிமார் உயர்தர உத்தியோகஸ்தர், வர்த்தகர், ஸ்தானபதிகள் பிரபுக்கள் முதலிய யாவரும் இவ்விஷயத்தில் மிக்க வனுதாபமுடையவராய் அது நிறைவேறுமாறு அரும்பெருமுதவி புரிந்தனர். இப்பெரு முயற்சியையும் அதின்பொருட்டுச் செய்யப்படும் பிரயத்தனங்களையுமுணர்ந்த காருண்ய சீலராகிய எம் சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மகிபரும் பல்பொருட் காட்சி விஷயத்தைத் தாமாதரிப்பதாகவும், கர்ம சபையார் தங்கள் பிரயத்தனத்தால் ஐந்து லக்ஷம் பவுன் சேகரிக்கும்பட்சத்தில் ஆங்கிலேய ராஜாங்கத்தார் அதற்காக ஒரு லக்ஷம் பவுன் உபகரிக்க ஏற்பாடு செய்வதாகவும் இளவரசர் மூலமா

கத் தெரிவித்தனர். அக்காலத்தில் இந்தப் பல்பொருட் காட்சியை கி. பி. 1923-ம் வருஷம் நடத்தவேண்டுமென்று கருதியிருந்தனர். ஆயினும் அதற்கு வேண்டிய திரவியத்தைச் சேகரிப்பதற்கும் கட்டடங்களை யமைப்பதற்கும் அதிக காலஞ் செல்லுமெனக்கொண்டு அடுத்த வருஷமாகிய 1924-ம் வருஷம் அப்பெருங் காட்சியை நடத்தத் தீர்மானித்தனர். கி. பி. 1921-ம் வருஷம் குடியேற்ற நாடுகளின் மந்திரிமாருக்கென்று இங்கிலாந்திலிடப்பட்ட திருவிருந்தொன்றில் நமது இளவரசர் எழுந்து ஆங்கிலேய ராஜாங்கத்தார் ஆதரவோடு நடத்த உத்தேசித்திருக்கும் பலபொருட் காட்சியைப்பற்றியும் அதன் பொருட்டு இயற்றப்படப்போகிற மகா அரங்கத்தைப்பற்றியும் விரித்துக்கூறி அவ்வித வரங்கம் ஆங்கிலேயர் என்ற பெயரை வகித்துள்ள அனைவருக்கும் மிக்க சந்தஷ்டியைக் கொடுக்குமென்றும் கூறினர். அச்சமயத்தில் ஆங்கு வந்திருந்த ஹியூஸ் என்னும் ஆஸ்திரேலிய மகா மந்திரி இவ்வித பொருட் காட்சிகளால் நாம் நமதாளுகைக்குட்பட்ட பற்பல தேசங்களைப்பற்றி நன்கு பறியலாகு மென்றும், அவற்றின் கல்வி நிலை, கைத்தொழில் விருத்தி, செல்வநிலை, பராக்கிரமம் முதலியவை இவ்வளவென்றளவிட்டறிவதற்குச் சாதனமாகுமென்றும் முக்கியமாய் ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்குட்பட்ட பற்பல ஜாதியார் ஒருவரையொருவர் நன்கறிதற் கேதுவாகுமென்றுங் கூறி இளவரசர் கூறியவற்றை ஆமோதித்தனர். அதன்பின்னர் இளவரசர் பல்பொருட் காட்சி விஷயமாய்ப் பெருமுயற்சி செய்யத் தலைப்பட்டனர். அக்காலத்தில் இந்தியாவுக்குச் செல்ல உத்தேசித்திருந்த அவர் பிரித்தானியா சீமையிலுள்ள பற்பல நகர சங்கத் தலைவர்கட்குத் திருமுகமனுப்பி இவ்விஷயத்தில் முயற்சி செய்யுமாறு தூண்டினர். அச்சமயத்தில் அவர் இப்பெருங் காட்சி மேற்கூறிய வாறு பயன்படுவதன்றி மகா யுத்தத்தின்பின் வேலையில்லாது வீணே காலங்கழித்துத் தரித்திர நிலையை யடைந்துள்ள பல்லாயிரம் ஜனங்கட்குப் பெரிய பாக்கியமாகுமென்றும் எடுத்துக் காட்டினர். ஆகையால் பல்பொருட் காட்சிச் செலவுக்கென்று பணஞ் சேகரிக்கச் செய்த முயற்சி விரைவிற் பயன்தருவதாயிற்று. இரண்டு மாசங்களுள் கிளாஸ்கோ நகரவாசிகள் தாம் 105,000 பவுன் உபகரிப்பதாக உறுதிமொழி கூறினர். இன்னொன்று தம் பெயரைத் தெரிவியாத ஒரு பிரபு 80,000 பவுன் அனுப்பிவைத்தனர். இவ்விதமாய் பணம்

சேர்ந்தது கர்ம சபையாருக்கும் இளவரசருக்கும் மிக்க தைரியத்தைக் கொடுத்தது. ஆகையால் இந்தத் தொகையை ஆதாரமாகக்கொண்டு பல்பொருட் காட்சி சம்பந்தமான வேலைகளை ஆரம்பிக்கிறதென்று தீர்மானமாயிற்று. இச்சமயத்தில் ஆஸ்த்திரேலிய குடியாசினர் தங்கள் தேசத்து வர்த்தகர் இப்பெரும் பல்பொருட் காட்சி வைபவத்திற் சேர்ந்து தங்கள் வர்த்தகத்தை விருத்தி செய்யும்பொருட்டு 250,000 பவுண் செலவு செய்ய ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர். இங்கிலாந்திலுள்ள லாயிட் வர்த்தக சங்கத்தார் ஆங்கிலேய வர்த்தகரின் பொருட்டு தாங்கள் 100,000 பவுணுக்கு உத்தரவாதமென்று உறுதிமொழி கூறினர். இவை, பிரித்தானியா ராஜ்ஜியத்திற்கு வெளியே சமுத்திரங்கட்கப்பால் ஆங்கிலேய வேகாதிபத்தியத்திற்குட்பட்ட மற்றைய நாடுகளும் இப்பெரு முயற்சியிற் கையிட்டு அது செவ்வனே நடைபெற்றுக் கருதிய பயனைத் தருமாறு ஒத்துழைக்க அந்நாடுகளை ஏவின. ஆகையால் அவை ஒன்றின்பின் னொன்றாய் இப்பெரு முயற்சியிற் சேர ஆரம்பித்தன. கீழே காட்டியுள்ள விபரம் இவ்விஷயத்தில் ஒத்துழைத்த முக்கிய நாடுகளெவை யென்றும் அவை எம்மட்டில் ஒத்துழைக்க உறுதிமொழி கொடுத்தனவென்றும் ஒருவாறு காண்பிக்கும்.

| நாடுகள் | பவுண் |
|---|---|
| இந்தியா | 180,000 |
| கனடா | 208,333 = 1,000,000 டாலர் |
| ஆஸ்த்திரேலியா | 200,000 |
| நியூஸீலாந்து | 80,000 |
| ஆபிரிக்கா | 223,500 |
| ரேடீசியா தீவுகள் | 30,000 |
| நியூவவுண்லாந்து | 50,000 |
| பர்மா | 80,000 |
| மால்ட்டா | 8,000 |
| மேற்கிந்திய தீவுகள் | 29,000 |
| லீவார்ட் தீவுகள் | 1,000 |

| நாடுகள் | பவுண் |
|---|---|
| உவின்ட்வர்ட் தீவுகள் | 1,600 |
| மலேயா நாடுகள் | 60,000 |
| சராவாக் | 6,000 |
| பலஸ்தீனு | 6,000 |
| சைபிறஸ் | 3,000 |
| பர்முடா | 7,000 |
| பிரிட்டிஷ் கயானு | 20,000 |
| இலங்கை | 23,000 |
| வீஜி தீவு | 4,000 |
| ஜீபிரல்ட்டர் | 1,000 |
| ஹொங் கோங் | 55,000 |

இவ்வாறு பற்பல நாடுகள் பல்பொருட் காட்சியின் பொருட்டுச் செலவுசெய்வதாய் ஒப்புக்கொண்ட தொகை குறிப்பிடப்பட்டிருப் பினும், செலவு அவ்வளவில் நில்லாது அதிகப்பட்டமையால், இப் பெருங்காட்சியால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு நேர்ந்த செலவு இந்நாடுகளனைத்தும் செலவு செய்ய ஒப்புக்கொண்ட மொத்தத் தொகையைக்காட்டிலும் பன்முறை அதிகமாய்விட்டது. திருஷ் டாந்தமாக இந்தியா 180,000 பவுண் செலவு செய்ய உறுதிமொழி கூறினும், வாஸ்தவத்தில் அந்தத் தொகைக்குச் சமமான பின்னு மொரு தொகையை இந்திய மாகாணங்களிலுள்ள ஜனங்களும் சித் றாசரும் செலவழித்தார்கள். அவ்வண்ணமே, வர்த்தகத்தை விருத்தி செய்யும் நோக்கமாகவும் தத்தம் விளைபொருட்களையும் கைத் தொழிற் சரக்குகளையும் உலகினரறிய விளம்பரப்படுத்தல் வேண்டு மென்னும் நோக்கமாகவும் இப்பெருங்காட்சியிற் சேர்ந்த பல நாட் டார் தத்தம் யுத்திக்கும் புத்திக்கு மியைந்தவாறு பணத்தை ஏதேஷ்ட மாகச் செலவுசெய்தனர். பல்பொருட்காட்சி வைபவம் கணக் கற்ற திரவியச் செலவினையும் பிரமாண்டமான அளவினையுமுடைய தாயிற்று. இத்தகைய பெரியதோர் பல்பொருட் காட்சியை, நாற்

றிருபதுபேரை அங்கத்தவராய்க்கொண்ட கர்ம சபையார் எவ்வாறு நிர்வகித்து நடத்துவதென்னுஞ் சந்தேகம் கர்ம சபையாருக்குண்டாயிற்று. ஆகையால் அவர்கள் நன்றாயாலோசித்து, பல்பொருட் காட்சியை நடத்துவதற்கும் அதற்குவேண்டிய வேற்பாடுகளைச் செய்வதற்கும் ஐந்துபேர்கொண்ட ஒரு நிர்வாக சபையை ஏற்படுத்தி, சகல அதிகாரங்களையும் அச்சபைக்களித்தனர்.

இவ்விதமாய் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக சபைக்கு லார்ட் ஸ்டீவின்ஸன் சபா நாயகராகவும் ஸர் டிராவர்ஷ் கிளார்க் பிரதி சபா நாயகராகவும் நியமனம் பெற்றனர். பிரதி சபாநாயகர் தமக்குள்ள முழுக்காலத்தையும் இப்பொருட்காட்சிக்காகச் செலவிடவேண்டியதென்றும் அவருக்கு எவ்விஷயத்திலும் பூரண அதிகாரமும் போதிய சம்பளமும் கொடுக்கப்பட வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் கிளார்க் பிரபுவே தலைமையதிகாரம் வகித்துச் சகல காரியங்களையும் சிறப்புற நடத்திவந்தார். இவ்விருவரோடுகூட, ஸர் ஹென்றி மெக்மஹன், ஸர் சார்லீஸ் மெக்லியட், ஸர் ஜேம்ஸ் அலின் என்னும் மூன்று பிரபுக்கள் நிர்வாக சபையினங்கத்தவராக நியமனம் பெற்றனர். ஆகையால் இப்பெருங்காட்சிக்கு வேண்டிய கட்டடங்கள் தெருக்கள் முதலியவற்றை விரைவில் முடிக்கவேண்டிய பிரயத்தனங்களை நிர்வாக சபையார் செய்ய ஆரம்பித்தனர்.

இவ்விஷயத்தில் மகாராணியும் நமது சக்கரவர்த்தினியுமாகிய மேரி ராணி எடுத்துக்கொண்ட பிரயாசை கொஞ்சமல்ல. இப்பெருங்காட்சிக்குதவிசெய்யவென்று ஆங்கிலேய சீமாட்டிகள் பலர் சேர்ந்து ஸ்தாபித்த ஸ்திரீகள் சபையொன்றிற்கு எம்ராணி சபாநாயகமாய் வீற்றிருந்து தம்மாலியன்றளவு அரும்பெருமுதவி புரிந்திருக்கின்றார்கள். மகாராணி சிற்சில சமயங்களில் உவெம்பிளி சிங்கார வனத்திற்குச் சென்று அங்கு வேலை நடக்குங்காலத்தில் அவ்வேலைகளைப்பற்றிச் சொன்ன குறிப்புரைகளும், வினவியறிந்த விஷயங்களும் தொழிலாளருக்கு மிக்க ஊக்கத்தைக் கொடுத்தன. இளவரசியாம் மேரியும், அவர் சகோதாராகிய யோர்க் பிரபுவின் மனைவியும் வெவ்வேறு ஸ்திரீகள் சபைகளுக்குத் தலைமையாம் பதவியை வகித்து, பல்பொருட் காட்சிக்கு, ஸ்திரீகளின் கைத்தொழிற் பொருட்களைச் சேகரித்தனுப்பி அதில் தமக்குள்ள அனுதாபத்தைக்

காட்டினர். இவ்விதமாய் நமது அரசரும் அவர் குடும்பத்தவரும் இப்பொருட்காட்சி விஷயத்திலெடுத்துக்கொண்ட சிரத்தையே அது பலரும் கருதியவாறு நற்பயன் தந்து மிக்க பிரசித்தி பெற்றதற்குக் காரணம்.

பல்பொருட்காட்சி நிர்வாகசபையார் முதலிலெடுத்துக்கொண்ட விஷயம் அப்பெரும் காட்சி வைபவத்தைக் குறைவற நடத்துவதற்கேற்ற ஸ்தானத்தைத் தேர்ந்தெடுப்பதாம். அந்த ஸ்தானம் மிக்க விஸ்தீரணமுடையதாயும் அக்காட்சியைக் கண்டுகளிக்க வருவோர் எளிதிற் சென்றடையக்கூடியதாயும், புகைவண்டிப் பாதையுடையதாயும், வேண்டுமானால் பின்னும் பல புகைவீதிகளையும் மோட்டார்வண்டி, குதிரைவண்டி முதலியவைகள் தாராளமாய்ச் செல்வதற்கேற்ற தெருக்களையும் பல கட்டடங்களையும் விநோத மாளிகைகளையும், களியாட்டு விநோத வேடிக்கை முதலியவற்றை நடத்துவதற்குத் தகுந்த அரங்கங்களையும் அமைப்பதற்கேற்ற விசாலமான பூமியாயும் இருத்தல் வேண்டுமென்பது அவசியம். மேலும் அந்த ஸ்தானம் கட்டடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய சாமான்களை எளிதிலும் விரைவிலும் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடியதாயிருக்கவேண்டுமென்பதொரு விஷயம். அங்கு லக்ஷம் லக்ஷமாய் வந்துகூடும் ஜனங்கள் உண்பதற்கு வேண்டிய பலவிதமான ஆகாரங்களைத் தயார்செய்வதற்கு வேண்டிய போஜனசாலைகளை அமைப்பதற்கும் அவர்களுடைய உபயோகத்திற்கு வேண்டிய ஜலத்தைச் சேகரித்து வைப்பதற்கும் தக்க ஸ்தானமாயிருக்கவேண்டுமென்பது பிறிதோர் விஷயம். இப்பல்பொருட் காட்சியை முன்னிட்டும் சொந்தலாபத்தை யுத்தேசித்தும் அங்கு ஏற்படும் பாட்டுக் கச்சேரி, ஆட்டக் கச்சேரி, படக்காட்சி (Cinema), பொம்மையாட்டம் முதலிய வேடிக்கையாட்டங்களை நடத்துவதற்கும் போதியவிடம் வேண்டியதாயிருந்தது.

இப்பல்பொருட் காட்சியின் நோக்கம் மிகவும் அற்புதமானது. வர்த்தகத்தை விருத்திசெய்ய வேண்டுமென்பதும் இங்கிலாந்திற்கும் அதனேகாதிபத்தியத்திற்குட்பட்ட ராஜ்ஜியங்கட்கு மிடையேயுள்ள பந்தத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்பதும், அவையனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுடையவையாகச் செய்யவேண்டுமென்பதும், ஆங்கிலேய கொடிபறக்கும் சகல தேசங்களிலுமுள்ள

சமஸ்த ஜனங்களும் ஒரேயிடத்திற் சந்தித்து ஒருவரோடொருவர் ஐக்கியமாகி, ஒரு தேசத்தாருக்குத் தெரியாத விஷயங்களை மற்றத் தேசத்தாரிடத்திலிருந்து கற்றுக்கொண்டு இவ்விதமாய் விருத்தியடைந்து தனதானிய சம்பத்துடையவராய் புகழுடன் வாழவேண்டுமென்பதே இதின் நோக்கம். இது ஒரு குடும்பத்தில் சாதாரணமாக நடக்கும் விருந்தேபோல்வது. பிரித்தானிய ராஜ்ஜியமே விருந்துடைத் தலைவனாகவும் அதனரசாட்சிக்குட்பட்டுச் சமுத்திரங்கடப்பால் செழித்தோங்கி வளரும் பற்பல ராஜ்ஜியங்களும் குடியரசு நாடுகளுமே விருந்தாளிகளாகவும் கருதற்பாலன.

பல்பொருட்காட்சி ஸ்தானம் லண்டன் நகரத்திற்குச் சமீபமாயிருக்கவேண்டுமென்பது நிர்வாக சபையாருடைய முக்கியமான நோக்கம். ஆகையால் அவர்கள் லண்டன் நகரத்திற்குச் சமீபமாயுள்ள பற்பலவிடங்களையும் ஆராய்வாராயினர்.

லண்டன் நகரம் உலகத்தின் முக்கிய நகரத்திலொன்றுதலானும், ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் ராஜதானியாதலானும், ஏகச்சக்ராதிபதியாய் நம்மையாண்டுவரும் ஜார்ஜ் மன்னரின் வாசஸ்தலமாயும் வர்த்தகத்திற் சிறந்த பட்டணங்களுக்கு நடுநாயகமாகவும், சகலவிதமான பெருமுயற்சிகட் கிருப்பிடமாயிருத்தலானும், நிர்வாகசபையார் தேர்ந்தெடுக்கும் ஸ்தலம் அந்நகரத்திற்கு சமீபமாயிருக்கவேண்டுமென்பது முக்கியமான விஷயம். அங்கு வசிக்கும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மற்றொருவர் சகாயமின்றி இத்தகைய பொருட்காட்சியொன்றைத் தாமே ஏற்படுத்தி நடத்த வல்லவர்கள். அவர்கள் இப்பெருமுயற்சியில் ஒத்துழைத்தாலன்றி அது சிறப்புற நடைபெறாதென்பது பொதுஜன அபிப்பிராயம்.

இங்கிலாந்தில் லண்டன் நகரத்திற்குச் சமீபமாயுள்ள அநேக சிங்காரவனங்களும் உத்தியானங்களுமுண்டு. ஆயினும் நாம் மேற்கூறிய லக்ஷணங்களனைத்தும் ஒருங்கேயமையப்பெற்ற ஸ்தானம் கிடைப்பதரிது. ஆகையால் நிர்வாக சபையார் பல விஷயங்களையும் நன்றாயாலோசித்து உவெம்பிளி சிங்காரவனமே தக்க ஸ்தானமெனத் தீர்மானித்தனர்.

பல்பொருட்காட்சி சம்பந்தமான வேலைகள் உவெம்பிளியில் கி. பி. 1922-ம் வருஷம் ஆரம்பமாயின. அதே வருஷம் ஜனவரிமீ 10உ யோர்க் பிரபு மண்வெட்டி கைக்கொண்டு பூமியை வெட்டித்

தமது திருக்கரத்தால் பிரமாண்டமான அவ்வேலையை ஆரம்பித்தனர். அந்நாள்முதற்கொண்டு உவெம்பிளி சிங்காரவனத்தில் பற்பல சிங்கார மாளிகைகள் எழும்பலாயின.

உவெம்பிளியில் பல்பொருட் காட்சியொன்று நடக்கப்போகிறதென்னும் சமாச்சாரம் ஆங்கிலேய ராஜ்ஜியமெங்கும் பரவியது. உடனே ராஜ்ஜியத்திற்குட்பட்ட கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் தாமும் அவ்விஷயத்தில் ஒத்துழைப்பதாகவும், தங்கள் காட்சிப்பொருட்களைக் காட்டுவதற்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டிக்கொள்வதற்கு போதியவிடம் தங்களுக்கு வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் காகிதங்கள் மூலமாகவும் தந்திகள் மூலமாகவும் விண்ணப்பஞ்செய்துகொண்டன. அவ்வாறே பலநாடுகள் இடம் பெற்றுச் சிறந்த மாளிகைகளைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தன. அவ்வாறு இப்பெரும் பல்பொருட்காட்சியில் ஒத்துழைத்த நாடுகளெவை யென்றும் அவற்றின் முக்கியமான காட்சிப்பொருட்கள் எவையென்றும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாதலால் அவற்றைக் குறித்துச் சுருக்கிச் சொல்லுவோம்.

கனடா. Canada. இது அமெரிக்காவில் ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட நாடு. இது சுமார் ஆறு ஏக்கர் விஸ்தீரணமுடைய பூமியில் மாளிகையொன்றை இயற்றி தன்னுடைய காட்சிப் பொருட்களைப் பலருங் கண்டு களிக்குமாறு பரப்பிவைத்தது. கனடா கோதுமைக்கும் விவசாயத்திற்கும் பேர்போனது. ஆகையால் அது தன்னுடைய மாளிகையிலுள்ள பிரதானமான மண்டபத்தைத் தானியங்களாலும் புற்களினாலும் அலங்கரித்துத் தன்னுடைய நோக்கம் விவசாய விருத்தியென்பதைக் காட்டிற்று. கனடாதேசத்தில் புகைவீதிகள் அடைந்திருக்கும் விருத்தியைக் காட்டுவதற்காகத் தனித்தனியே இரண்டு வேறு மாளிகைகளையியற்றி அவற்றில் கனடாவிலுள்ள இரண்டு பிரபலமான புகைவீதிச் சங்கத்தாருடைய பலவிதமான வண்டிகளின் மாதிரிகளை அது காண்பித்தது. கனடாவிலிருந்து வந்த காட்சிப்பொருட்களாவன: பொன், வெள்ளி, செம்பு, வெள்ளைச்செப்பு, அஸ்பெஸ்டாஸ் முதலிய தாதுவர்க்கங்களும், பலவகையான யந்திரங்களும், மோட்டார் வண்டிகளும் இரும்பினாலும் எஃகினாலும் செய்த பலவிதமான சாமான்களும் காகிதத்தினுசுகளும், றப்பர் சாமான்களும் பட்டு வகைகளுமே.

வீட்டுச்சாமான்கள் செய்வதிலும் கனடா பிரசித்திபெற்ற தேசம். ஆகையால் கனடா மாளிகையிலுள்ள நாலு மண்டபங்களில் சகலவித மான வீட்டுச்சாமான்களும் ஜோடித்து வெகு அழகாய் வைக்கப்பட் டிருந்தன.

தகரடப்பிகளிலடைத்துப் பத்திரம்பண்ணப்பட்ட மீன்கள், மாமி சங்கள், பழதினுசுகள் முதலிய பலவகையான ஆகாரங்கள் அங்கு விசேஷமாய்க் காட்டப்பட்டன. கனடா தேசத்திலிருந்து உவெம் பிளிக்குத் தருவிக்கப்பட்ட பலவிதமான பழங்கள் சிறிதளவாவது கெட்டுப்போகாமல் மிகவும் புதியனவாகத் தோன்றின.

கனடா மாளிகையில் காட்டப்பட்ட இரண்டு காட்சிப்பொருட் கள் மிகவும் அருமையானவை. கனடாதேசத்தவர்கள் வெண் ணெய் வர்த்தகத்தில் பேர்போனவர்கள். ஆகையால் அவர்கள் நமது இளவரசர் குதிரைமேலிருக்கும் பாவனையாக வெண்ணெயால் ஒரு உருவம்செய்து தங்கள் மாளிகையில் நிறுத்தியிருந்தார்கள். இது ஒன்று; மற்றது, பான்டிங் என்னும் அமெரிக்கா தேசத்து வைத்திய பண்டிதர் நீர் ரோகத்திற்குப் பரம ஔஷதமாகிய இன்சுலின் என் னும் மருந்தைக் கண்டுபிடித்து அதின் குணங்களைப்பற்றி உபந்நியா சித்த டொறென்டோ சர்வகலாசாலையின் மாதிரியொன்று. இந்த இரண்டு காட்சிப்பொருட்களையும் ஜனங்கள் விசேஷமாய்க் கண்டு ஆனந்தித்தார்கள்.

ஆஸ்திரேலியா. Australia. ஆஸ்திரேலியதேசத்து மாளிகை ஐந்தரை ஏக்கர் விஸ்தீரணமுடையது. அதற்கு அநேக வாயில்க ளுண்டு. அவ்வாயில்களுக்கு ஆஸ்திரேலியா தேசத்திலுள்ள பிரதான மான பெயர்களே இடப்பட்டன. பிரதம வாயிலுக்கு கான்பிரா வாயில் என்று பெயர். ஆஸ்திரேலியா பெரும்பாலும் மாதிரிகள் மூலமாக தன்னுடைய பெரிய செல்வத்தைக் காண்பித்தது. பலவித மரங்களினாற்செய்த வீட்டுச்சாமான்கள், பொன், வெள்ளி, ஈயம், செம்பு, துத்தநாகம் முதலிய தாதுவர்க்கங்கள், கோதுமை, பருத்திப் பஞ்சு, புகையிலைமுதலிய விளைபொருட்கள், பலவிதமான பழத் தினுசுகள், பழவற்றல்கள் முதலிய அநேக காட்சிப்பொருட்கள் ஆஸ்திரேலியா மாளிகையில் நிறைந்திருந்தன. காட்டிலிருந்து அகப்படும் பலவகையான மரங்கள், பலவகையான கோழிகள்,

தேனீக்கள் ஒரு புறத்திலும் பலவகையான உருவங்கள் இன்னொரிடத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

பிரமாண்டமான பாலடைக்கட்டி ஒன்று மாளிகையின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்தது. ஆஸ்திரேலியா இதுவரையிலும் செய்த பாலடைக்கட்டிகளுள் அதுவே பெரியது. இவையன்றி ஆஸ்திரேலியாவிற் செய்யப்படும் பலவிதமான சாராயதினுசுகள், பனிக்கட்டியிலிடப்பட்டுப் பத்திரஞ்செய்யப்பட்ட பலவகையான மீன்கள், படங்கள், பலவகையான துணிகள், உடுப்புகள், தோற்சாமான்கள், கண்ணாடிச்சாமான்கள் எங்கே பார்த்தாலும் கடல்போல் விளங்கின. அவை ஆஸ்திரேலியா மற்ற தேசங்களுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததல்ல வென்பதைக் காட்டின.

**நியூஸிலாந்து.** New-Zealand. இம்மாளிகையின் விஸ்தீரணம் இரண்டே முக்கால் ஏக்கர். அதின் முன்புறத்தில் நியூஸிலாந்திலுள்ள பலவிதமான செடிகள் நாட்டப்பட்ட அலங்காரமான தோட்டமொன்றுண்டு. இங்கு காட்டப்பட்ட விசேஷமான காட்சிப்பொருட்கள், வேட்டையாடும்போது கொல்லப்பட்ட மிருகங்களின் தலைகள், பலவிதமான படங்கள், சித்திர வேலைகள், பலவகையான மரங்கள், வெண்ணெய், பாலடைக்கட்டி, பலவகையான மீன்கள், பழ தினுசுகள், தானியவகைகள் முதலியன. நியூஸிலாந்தில் ஆங்கிலேயர் குடியேறி சுமார் எண்பது வருஷங்கள்தான் ஆயின. ஆயினும் இவ்வளவு சீக்கிரத்தில் அது மற்றைய நாடுகளுக்கிணையான நாகரீகமுடையதாயிருப்பது வியக்கத்தக்கது.

**தென் ஆபிரிக்கா.** South Africa. தென் ஆபிரிக்காவுக்சென்று உவெம்பிளி சிங்காரவனத்தில் விடப்பட்ட பாகம் சுமார் 216,000 சதுர அடி விஸ்தீரணமுடையது. தென் ஆபிரிக்கா மாளிகையில், ரோடீஸியாவும், சுவாஸிலாந்தும், சேயின்ட் ஹெலினு, ஆஸென்ஷன் தீவுகளும் தத்தம் காட்சிப் பொருட்களைக் காட்டுவனவாயின. மாளிகையின் வாசலின் மேற்புறத்தில், எலிஸபெத் மகாராணி காலத்தில் ஆபிரிக்காவுக்கு முதலில் பிரயாணஞ் செய்த ஜான் வான் றீபீக் என்னும் யுத்த வீரனுடைய பிரதிமையொன்று நிறுத்தப்பட்டிருந்தது. மாளிகைக்கு வெளியே அடைக்கப்பட்ட மைதானமொன்றில் வெகு அழகான இறகுகளையுடைய தீக்குருவிகள் பல நிறைந்திருந்தன. அவற்றினிறகுகள் ஆங்கிலேய மாதருக்குச் சிறந்த அணியாத

வின், ஸ்திரீகள் விசேஷமாய் அக்குருவிகளைப் பார்த்து மகிழ்ந்தனர். மாளிகையின் உட்புறத்தில் பல தினுசான தீக்குருவி இறகுகள் காட்டப்பட்டன. அவைக்குப் பின்புறத்தில் இன்னொரு மைதானத்தில் மெறினோ என்று ஒருவகையான நாற்பது ஆடுகளை வைத்துக் காண்பித்தார்கள். அந்த ஆடுகளிலிருந்துதான் மோகேர் என்று சொல்லப்படுகிற கம்பளி நூல் அகப்படுகிறது.

மாளிகையின் உட்புறத்தில் டேர்பன், போட் எலிஸபெத் என்னும் அதியற்புதமான துறைமுகங்களின் சிறந்த மாதிரிகள், பல பெரிய கப்பல்கள் அங்கு வந்து சரக்குகளை இறக்குவதையும் ஏற்றுவதையும் தத்ரூபமாகக் காண்பித்தன. அங்குள்ள புகைவீதிகளும் பலவகையான பிரயாண வண்டிகளும் அவற்றிற்குரிய பலவகையான சாமான்களும் மாளிகையின் இன்னொரு மண்டபத்திற் காட்டப்பட்டன.

தென் ஆபிரிக்காவில் பொன்னும், விசேஷமாய் வைரக்கல்லும் அகப்படுகின்றன. அங்கே வைரக்கல் அகப்படும் சுரங்கங்கள் ஏதேஷ்டம். ஆகையால் வைரக்கற்களை அரித்தெடுத்தல், கழுவுதல், தேய்த்து உருவாக்குதல், சாணைபிடித்துப் பட்டையடித்தல், மெருகேற்றுதல் முதலிய பல வேலைகளுக்கு வேண்டிய உபகரணங்கள், யந்திரங்கள் முதலியவைகள் வேறொரு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. இவையன்றி நிலக்கரி, பழதினுசுகள், கம்பளிநூல், தோலாற் செய்த பலவகையான சாமான்கள், கயிறுகள், புகையிலை, சாராயவகைகள் முதலியவைகளும் அங்கு காட்டப்பட்டன.

நியூவவுண்லாந்து. Newfoundland. இதின் மாளிகை சுமார் 6,000 சதுர அடி விஸ்தீரணமுடையது. இங்கு சகலவிதமான தாதுவர்க்கங்களு மகப்படுகின்றமையால் விசேஷமான காட்சிப்பொருட்கள் தாதுவர்க்கங்களே. காகிதம் ஏராளமாய்ச் செய்யப்படுகின்றமையால், யந்திரங்கள் காகிதம் செய்வதுபோல் பல மாதிரிகள் அம்மாளிகையில் வைக்கப்பட்டிருந்தன. கோட் என்று சொல்லப்படுகிற ஒருவிதமான மீன் நியூவவுண்லாந்தில் அகப்படுகிறது. அந்தத் தீவிலுள்ள ஜனங்கள் திமிங்கலம், ஸீல் முதலிய நீர்வாழும் பிராணிகளையும் வேட்டையாடுகிறார்கள். அதனால் அந்தத் தீவாருக்கு ஏராளமான செல்வமுண்டாகிறது. ஆகையால் மீன் பிடிக்கும் கிராமங்களையும் மீன் பிடிப்பதற்கு வேண்டிய உபகரணங்களையும்

காட்டுப் மாதிரிகள் பல அம்மாளிகையிலிருந்தன. இந்தத் தொழிலினு லேற்படுகிற, மீன் எண்ணெயும் வண்டிகளுக்குபயோகமாகும் கொழுப்பும். அம்மாளிகையிலுள்ள விசேஷமான காட்சிப் பொருட்கள்.

பர்மா. Burmah. பர்மா மாளிகை, இந்திய மாளிகைக்கும் தென் ஆபிரிக்கா மாளிகைக்கும் மத்தியி லமைக்கப்பட்டிருந்தது. அதின் விஸ்தீரணம் 76,500 சதுர அடி. உவெம்பிளி சிங்காரவனத்தில் அதுபோலும் கண்ணைக் கவரக்கூடிய கட்டடம் பிறிதொன்றில்லை. மாளிகை பர்மா தேசத்து அரண்மனைபோலும் சாயலையுடையது. அதின் மேற்புறத்தில் ஏழு கொடுமுடிகளுண்டு. அது பெரும்பாலும் தேக்கமரத்தினுற் செய்யப்பட்டது. தேக்கமரத்தில் ஆங்காங்கு செய்துள்ள கொத்து வேலைகள் வெகு அற்புதமானவை.

மாளிகையைச் சுற்றி அழகான தோட்டமும் அதில் புத்த கோயிலொன்றும் புத்த விக்கிரகமும் அமைக்கப்பட்டிருந்தது. அது முற்றிலும் பர்மாவிலேயே பாகம் பாகமாகச் செய்யப்பட்டு, பின்னர் உவெம்பிளியிற் கொண்டுவந்து ஜோடிக்கப்பட்டது. அம்மாளிகையிலுள்ள மூன்று கோபுரங்களிலுள்ள பொன்மயமான மணிகள் காற்றினுல் எப்பொழுதும் அடித்துக்கொண்டே யிருக்கும். அரிசி முதலிய தானியங்கள், பலவகையான மரங்கள், பட்டுகள், குடைகள், விளையாட்டுச் சாமான்கள், சிவப்புக் கற்கள் முதலியன விசேஷமான காட்சிப் பொருட்கள். அங்குள்ள படக்காட்சிச் சாலையில், தேக்கமரக் காடு, பயிரிடும் தொழில், மண்ணெண்ணெய் அகப்படும் பூமிகள், பிரதானமான புகைவீதிகள், இரத்தினச் சுரங்கங்கள் முதலியவற்றின் படங்கள் காட்டப்பட்டன. பர்மா மாளிகையின் வாசலில் பயங்கரமான மிருகங்களின் சொரூபமிரண்டு வைக்கப்பட்டிருந்தன. பர்மாவிலிருந்து தருவிக்கப்பட்ட இரண்டு சிறு யானைகள் மாளிகையின் முன்புறத்திற் சுற்றிக்கொண்டிருந்தமை காட்சி பார்க்கவந்த ஜனங்களுக்கு வெகு விநோதமாயிருந்தது. பர்மா மாளிகையினொரு புறத்தேயுள்ள அரங்கத்தில் பலவிதமான நடன சங்கீத விநோதங்கள் நடந்தேறின.

மால்டா. Malta. மால்டா மாளிகை 24,525 சதுர அடி விஸ்தீரணமுடையது. அது மூன்று மண்டபங்களையும் மேலே சிகரங்களையுமுடையது. முதல் மண்டபத்தில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட

ஆயிரத்தைந்நூறு வருஷங்களில் அங்கு நடந்த சரித்திர சம்பந்தமான பழைய சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது மண்டபத்தில் மத்தியகாலத்திலிருந்த சில வீரருடைய போர்க்கவசங்கள், போராயுதங்கள், பரிசைகள், ஜயசின்னங்கள் முதலியவைகள் விளங்கின. மூன்றாவது மண்டபத்தில், விலையுயர்ந்த லோகவகைகளும், கையினாற் செய்த லேஸ் தினுசுகளும், பலவகையான துணிகளும், புகையிலை, இலவங்கம் முதலியவைகளும் விசேஷமாய்க் காணப்பட்டன.

**மேற்கு ஆபிரிக்கா.** West Africa. இது நைஜீரியா, கோல்ட் கோஸ்ட், சீறலியோன் என்னும் மூன்றையும் அடக்கியுள்ளது. இவை மூன்றும் நாற்புறமும் மதிலாற் சூழப்பட்ட ஒரே ஸ்தானத்தில் தத்தம் மாளிகையைக் கட்டிக்கொண்டன. ஆகையால் மேற்கு ஆபிரிக்கா உவெம்பிளியில், மதில் சூழ்ந்த ஒரு பெரிய பட்டணமாகத் தோன்றிற்று. அந்தப் பட்டணம் 139,100 சதுர அடி விஸ்தீரணமுடையது. நைஜீரியா மாளிகையில், பலவகையான எண்ணெய்கள், மரங்கள், நிலக்கரி, துத்திநாகம் முதலியவைகளே காட்சிப் பொருட்கள். கோல்ட் கோஸ்ட் மாளிகையில், விசேஷமாய்க் காட்டப்பட்டது கொக்கோ. ஆயினும் அங்கு சிலவகையான பட்டுத் துணிகளும், சில பிரதானிகளுடைய பொற் பிடியிட்ட வாள்களும் நூதன சாமான்களும், மரத்தாற் செய்த பெரிய விக்கிரகங்களும் பாத்திரங்களும், பித்தளை, செம்பு, தந்தம் இவைகளாற் செய்யப்பட்ட சாமான்களும் காட்டப்பட்டன. சீறலியோன் மாளிகையில் இஞ்சி, மிளகாய், பருத்திப்பஞ்சு முதலிய விளைபொருட்களும், கோபால் என்கிற பிசினும் அதனாற் செய்யப்படும் வர்ண எண்ணெயும், பலவகையான மரங்களும் காண்பிக்கப்பட்டன. இந்த மாளிகையில் பாரி என்னும் ஒருவகையான முரட்டுத் துணியை நெசவு செய்வதற்காக, பழையகாலத்து மாதிரியான ஒரு தறியை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்தத் தறியில் உவெம்பிளி சிங்கார வனத்தில் அந்தத் தேசத்தவர் நெசவு செய்த பாரி ஒன்று மகாராணிக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது.

**கிழக்கு ஆபிரிக்கா.** East Africa. கிழக்கு ஆபிரிக்கா மாளிகை 16,000 சதுர அடி விஸ்தீரணமுடையது. இந்த மாளிகையின் மத்தியில், வேட்டையாடிக் கொல்லப்பட்ட சில பெரிய மிருகங்களின்

தலை, கொம்பு, தந்தம் முதலிய விநோதப் பொருட்கள் காட்டப்பட்டன. நமது அரசராகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியுடைய இரண்டு அழகான யானைத் தந்தங்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன. காப்பி, ஸிஸ்ஸால் என்னும் ஒருவிதமான நார், பருத்திப்பஞ்சு, யானைத் தந்தம், எண்ணெய்க் குபயோகமான விதைகள், அரிசி, சோளம், பல வகையான மரங்கள், கூடைகள், பாய்கள், கொப்பரு, தென்னை நார்ப்பாய், புகையிலை முதலியவையே விசேஷமான காட்சிப் பொருட்கள்.

தென் றோடீஸியா. Southern Rhodesia. இதற்கென்று விடப்பட்ட பூமி ஐயாயிரம் சதுர அடி விஸ்தீரணமுடையது. இது தன் காட்சிப் பொருட்களைத் தென் ஆபிரிக்கா மாளிகையில் தனக் கென்றமைக்கப்பட்ட சிறந்த மண்டபமொன்றில் காட்டிற்று. விவசாயமும் தாதுவர்க்கங்களைத் தோண்டியெடுப்பதுமே அத்தேசத்தவர்களுடைய விசேஷ தொழில். ஆகையால் சோளம், புகையிலை, பருத்திப்பஞ்சு, கிச்சிலிப்பழம் முதலிய விளைபொருட்களும், பொன், நிலக்கரி, அஸ்பெஸ்டாஸ், குறோம், மைக்கா முதலிய தாதுவர்க்கங்களும் அங்கு காட்டப்பட்டன. இந்த நாட்டவர்கள் ஆடு மாடுகளை வளர்ப்பதில் மிக்க பிரசித்தி பெற்றவர்கள். அதின் பொருட்டு அவர்கள் சம்பாதித்த கீர்த்தி முத்திரைப் பொற்பதக்கங்களும், ஜயசின்னங்களும் மண்டபத்துச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்தன. அவற்றில் ஒரு பொற்பதக்கம் ஆயிரம் கினி விலையுள்ளது. ஸேயின்ட் ஹெலினு, ஆஸேன்ஷன் முதலிய தீவுகளும் தத்தம் காட்சிப் பொருட்களாகிய லேஸ், மணிகள், கயிறுகள், பஞ்சடைத்த பட்சிகள், மிருகங்கள் முதலியவற்றை ஆபிரிக்கா மாளிகையிலேயே வைத்துக் காண்பித்தன.

மேற்கு இந்திய தீவுகள். West Indies. மேற்கிந்திய தீவுகளுக்காக விடப்பட்ட பூமி 49,150 சதுர அடி விஸ்தீரணமுடையது. அதில், மேற்கிந்திய தீவுகளிற் பல தங்களுக்கு மண்டபங்களை ஏற்படுத்திக்கொண்டன. அத்தீவுகளுக்குத் தைரியமாய்ச் சென்று பரிசோதனை செய்தவர்களில், கொலம்பஸ், றேட்னீ என்னுமிருவர் பெயர்களும் முக்கியமானவை. அவர்களில் ஒருவர் பிரயாணஞ் செய்யும்போது இழந்துவிட்ட நங்கூரமொன்று அங்கு வைக்கப்பட்டிருந்தது. பருத்திப்பஞ்சு, கரும்பு, பலவகையான மரங்கள், காக்

காவோ, காப்பி, பனை, கோக்கோ, ஆரோக் கிழங்கு, கொப்பரு, ஜாதிக்காய், சோளம் முதலிய விளைபொருட்களும், அழுக்காமை யோடு, பறக்கிற மீன், தேன், சர்க்கரை, மாச்சாமான் முதலியவை களும் அத்தீவுகளின் விசேஷ காட்சிப் பொருட்கள்.

மலேயா. Malaya. மலேயாவுக்கென்று குறிக்கப்பட்ட விடம் 97,500 சதுர அடி விஸ்தீரணமுடையது. மலேயா மாளிகை யின் விஸ்தீரணம்மாத்திரம் 30,000 சதுர அடி. காடுபடு திரவி யம், மச்ச வகைகள், தாதுவர்க்கங்கள், விளைபொருட்கள், சித்திர வேலைகள் முதலியவைகளே விசேஷமான காட்சிப் பொருட்கள். ஆகையால் பலவகையான மரங்களும், பொன், நிலக்கரி, தத்திநா கம் முதலிய தாதுவர்க்கங்களும், ஜிகினு வேலை செய்த பட்டுகளும், பொன், வெள்ளிச் சாமான்களும், அரிசி, காப்பி, தேங்காய், பாக்கு வாசனைத் திரவியங்கள் முதலியவைகளும், றப்பர் தினுசுகளும் அங்கு காட்டப்பட்டன.

சரவாக். Sarawak. இதன் மாளிகை 2,400 சதுர அடி விஸ் தீரணமுடையது. இங்கு தாதுவர்க்கங்களும், எண்ணெய் தினுசு களும் நிலக்கரியும் விசேஷமான காட்சிப்பொருட்கள். எண்ணெய் எடுக்கும் கிணற்றைப்போலும் உருவமொன்று அங்கு வைக்கப்பட் டிருந்தது. சரவாக், ஜவ்வரிசிக்குப் பேர் போனது. ஜவ்வரிசி செய்யும் தொழிற்சாலை ஒன்றின் மாதிரியும், ஜவ்வரிசி தினுசுகளும் அங்கு காட்டப்பட்டன. உலகத்தின் பெரும்பாகத்திற்கு வேண்டிய ஜவ்வரிசி இங்கிருந்துதான் செல்லுகிறதென்று நம் அரசர் அம்மாளி கைக்குச் சென்றபோது அறிந்து மிக்க ஆச்சரியமடைந்தன ராம். ஆயுதங்கள், செம்பு, பித்தளை முதலியவற்றுற் செய்த சாமான் கள், மீன் பிடிக்கும் உபகரணங்கள் முதலிய பல கைத்தொழிற் பொருட்கள் அம்மாளிகையை நிரப்பின. இங்கு முப்பதடி நீள முள்ள பைதன் என்னும் மலைப்பாம்பொன்று பஞ்சடைத்து உயி ருள்ள பாம்புபோல வைக்கப்பட்டிருந்த காட்சி பலரை அம்மாளி கைக்கு இழுத்தது.

சைப்பிறஸ். Cyprus. இந்தத் தீவுக்கென்று குறிக்கப்பட்ட விடம் 1,500 சதுர அடி விஸ்தீரணமுடையது. மிகவும் சேர்த்தி யான சமுக்காளங்கள், பலவர்ணமுடைய தோரணங்கள், கடற்பஞ் சுகள், மிகவும் மெல்லிய பட்டுத் துணிபோல் மெதுவான ஆட்டுக்

குட்டித் தோல்கள், பட்டுத்திணுசுகள், பலவகையான மரங்கள், மரச் சாமான்கள், மண் பாண்டங்கள், பொன் வெள்ளிச் சாமான்கள், வாசனைத்திரவியங்கள், தேன் முதலியன ஸைபிரஸ் தீவின் முக்கிய மான காட்சிப் பொருட்கள்.

பலஸ்தீனு தேசம். Palestine. பலஸ்தீனு நாடு நேராய் ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்கு உட்பட்டதாயில்லாவிட்டாலும், ஒரு வாறு ஆங்கிலேயர் அதிகாரத்திற்கடங்கிய அரசனுல் ஆளப்படுவதா லும், பரிசுத்த பூமியென்று கிறிஸ்தவ சமயத்தவரால் கொண்டா டப்படுவதாலும் அந்நாடும் இப்பல்பொருட் காட்சியில் ஒத்துழைக்க வேண்டியதாயிற்று. மிக்க அழகாய் ஜோடிக்கப்பட்டிருந்த அம் மாளிகையில், கிச்சிலிப் பழம், திராக்ஷப்பழம், புகையிலை முதலிய விளைபொருட்களும் பலஸ்தீனு நாட்டுத் திராட்சாசமும் உப்பு, மா, எண்ணெய் முதலிய கைத்தொழிற் பொருட்களும் நிறைந்திருந் தன. ஓமர் மஸூது, சாலோமோன் ஹேறட், என்னும் பழைய காலத்து அரசருடைய கோயில்கள், கிறிஸ்தவ வேதத்திலுள்ள பழையேற்பாட்டிற் சொல்லப்பட்ட கூடாரம் (Tabernacle) என்னுமிவைகளைப்போலச் செய்து அங்கு வைத்திருந்த மாதிரி கள் கிறிஸ்தவர்களுடைய பக்தி வளர்ச்சிக்கும் பெருமதிப்புக்கும் உரியவையாயின. நேபுகாத்நேச்சர் என்னும் பழையகாலத் தரசன் தன்னைச் சகலவிதமான தீமையினின்றும் காத்தற் பொருட்டுத் தன் கையிலணிந்திருந்த கவசமொன்று பலஸ்தீனு தேசத்தின் விசேஷ காட்சிப் பொருளாயிற்று. அது மனுஷனு டைய கண்ணைப்போல வெட்டி உருவாக்கப்பட்டதோர் மாணிக்கக் கல்லு. இப்பல்பொருட் காட்சியின் ஞாபகார்த்தமாக, யோர்தான் நதியின் தீர்த்தமும், ஆஸ்கீலன் நகரத்தைத் தோண்டினபோது அகப்பட்ட ரோமருடைய பாத்திரங்களின் உடைந்த துண்டுகளும், யூதேயா நாட்டு மலைகளிலுள்ள காய்ந்த புஷ்பங்களும், கலிலேயாக் கடலிலுள்ள சிப்பிகளும், மோரியா மலையின் மண்ணும் அடங்கின பெட்டிகள் பல, பலஸ்தீனு மாளிகையில் விற்பனைக்குத் தயாரா யிருந்தன. இந்தப் பெட்டியைக் காட்சி பார்க்கும்பொருட்டு உவெம்பிளிக்கு வந்த கிறிஸ்தவர்களில் அநேகர் மிகுந்த பக்தியோடு வாங்குவாராயினர்.

**பிரிட்டிஷ் கயானு.** British Guiana. இதின் காட்சிப்பொருட்கள் மேற்கிந்திய தீவுகளின் மாளிகையில் வைக்கப்பட்டிருந்தன. இந்த காட்டில் சுமார் எழுநூற்று நாற்பதடி உயரத்திலிருந்து ஜலம் விழுகிற அதிசயமான நீர்வீழ்ச்சியொன்றுண்டு. உலகத்திலுள்ள பல நீர்வீழ்ச்சிகளில் இதுவே மிகவும் உயரமானது. இந்த நீர்வீழ்ச்சியைக் காட்டும் மாதிரியொன்று இங்கே காட்டப்பட்டிருந்தது. இங்குள்ள ஒரு வகையான மரம் மிகவும் உறுதியானது. ஆகையால் அந்த மரமும் அதினுற் செய்யப்பட்ட சாமான்களும் விசேஷமாய் இங்கு தோன்றின. வைரக்கல் அங்கு ஏராளமாயகப்படுகிறது. வைரம் விளையும் நிலங்களையும், வைரமெடுக்கும் குழிகளையும், வேலை செய்யும் விதத்தையும் காட்டும் மாதிரியொன்று பலரைக் கவர்வதாயிற்று. பலவகையான பிசின்கள், பொன், எண்ணெய்கள், குங்கிலியம், சர்க்கரை முதலியவை விசேஷமான காட்சிப்பொருட்கள்.

**இலங்கைத் தீவு.** Ceylon. இலங்கை மாளிகைக்காக விடப்பட்ட ஸ்தானம் 50,250 சதுர அடி விஸ்தீரணமுடையது. இலங்கை மாளிகை, புத்தனுடைய பல்லை வைத்துப் பிரதிஷ்டை செய்வதற்காகக் கண்டியிற் கட்டப்பட்டிருக்கிற விநோதமான கோயிலைப்போல இயற்றப்பட்டுள்ளது. உள்ளே சென்று பார்த்தால் இலங்கையின் உண்மையான அழகு புலப்படும். கட்டடத்தினழகு எடுத்துரைக்கும் பான்மையதன்று. பற்பல வாயில்களையுடையதாய், மணிபோலும் சாயலையுடைய கோபுரம் அமையப் பெற்று, எப்புறமும் சாளரங்களும் அழகிய தோரண வாயில்களும் விளங்க தேவ நிர்மாணம் போலும் சிறந்த அக்கட்டடத்தின் உட்புறத்தே மதித்தற்கரிய பல வகையான மாணிக்கக் கற்களும், முத்துக்களும் விளங்கினமையால் இலங்கை மாளிகை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பொக்கிஷசாலை என்று கூறுதல் தவறாகாது. அங்கு வைக்கப்பட்டிருந்த இரத்தினங்கள் 75,000 பவுன் விலையுள்ளவை. தனிக் கற்கள் சில ஒவ்வொன்று 20,000 பவுண் விலையுள்ளது. அந்த மாளிகையில் கண்காட்சியின் பொருட்டு வைக்கப்பட்டிருந்த முத்துமாலை யொன்று பற்பல வர்ணமுடைய முத்துக்களையுடையது. அவற்றைச் சேர்த்து அந்த அருமையான மாலையைச் செய்வதற்கு முப்பது வருஷங்கள் சென்றனவாம். பல நூறு வருஷங்களாக இலங்கை இரத்தினங்

கட்கும் முத்துக்கும் பேர்போனது. அவ்விஷயத்தில் அது உலகத்தில் மிக்க செல்வம் மிகுந்த நாடாக விளங்குகின்றது.

தேயிலையும் றப்பரும் இலங்கையின் விசேஷமான விளைபொருட்களாக மதிக்கப்படுகின்றன. இலங்கைத் தேயிலை மிகச் சிறந்ததென்று உலகமெங்கும் பிரசித்தி பெற்றது. இலங்கை மாளிகையில் காட்டப்பட்ட வஸ்துக்கள் தேயிலை, றப்பர், றப்பராற் செய்யப்பட்ட பாய்கள், சுருட்டுப் பெட்டிகள், அரிசி, மிளகு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம், கறுவாப்பட்டை முதலிய வாசனைத்திரவியங்கள், தேங்காய், கொப்பறு, பலவகையான மரங்கள், புகையிலை, தாதுவர்க்கங்கள் முதலியவையாம்.

பனைமரம் இலங்கைத் தீவிற்போல உலகத்திலுள்ள வேறெந்தத் தேசத்திலும் உபயோகப்படுகிறதில்லை. அதை இலங்கையிலுள்ளவர்கள் அநேக விதமாய் உபயோகப்படுத்துகிறபடியால் அதற்கு, கேட்டதெல்லாம் தர வல்ல கற்பக விருட்சமென்று இலங்கையில் ஒரு பெயருண்டு. ஆகையால் பனைமரத்தாற் செய்த கைகொம்பு, பனையோலையாற்செய்த பாய், கூடை, மூறம், பை முதலிய சாமான்கள் இலங்கை மாளிகையில் நிறைந்திருந்தன. பனையோலையால் வேய்ந்த குடிசை யொன்றும் அங்கிருந்தது.

இலங்கை மாளிகையின் மற்றொரு பாகத்தில் வேட்டையில் கொல்லப்பட்ட மிருகங்களின் தலை, கொம்பு முதலியவையும் பஞ்சடைத்த பல ஜாதிப் பட்சிகளும் காணப்பட்டன. யானைத் தலைகளும், மான் கொம்புகளும், யானைத் தந்தங்களும், பஞ்சடைத்த மான், மரை, பன்றி, சிறுத்தைப்புலி முதலிய மிருகங்களும் ஜனங்களுக்கு வெகு இன்பத்தைக் கொடுத்தன.

இலங்கையில் விஜய ராஜன் முதல் இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷகாலம் சிங்கள அரசர் அரசு செலுத்தி வந்தார்கள். அவர்கள் காலத்து கடை உடை பாவனை முதலியவற்றைக் காட்டும் காட்சிப் பொருட்கள் இலங்கை மாளிகையிலிருந்தன. அக்காலத்து அரசர் பிரதானிகளுடைய படங்கள், அவர்களுடைய விநோதமான உடுப்புகள், வண்டிகள், பல்லக்குகள், வீட்டுச் சாமான்கள், போராயுதங்கள் முதலிய யாவும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

திரிவாசா என்னும் புகைக் கப்பல் பாசிபிக் சமுத்திரத்தில் அமிழ்ந்தியபோது, கப்பலிலுள்ள வேலைக்காரர் உயிர் பிழைப்பதற்கு

மூலகாரணமாயிருந்த படமொன்று நாம் முன்னே சொன்ன பனை யோலைக் குடிசையில் வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வெகு அலங்காரமாயியற்றப்பட்டு, பல்லாயிரம் காட்சிப்பொருள்கட் குறை விடமாய் விளங்கிய இலங்கை மாளிகை இலங்கையின் பெருங் கீர்த்தியை உலகமெங்கும் பரவச் செய்வதாயிற்று.

விஜி தீவு. Fiji. வீஜி தீவின் மாளிகை நியூஸிலாந்து மாளிகையை அடுத்துள்ளது. அதின் விஸ்தீரணம் 2,000 சதுர அடி. அது அங்குள்ள சிற்றரசரால் ஆங்கிலேயருக்கு 1874-ம் வருஷம் கொடுக்கப்பட்டது. அங்கு செய்யப்படும் தப்பா என்னும் ஒரு வகையான துணியும், வெள்ளை முருகைக் கற்களும், சர்க்கரையும், கொப்பறாவும், வெண்ணெயும் அதின் காட்சிப் பொருட்கள்.

, ஹொங் கோங். Hong kong. இதற்கென்று விடப்பட்ட நிலம் 56,700 சதுர அடி விஸ்தீரணமுடையது. இந்தக் குடியேற்ற நாட்டை முற்றிலும் நன்றாய்க் காட்டும் மாதிரி யொன்று இம்மாளிகையில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் துறைமுகம், கப்பல் பழுது பார்க்குந் துறை முதலியவற்றைக் காட்டும் மாதிரிகளும் அங்கிருந்தன. பட்டு நெசவு செய்யும் விதத்தைப் பல உபகரணங்கள் மூலமாகச் சீனர் நன்றாய் விளக்கிக் காட்டினர். பட்டுப்பூச்சி முட்டைக்குள்ளிருக்கும் காலம்முதல் அது நூல் நூற்று, அந்நூல் பலவிதமான பட்டுத் துணிகளாக நெசவாகிறவரையிலுள்ள பலவிதமான விஷயங்களை அவற்றால் நன்றாய்த் தெரிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது.

வெள்ளி, தந்தம், கருங்காலி, பிரம்பு முதலியவற்றாற் செய்யப்படும் சாமான்கள், காகிதம் முதலியவைகள் அதின் காட்சிப் பொருட்கள். சீனரால் ஏற்படுத்தப்பட்ட சிற்றுண்டிச்சாலை யொன்று அங்கிருந்தது. அவர்களுடைய சாப்பாடு ஆங்கிலேயரும் விரும்பத்தக்க அவ்வளவு உசிதமானது. இவ்விதமாய்ப் பற்பல நாடுகள் தத்தம் பொருட்களைப் பலரறியக் காட்டின.

# மூன்றும் அதிகாரம்

## உவெம்பிளி சிங்காரவனம்

உலக சரித்திரத்தி லிணையற்றதாய்க் காந்த மூசியைக் கவர்தலே போன்று ஐம்பெருங் கண்டங்களையும் தன்மாட்டிழுத்த இவ்வற்புதமான பல்பொருட்காட்சியை நடத்துவதற்கு நிர்வாக சபையார் உவெம்பிளி சிங்காரவனத்தையே தெரிவு செய்துகொண்டனரென்று நாம் முன்னர்க் கூறியுள்ளோம். உவெம்பிளி இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய சிங்கார வனங்களிலொன்று. அது லண்டன் நகரத்திற்கு வடமேற்கில் சுமார் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ளது. இங்கிலாந்தின் பிரதம நிதியச்சாலைக்கும் அதற்குமுள்ள தூரம் பத்து மைல். லண்டன் நகரத்தில் சர்வ தேச பிரயாணிகளின் சந்திப்பு ஸ்தானமாகவுள்ள சாறிங்குறேஸ் என்னுமிடத்திலிருந்து உவெம்பிளிக்கு இருபது நிமிஷத்திற் செல்லலாகும். லண்டன் நகரிலுள்ள எந்தத் தரைக்கீழ் ரயில் ஸ்தானத்திலிருந்தும் உவெம்பிளிக்கு நேரே செல்லலாம்.

உவெம்பிளி சிங்கார வனத்தின் விஸ்தீரணம் சுமார் இருநூற்றுப் பதினாறு ஏக்கர். அங்கு வானுறவோங்கிய மரங்களும் சிங்கார மேடைகளும், பூமலி தடங்களும், இசைகுருவிகள் ஒலி செய்ய அவ்விசைக் கொத்துப் பட்சிசாலங்க ளிடையறாது பாடுஞ் சோலைகளும், பற்பல வர்ணமுடைய புஷ்பங்கள் மலர்ந்து கொத்துக் கொத்தாய்த் தொங்கும் நந்தவனங்களும், பரமானந்தத்தை விளைக்கும். அவ்வனத்தின் கண்ணேயுள்ள செடி கொடிகள் சிற்சில விடங்களில் வளர்ந்து காடுபோலத் தோன்றுஞ் சிறப்பும், அங்கு விறகு புல் முதலியவற்றை வெட்டுவோர் மகிழ்ந்து பாடும் சிறப்பும், வாத்திய மேடையின்மீது பலவகையான வாத்தியங்கள் கோஷிக்கும் சிறப்பும், ஆங்கில ஆடவர் அரிவையர் சிறியவர் பெரியவர் என்னு மெத்திறத்தவரும் ஆங்குக் குழுமிச் செவிகளை வாய்களாய்க்கொண்டு அவற்றினின்றும் பெருகுங் கானமிர்தத்தைப் பருகி யானந்திக்குஞ் சிறப்பும் மனத்திற்கு மிக்க ரம்மியத்தைத் தருவன. இவ்வகையான பல நல்லிலக்கணங்கள் பொருந்தியிருந்தமையால் பல்பொருட்காட்சியை நடத்துவதற்கு உவெம்பிளி

சிங்காரவனத்தைவிடச் சிறந்த ஸ்தானம் வேறொன்று மில்லையென்பது பிரத்தியக்ஷம்.

உவெம்பிளி எளிதிலும் விரைவிலும் சென்றடையக்கூடிய ஸ்தலமோவென்பது சிலருக்குச் சந்தேகத்தை யுண்டாக்கியது. அதின் ஒருபுறத்தே உவெம்பிளி பார்க் ஸ்டேஷன் என்னும் புகைவீதி ஸ்தானமொன்றும், மறுபுறத்தே உவெம்பிளி ஹில் ஸ்டேஷன் என்னும் புகைவீதி ஸ்தானமொன்றும் அமைந்துள்ளன. நெடுந்தூரத்திலிருந்து வருபவர்கள் நேரே அச்சிங்கார வனத்தில் வந்திறங்குவதற்கு அப்புகைவீதிகள் மிகவும் அனுகூலமானவை. உவெம்பிளி பார்க் புகைவீதி ஸ்தானத்தில் பிரயாணிகள் சுகமாய் ஏற இறங்க சௌகர்யமாக ஐந்து மேடைகள் முன்னரே அமைக்கப்பட்டிருந்தன; அவற்றோடு புதிதாக ஒரு பெரிய மேடை அமைக்கப்பட்டது. அந்த ஆறு மேடைகளிலும் ஒரு மணி நேரத்தில் முப்பதினாயிரம் பிரயாணிகள் ஏறவும் இறங்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உவெம்பிளி சிங்காரவனத்திற்குச் சமீபத்தில் ஒரு இருப்புப்பாதைச் சங்கத்தார் இந்தப் பல்பொருட்காட்சி வைபவத்திற்கென்று பிரத்தியேகமாய் ஒரு பாதையை யமைத்து அதை அச்சிங்கார வனத்தின் மத்திக்குக் கொண்டுசென்று அங்கொரு புதிய ஸ்டேஷனை ஸ்தாபித்தனர். அந்த இருப்புப்பாதை அங்கிருந்து மாறிலபோன் புகைவீதி ஸ்தானத்திற்குச் செல்லுகிறது. இந்த ஏற்பாட்டினால் லண்டன் நகரத்திலிருந்து வேடிக்கை பார்க்க வரும் ஜனங்கள் மாறிலபோனிலிருந்து புறப்பட்டு உவெம்பிளி ஹில் ஸ்டேஷனுக்குச் செல்லாமல் நேராய்ப் பல்பொருட்காட்சி சாலைக்கு வந்து சுற்றிக்கொண்டு அங்கிருந்து மாறிலபோன் ஸ்டேஷனுக்குத் திரும்பியும் செல்லலாம். லண்டன் நகரத்து ஜனங்கள் இவ்வழியாய்ச் செல்வதால் நெடுந்தூரத்திலிருந்து வரும் பிரயாணிகள் மாத்திரம் உவெம்பிளி ஹில் ஸ்டேஷனை உபயோகப்படுத்துவதற்கு சௌகர்யமா யிருந்தது.

மாறிலபோன் புகைவீதி ஸ்தானம் லண்டன் நகரத்தின் மத்தியிலுள்ளது. அங்கிருந்து பிரயாணிகள் இருபது நிமிஷத்தில் பல்பொருட்காட்சி சாலையை அடையலாம். பேக்கர்சாலை ஸ்தானத்திலிருந்து குழாய் வழியாய்ப் பூமியின்கீழ் செல்லும் அநேக புகைவீதிகள், லண்டன் நகரமெங்குமுண்டு. அங்கிருந்து இருபது நிமி

ஷத்தில் உவெம்பிளி சிங்காரவனத்தை யடையலாம். மேலும் உவெம்பிளி அநேக புகைவீதி ஸ்தானங்களுக்குச் சமீபமாயிருப்பதால் உவெம்பிளிக்கு நேரே சென்றிறங்கும் பிரயாணிகள் தவிர மற்றையோர் சமீபமாயுள்ள ஸ்தானங்களிலிருந்து வேகமாய்ச் செல்லும் மோட்டார் வண்டி, குதிரை வண்டி முதலிய சாதனங்களால் பல்பொருட்காட்சி நடக்கும் சிங்காரவனத்தை அடையக்கூடும். மிட்டின்ஸெக்ஸ் மாகாணத்தில் பிரயாணிகளை வேறு புகைவண்டிப் பாதைக்கு மாறாமல் நேரே உவெம்பிளிக்குச் சுமார் பதினெட்டு நிமிஷத்தி லனுப்பக்கூடிய நூற்றிருபது ஸ்தானங்களுண்டு.

உவெம்பிளிக்கு ஜனங்களை ஏற்றிச் செல்வதற்காக அநேக பஸ் வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் எழுபது அல்லது எண்பது பிரயாணிகளைக் கொண்டுசெல்ல வல்லவை. டிராம் வண்டிகளும் வாடகை வண்டிகளும் மணிக்கு இருபதினாயிரம் பேரைக் கொண்டுவரத்தக்கவை. பிரயாண சாதனங்கள் இவ்வளவாய் அமைந்திருக்கும்போது ஜனங்கள் தாமதமில்லாமல் தாராளமாய்ச் செல்லக்கூடும். நமது தேசத்திற்போல பிரயாணிகள் வண்டியகப்படாது அங்கங்கு தடைப்பட்டு நிற்பதும், அவர்களைச் சாமான் வண்டிகளில் மாடு ஆடுகளை அடைப்பதுபோல் அடைப்பதும் அங்கேயில்லை. சமீபத்திலுள்ள ஸ்டேஷன்களிலிருந்து உவெம்பிளிக்குப் பிரயாணிகளை வெகு வேகமாய்க் கொண்டுசெல்வதற்கு நூற்றுக்கணக்கான மோட்டார் வண்டிகளுண்டு. பல்பொருட்காட்சி நடந்தகாலத்தில் வீதிகளிற் செல்லும் பலவிதமான வண்டிகள் யாவும் அங்கு செல்வனவாயின. ஆதலின் ஆங்குள வீதிகளனைத்தும் உவெம்பிளிக்கே செல்வனவென்றலும் பொருந்தும். ஆகையால் உவெம்பிளியைக் காட்டிலும் எளிதிற் சென்றடையக்கூடிய ஸ்தலம் வேறொன்றில்லை.

லண்டன் நகரத்திலிருந்து உவெம்பிளிக்குக் குறுக்கு வழியாகச் செல்லவேண்டுமானால் சுமார் ஆறு மைல் தூரந்தானிருக்கும். மோட்டார் வண்டிகளில் செல்வோர் முப்பது நிமிஷநேரத்தில் அங்கு செல்லலாகும். மின்சாரத்தாலியங்கும் டிராம் வண்டிகள் உவெம்பிளிக்கு நேராய்ச் செல்லாவிடினும் அதற்கு வெகு சமீபமாய்ச் செல்கின்றன. வாடகைக்குழைக்கும் மோட்டார் வண்டி

கள் குதிரை வண்டிகள் முதலியன உவெம்பிளியில் எதேஷ்டமாயுண்டு.

லண்டன் நகரத்தில் தரையின் கீழாயோடும் குழாய் வீதிகள் விசேஷமாயுள்ளன. அவற்றிற் செல்லும் வண்டிகள் தரைமீது செல்லும் புகை வண்டிகளை விட வெகு விரைவாய்ப் பிரயாணிகளைக் கொண்டு செல்ல வல்லவை. அவை மழைகாலத்தில் வெப்பமாயும் வெய்யிற் காலத்தில் குளிர்ச்சியாயுமிருப்பதால் ஜனங்கள் அவற்றிற் பிரயாணம் செய்வதையே பெரிதும் விரும்புவர். ஆயினும் மோட்டார் பஸ் வண்டிகளேற்பட்ட பின்னர் பிரயாணிகள் இவை யிரண்டையுமே விசேஷமாய் உபயோகப்படுத்தினர். உவெம்பிளிக்குச் சமீபத்திலேயுள்ள விடங்களிலிருந்து, மோட்டார் வண்டிகள் எக்காலத்திலும் உவெம்பிளிக்குப் போய்க்கொண்டிருந்தன.

உவெம்பிளி சிங்கார வனம் மிக விசாலமானதாய், சிறந்த பசும்புற்றரை வாய்ந்த பூமி. அதின் சில பாகத்தில் பூமி சமநிலமாய் அகன்று சிறிய புல் பூண்டுகள் நிறைந்து வெகு அழகாய்த் தோன்றும். எப்புறம் நோக்கினும் பச்சைக் கம்பளமொன்றைப் பூமியில் பரப்பிவிட்டாலொப்ப வெகு ரமணீயமாகக் கண்ணுக்குப் புலப்படும். ஆகையால் அங்கு உதை பந்து, அடி பந்து, கோல்வ் முதலிய பலவிதமான ஆட்டங்கள் நடைபெறுவது வழக்கம். அவற்றைக் கண்டானந்திக்கும்பொருட்டு ஏராளமான ஜனங்கள் அங்குச் செல்வர். ஆகையால் ஜனங்கள் ஆட்ட விநோதத்தின் பொருட்டு விசேஷமாய்க் கூடும் ஸ்தலங்களில் உவெம்பிளி ஒன்றென்பது பெறப்படுகின்றது.

உவெம்பிளியில் இந்தப் பிரமாண்டமான பல்பொருட்காட்சியை நடத்தவேண்டுமென்று மேற்கூறிய நிர்வாக சபையார் தீர்மானித்தபின்னர் அதை அவ்விதமான வைபவத்திற்கேற்றதாக்கும்வண்ணம் அங்கு பலவித திருத்தங்கள் செய்யப்பட்டன. அவ்வனத்தின் சில பாகங்களில் தானாய் முளைத்துக் காடுபோல் வளர்ந்திருந்த புல் பூண்டுகளையும் செடி கொடிகளையும் வெட்டி அப்புறப்படுத்தி, சிற்சில பாகத்திற் காணப்பட்ட மேடு பள்ளங்களை நீக்கி, கட்டடங்களையும் மண்டபங்களையு மமைப்பதற்கேற்ற சமநிலமாக்க அதிக பணம் செலவாயிற்று.

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எத்தன்மையானதென்பதை அறிய வேண்டுமாயின் அதற்குட்பட்ட நாடுகளுக்கு நேரிற் செல்லவேண்

டும். அவ்வாறு செல்வதினுல் அதிக பணச்செலவும், காலகஷ்டமும் தேக சிரமுமமுண்டாகும். அவற்றைப் பொருள்பண்ணுது சென்று அறியக்கூடியவர் மிகச் சிலரேயாவர். அச்சிலரும் அதைப் பூரணமாயறிந்துகொள்ளுதல் சாத்தியமல்ல. ஆகையால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் தன்மை இன்னதென்பதை சமஸ்த ஜனங்களுக்கும் உள்ளங்கை நெல்லியங்கனிபோல் தெள்ளிதிற் புலப்படுமாறு செய்யவேண்டுமென்பதே. உவெம்பிளியிலுள்ள இருநூற்றுப்பத்தொன்பது ஏக்கர் நிலத்திலுங் கட்டப்பட்ட விசேஷத மாளிகைகள், மண்டபங்கள், அரங்கங்கள் முதலிய பலவிதமான கட்டடங்களின் நோக்கம். சுமார் ஆயிரத்திருநூற்றைம்பது வருஷகாலத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் முழுவதும் அடைந்துள்ள நாகரீகத்தையும் பராக்கிரமத்தையும் ஒரேநாளில் ஜனங்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வது எவ்வளவு சிரேஷ்டமானது. கருப்பஞ்சாற்றைக் காய்ச்சிச் சர்க்கரைக் கட்டியாக்கினுற்போல இந்தியா, கனடா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா முதலிய பற்பல தேசங்களின் சீர்திருத்தம், கைத்தொழிற்றிறன், பராக்கிரமம் முதலியவற்றைச் சுருக்கி அவற்றின் சாராம்சங்களை உவெம்பிளி சிங்காரவனத்திற் சென்று கூடிய ஜனசமுத்திரம் கண்டு களிக்குமாறு செய்த பேராற்றலை என்னென்றுரைப்பது! அந்தந்தத் தேசத்தார் தத்தம் விளைபொருட்களையும் தம் நாட்டிலகப்படும் தாதுவர்க்கங்களையும் கைத்தொழிலாலாய பல வஸ்துக்களையும் சேர்த்துவைத்துப் பலரறியக் காட்டும்வண்ணமியற்றியுள்ள கட்டடங்கள் எத்தகைய சிறப்பு வாய்ந்தவை! அவை சம்பந்தமாய் இயற்றப்பட்ட அரசியல் மண்டபம், சங்கீத மண்டபம், சிலம்ப மண்டபம் முதலிய மண்டபங்களும், போஜனசாலை, சிற்றுண்டிச் சாலை, நடனசாலை, பாலியர் போஷணசாலை முதலிய பல் திறத்தவாகிய சாலைகளும் உத்தியானங்களும் அரங்கங்களும் எண்ணிறந்தவை. இவைகளுக்கு ஜனங்கள் எளிதிற் செல்லும்வண்ணம் அமைக்கப்பட்ட வீதிகள் பதினைந்து மைல் நீளமுடையவை. அவ்வீதிகளின் பாங்கர் 'இது இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கம், இது கனடாவுக்குச் செல்லும் மார்க்கம்' என்று கைகாட்டி மரங்கள் குறிப்பித்து நிற்பது, ஜனங்களுக்குப் பெருமதிசயத்தையும் மலைப்பையும் விளைப்பனவாயின. ஆயினும் அவற்றினுதவியைக்கொண்டு ஒருவன் ஒரேநாளில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் தன்மையை நேரிற்

கண்டறிதல் கூடும். மிகப் பெரியதும் அதிக செலவுகொண்டது மான இதுபோலும் பல்பொருட் காட்சி உலக சரித்திரத்தில் முன் னொருபோதும் நடந்ததில்லை; இனிமேல் இதற்கிணையானதொன்று நடக்குமோவென்பதும் சந்தேகம். இப்பெரும் பொருட்காட்சி ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தற்காலமடைந்திருக்கும் அதியுன்னத மான உண்மைநிலையைத் தத்ரூபமாக ஆங்கிலேயருக்கு மாத்திரமல்ல, உலகமனைத்திற்குங் காண்பிப்பதுமன்றி ஆங்கிலேய பிரபுக்களுடைய விடாமுயற்சியையும் ஸ்தாபன சக்தியையும் ஸ்பஷ்டமாய் எடுத்துக் காட்டுகின்றது. மாட்சிமைதங்கிய மகாராணி விக்டோரியா பெரு மாட்டியின் ஒப்புயர்வற்ற அரசாட்சி காலத்தில் நடந்தேறிய பல் பொருட் காட்சியொன்றும், ஐம்பதாம் அறுபதாம் வருஷ மகோற் சவங்களும் ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் உன்னத நிலையையும் பெருஞ் சிறப்பையும் ஒருவாறு விளக்கிக் காட்டினவேனும் அவையொன்றும் இப்பெரும் வைபவத்திற்கீடாகாது.

**ஸ்டேடியம் என்னும் மகா அரங்கம்.** The Stadium. மனம் வாக்குக்கெட்டாத மகிமைவாய்ந்து மாநிலம் முழுவதும் புகழ்பரப்பி, பலகோடி ஜனங்களுடைய ஜீவனத்திற்காதாரமாய், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை ஒன்றாய்ச் சேர்த்து இறுகக்கட்டிய பொற்சங்கி லியேபோன்ற இப்பல்பொருட்காட்சியின் பொருட்டு இயற்றப்பட்ட பற்பல விநோத கட்டடங்களுள் ஸ்டேடியம் என்னும் மகா அரங்கம் மிக்க விசேஷமானது. அது 620 அடி நீளமும் 320 அடி அகலமு முடையது. ஆகையால் அது சுமார் பத்து ஏக்கர் விஸ்தீரண முடைய நிலத்தை அடக்கியுள்ளது. பூர்வகாலத்து ரோமருடைய துளுசியம் என்னுமரங்கத்தினும் அது இரண்டுமடங்கு பெரியது. கற்பொடிகளையும் சுண்ணம்பையும் சேர்த்து கெட்டியான கற்கள் போலுருவாக்கப்பட்ட கொங்கிறீட் என்னும் செயற்கைக் கற்களா லும் இரும்பினாலும் உறுதியாகக் கட்டப்பட்ட அக்கட்டடத்தின் மூன்றிலொருபாகம் மூடப்பட்டும் மற்றையபாகம் மூடப்படாமல் மழை வெயில் படக்கூடியதாகத் திறந்தும் அமைக்கப்பட்டது. மூடப் பட்டுள்ள பாகத்தின் மத்தியில் நமது அரசரும் ராஜ குடும்பத்தவரும், மற்றத் தேசத்தரசர்களும் ராஜாங்க அதிகாரிகளும் உட்காருவதற் கேற்ற சிங்காரமேடையும் நவரத்னகசிதமாகப் பிரகாசிக்கும் ஆசனங்களும் இடப்பட்டன. அம்மேடையி னிருமருங்கினும்

பிரபுக்களும் துரைமக்களும் உட்காருவதற்கென்று இயற்றப்பட்ட ஆசனங்கள் பந்திபந்தியாய்த் தோன்றும். அப்பந்திகள், கீழிருந்து மேலே செல்லச் செல்லப் படிப்படியாய் உயர்ந்துசெல்வன. இவற்றின் மேலேயுள்ள மேற்றளத்திலும் இவ்விதமாகவே ஆசனங்கள் இடப்பட்டன. இந்தப் பாகத்தில் சுமார் 23,000 பேர் தாராளமாய் உட்காரலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்புறத்தில் சாதாரண ஜனங்கள் நின்றுகொண்டு வேடிக்கை பார்க்கும்வண்ணம் அநேக மேடைகள் ஒன்றினுமொன்று படிப்படியாய் உயர்ந்தனவாய்க் கட்டப்பட்டன. அம்மேடைகளனைத்தும் ஒருங்கே நாற்பது மைல் நீள்முடையவை. அவற்றில் சுமார் 100,000 பேர் தாராளமாய் நின்று வேடிக்கை பார்க்கலாம். இவ்வரங்கத்து மத்தியில் உதை பந்தாட்டத்திற்கென்று போதுமானவிடம் காலியாய் விடப்பட்டது. அதைச் சுற்றிலும் பந்தயவோட்டத்திற்கென்று கால்மைல் நீளமுள்ள விசாலமான வீதியுண்டு. அதினொருபுறத்தில் நேராய் ஓடுவதற்குபயோகமாக 220 அடி நீளமுள்ள பாதையொன்று பிரத்தியேகமாய் விடப்பட்டிருந்தது. மகா அரங்கத்தில் மல் யுத்தவீரர் ஆயிரம்பேருக்கு வாசஸ்தலமும், அவர்கள் உடுப்புகளை உடுத்துக்கொள்வதற்குவேண்டிய அறைகளும், ஸ்நானத்திற்காகச் சொரிநீர்க் குழாய்களும் விசேஷமாயுண்டு. இவையன்றி அம்மகா அரங்கத்தில் சிற்றுண்டிச் சாலையொன்றும், விருந்துமண்டபமொன்றும் பிரத்தியேகமாய் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வரங்கத்தைக் கட்டுவதற்கு இருபத்தையாயிரம் டன் எடையுள்ள சுண்ணாம்புச் செயற்கைக் கற்களும் இரண்டாயிரம் டன் எடையுள்ள இரும்பும் செலவாயின. இப்பல்பொருட் காட்சி முடிந்த பின்னரும அது நெடுங்காலம் நிலைநிற்க வேண்டுமெனக் கருதி வெகு உறுதியாய்க் கட்டப்பட்டது.

பல்பொருட் காட்சியைப் பார்க்கவந்த ஜனங்களுக்குப் பொழுது போக்காக அநேகவிதமான விநோத வேடிக்கையாட்டங்கள் அங்கு நடைபெற்றன. பல்பொருட் காட்சி ஆரம்பமாக முன்னமே 1923-ம் ௵ உதை பந்தாட்டம் அங்கு வெகு விமரிஸையாய் நடந்தது. அதை லண்டன் நகரவாசிகளிற் பல்லாயிரவர் கண்டு களித்தனர். பின்னர் அடுத்த வருஷம் ஏப்பிரல்மீ 23-ம் ௳ எம்மன்னர்

பிரான் பற்பல தேசத்தரசர், மந்திரிமார், ராஜாங்க உத்தியோகஸ்தர், பிரபுக்கள், துரைமார், துரைபன்னியர், நகர ஜனங்கள் கூடிய மகா சபையில் இப்பல்பொருட் காட்சியைப் பலரறியத் திறந்து நற்காட்சி தந்த வைபவமும் அவ்வரங்கத்தே நடந்தேறியது. மகாராணி விக்டோரியா பெருமாட்டியின் ஜனனநாளை முன்னிட்டு ஆங்கிலேய ராஜ்ஜியமெங்ஙனுங் கொண்டாடப்படும் ராஜாங்க மகாதின (Empire Day) விஷயமாய் நடந்த நடன சங்கீத விநோதங்களும் எம்மரசர் அரசி முன்னிலையில் அங்ஙனே நடைபெற்றன. ராஜாங்கத்துப் பாடகர்கூட்டத் தலைவரான ஹாரிஸ் பண்டிதர் தேர்ந்த பத்தாயிரம் பாடகர்களோடுகூட, பல்பொருட்காட்சி நடந்தகாலத்தில் பல கச்சேரிகளை அங்கு நடத்தினர். பிறிஸ்டல் நகரத்தவர் பலர் வேஷமிட்டுக்கொண்டு தம் நகரத்திற்கடுத்த சில விஷயங்களை வேடிக்கையாக நடத்திக் காட்டியதும் அவ்வரங்கத்தேயாம்.

அவ்வரங்கத்தில் நடந்த இன்னொரு விநோதம் ரேடியோ என்னும் வேடிக்கையாட்டம். அவ்வாட்டத்திற்கென்று கனடாவின் பல பாகங்களிலிருந்து சவாரிசெய்வதில் தேர்ந்தவரும், மல்யுத்தத்திற் பயின்றவரும் பலர் வந்திருந்தனர். முற்காலத்திலுள்ள ரோமரைப் போல மிருகங்களோடு யுத்தம் செய்வதே இவ்வாட்டம். இது சில நாள் நடைபெற்றதேயாயினும் ஜீவஜெந்துக்களுக்குப் பெரிதும் ஹிம்சையை உண்டுபண்ணுங் கொடிய ஆட்டமெனக் கருதிப் பின்னர் நிறுத்தப்பட்டது. ஆயினும் இவையனைத்திலும் மேலாய் மதிக்கப்பட்டு ஜனங்களைப் பெரிதும் வசீகரித்தவை, ஆங்கிலேயர் தங்கள் ராஜ்ஜியத்தை இங்கிலாந்திலும் இந்தியா முதலிய புறதேசங்களிலும் ஸ்தாபித்தகாலத்தில் நடந்த பல முக்கிய விஷயங்களை மனுஷருக்கு வேஷமிட்டுத் தத்ரூபமாக நடத்திக்காட்டிய காட்சிகளேயாம். ஸிபாஸ்டியன் காபோற் எட்டாம் ஹென்றி என்னும் ஆங்கிலேய அரசனுடைய சமஸ்தானத்திற்கு சென்றமையையும், எலிஸபெத்மகாராணியுடைய வைபவத்தையும், ஆர்மெடா என்னுங் கப்பற்படை, ஆபிரிக்காவில் ஆங்கிலேயர் குடியேறினது முதலிய சரித்திரங்களையும், பூர்வகாலத்தில் ஆங்கிலேயர் சிலர் இந்தியாவுக்கு வந்து அக்பர் மகா சக்கரவர்த்தி, ஹைதர் அலி, திப்பு சுல்த்தான் முதலியவர்களை நேரிற்கண்ட விஷயங்களையும் தத்ரூபமாக அக்காலத்து நடை உடை பாவனையோடு எடுத்துக்காட்டியது ஜனங்களுக்கு நேத்திரானந்தத்

ஷதக் கொடுத்ததுமன்றி, பூர்வ சரித்திர விஷயங்களை அவர்களுக்குப் போதிப்பதுமாயிற்று. இவையனைத்தோடுங்கூட இராணுவவீரர் காட்டிய விநோத வேடிக்கைகளும் படையணிக்காட்சிகளும் அவ் வரங்கத்திலேயே நடந்தேறின. அம்மகா அரங்கம் பல்பொருட் காட்சிக்கு எவ்வளவு பிரயோஜனமுள்ளதாயிற்றென்று இவற்றால் தெளிவாகிறது. உவெம்பிளி சிங்காரவனத்தில் ஜனங்கள் சுலபமாய் வந்து சேருவதற்குப் பல றயில்வண்டிப் பாதைகள் ஐந்து நிமிஷத்திற் கொருதடவை வண்டித்தொடர்களை அனுப்பின. அவை ஒன்றோ டொன்று போட்டி போட்டோடுவதேபோன்று பல்லாயிரம் ஜனங் களை மணிக்குமணி அங்கு கொண்டுவந்து சேர்ப்பனவாயின. எண் ணிறந்த மோட்டார் வண்டிகளும், வாடகை வண்டிகளும் பிரதி நிமிஷமும் ஜனங்களை அங்கு சேர்த்தன. அவ்வாறு அங்கு கூடிய ஜனங்களின் உபயோகத்திற்காக பலவகையான வண்டிகள் அமைக் கப்பட்டிருந்தன.

ஒரு நிமிஷநேரமும் நில்லாது எப்பொழுதும் ஓடிக்கொண் டிருக்கிற எண்பத்தெட்டு வண்டிகள் உவெம்பிளி சிங்காரவனத்திற் குள் ஓடிக்கொண்டிருந்தன. மின்சார சக்தியால் தண்டவாளங்களின் மேல் ஓடும் அவ்வண்டிகள் ஒன்றின்பின்னொன்றாய் ஒரு இடத்தி லிருந்து புறப்பட்டு, உவெம்பிளியிலுள்ள பிரதானமான மாளிகை களினருகாகவும் காட்சி மண்டபங்கள் வழியாகவும் சென்று பழைய படியும் புறப்பட்ட ஸ்தானத்திற்கு வந்து, பின்னரும் முன்போலவே செல்லும். அவைக்குச் சாரதியில்லை. அவ்வண்டிகளின் சக்கரங் களில் பற்களமைந்திருக்கின்றன. அவை, வண்டிகள் காட்சி மாளி கைகளைச் சமீபித்தவுடனும், மனுஷர் ஏற இறங்கவென்று குறிக்கப் பட்ட விடங்களைச் சமீபித்தவுடனும் மிக மெதுவாய் ஓடும்படியாய் சக்கரங்களிலுள்ள பற்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அந்த இடங்களில் ஜனங்கள் சுலபமாய் ஏறவும் இறங்கவும் சாத்தியப் பட்டது. அந்த வண்டிகள் மணியொன்றிற்கு இருபத்துநாலு மைல் போகத்தக்க வேகமுடையவை.

மின்சார சக்தியினால் இயங்கும் வண்டிகள் பல மோட்டார் பஸ்போல அச்சிங்காரவனத்தின் நடுவிலேயுள்ள வீதிகளில் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றில், ஒரு வண்டிக்குப் பன்னிரண்டுபேர் ஏறலாம். அவை மெதுவாகச் செல்வன. அவை செல்லும்போது

சாதி இன்னின்ன விடத்தில் இன்னின்ன விசேஷமுண்டென்று சொல்லிக்கொண்டே போவான்.

கூலிக்காரர் வயது முதிர்ந்தவர்களையும் சிறுவரையும் உட்கார வைத்துத் தள்ளிக்கொண்டு செல்ல வல்ல சிறு வண்டிகளும் ஏரானமாய் அங்கிருந்தன. ஒரு வண்டிக்கு ஒரு ஆள்தான் ஏறலாம். அவை மெதுவாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும். இவ்விதமான பல வண்டிகள் அங்கில்லாவிடில் அச்சிங்கார வனத்தில் நடைபெற்ற காட்சிகளனைத்தையும் காலால் நடந்து சென்று காண்பது அசாத்தியம். சிங்காரவனத்தின் வடமேற்குப் புறத்து வாயிலில் மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கென்று பிரத்தியேகமாக ஓரிடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பல்பொருட்காட்சி மாளிகைகளில் நெருப்புப் பற்றிவிட்டால் அதை அவிப்பதற்கென்று நெருப்பை அவிக்கும் யந்திரத் தொகுதியொன்றும், அவற்றை உபயோகப்படுத்தி நெருப்பை அவிப்பதற்காக ஐம்பது உத்தியோகஸ்தரும் போதியளவு வேலைக்காரரும் அங்கு நிறுத்தப்பட்டனர். அவர்களிற் சிலர் இராணுவத்தில் அமர்ந்து பல யுத்தங்கள் செய்து உத்தியோகத்தைவிட்டு நீங்கின வீரர். அத்தொகுதியிலுள்ள நெருப்பையவிக்கும் யந்திரங்கள் இரண்டு பிரிவாய்ப் பிரிக்கப்பட்டு இரண்டு வெவ்வேறு ஸ்தானங்களில், அக்கினிபகவான் போர்க்கோலங்கொண்டு யுத்தத்திற்கெழுவானாயின் அவனைச் சங்கரிப்பதற்குத் தயாராயிருந்தன. சுண்ணாம்பினாலும் இரும்பினாலும் கட்டப்பட்ட கட்டடங்களில் நெருப்புப் பிடிப்பது அசாத்தியமேயாயினும் அவ்வாறு தயாராயிருப்பது அவசியம்.

நிலக்கரிச் சுரங்கங்களை விபரித்துக் காட்டுவதற்காக உவெம்பிளி வனத்தில், பூமியைத்தோண்டி ஒரு சுரங்கம்போல அமைக்கப்பட்டிருந்தது. அதில், ஒரு சுரங்கத்திலிருக்கவேண்டிய சகல இலக்ஷணங்களும் காணப்பட்டன. இங்கிலாந்திலுள்ள சுரங்கவேலைசெய்யும் பல சுரங்கவதிகாரிகள் ஒன்றுசேர்ந்து ஏராளமான பணத்தைச் செலவுசெய்து இவ்விதமான சுரங்கத்தை ஏற்படுத்தியது, முன்னொருபோதும் சுரங்கங்களைக் கண்டறியாத ஜனங்கள் அவற்றைப் பற்றி நன்றாயறிவதற்குத் தக்க சாதனமாயிற்று.

## நான்காம் அதிகாரம்

# பிரித்தானிய ராஜாங்க மாளிகை, கைத்தொழில் மாளிகை முதலியன

**பிரித்தானிய ராஜாங்க மாளிகை.** இங்கிலாந்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் தாய்நாடாதலின் அத்தேசத்தவராகிய ஆங்கிலேயர் தங்கள் ராஜ்ஜியமுறை, ராஜ்ஜிய பாதுகாப்புக்கு வேண்டிய சாதனங்கள், வர்த்தகச்சிறப்பு, விளைபொருள், கைத்தொழிற்பொருள் முத



பிரித்தானிய ராஜாங்க மாளிகை.

லியவற்றை மற்றைய நாடுகளுக்கு விளக்கிக்காட்டுவது அவசியம். இங்கிலாந்தின் விளைபொருட்கள் வெகு சொற்பம். கைத்தொழிற் பொருட்களோ எண்ணிறந்தவை; வெகு நூதனமானவை. ராஜ்ஜிய முறையும் ராஜ்ஜிய உபகரணங்களும் மிகவுமற்புதமானவை. அபூர்வமும் அதிசயமுமான யந்திரங்களை நிரூபிப்பதில் ஆங்கிலேயர் நிபுணர். ஆகையால் அவர்கள் அவற்றைத் தங்கள் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட மற்றைய நாடுகளுக்குக் காண்பிப்பதற்காக மூன்று வெவ்வேறு மாளிகைகளைக் கட்டினார்கள். அவற்றுள் முதலாவது பிரித்தானிய ராஜாங்கத்து மாளிகை. மற்றைய கட்டடங்களைப் போலா

காது இதின் தாற்பரியம் முற்றிலும் வேறானது. இக்கட்டடம் உவெம்பிளி சிங்காரவனத்தின் ஒரு பக்கத்தில் மேற்கிந்திய தீவின் கட்டடத்திற்கும் நியூஸிலாந்தின் கட்டடத்திற்கும் மத்தியிற் கட்டப்பட்டது. அது அவ்வாறு ஒரு புறத்தேயமைந்திருப்பது இந்தியாவுக்கும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற் சேர்ந்த மற்றைய ராஜ்ஜியங்கட்கும் கௌரவ ஸ்தானத்தைக் கொடுப்பதற்கே போலும்.

இந்த மாளிகை மிகச் சிறந்ததேயாயினும் பெரிதல்ல. அது இரண்டடுக்கு மெத்தையையுடையது. முன்புறம் மிக்க உயரமுடையதாய் பார்வைக்கு வெகு உன்னதமாயும் கம்பீரமாயும் தோன்றும். நமது அரசரும் ராஜகுடும்பத்தவரும் பல்பொருட்காட்சிக்குச் செல்லுங்காலங்களில் தங்குவதற்குத் தகுந்த விசித்திர மண்டபங்கள் இம்மாளிகையிலுண்டு. இந்த மாளிகைக்கும் பற்பல தேசத்தவர் உவெம்பிளியிற் கட்டியுள்ள மற்றைய மாளிகைகட்கும் அதிக வித்தியாசமிருப்பதைக் காணலாம். பிரித்தானிய ராஜ்ஜியத்திற்கு மாத்திரம் சம்பந்தமான விஷயங்களுக்கும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பொது நன்மைக்கேற்ற விஷயங்களுக்கும், பிரித்தானிய ராஜாங்கத்தார் கைக்கொண்டிருக்கும் பெரு முயற்சிகளுக்கும் சம்பந்தமான காட்சிப்பொருட்கள் இம்மாளிகையில் இடம் பெறும். ஆங்கிலேய சுயாலங்கருதிச் செய்யப்படும் வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் முதலிய விஷயங்களுக்குச் சம்பந்தமான காட்சிப்பொருட்கள் இங்கு இடம் பெறா. இந்த மாளிகையில் மிகவும் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது கட்டடவாயிலின்கண்ணே அமைக்கப்பட்டுள்ள, உலகமுழுவதையும் காட்டும் மாதிரியொன்று. இதில் தரையைக்காட்டும் பாகம் உயர்ந்தும் ஜலத்தைக்காட்டும் பாகம் தாழ்ந்து முள்ளன. ஜலபாகம் நீரால் நிரப்பப்பெற்றும், தரைப்பாகம் நிலத்தைப்போல வர்ணமிடப்பட்டு பூமியில் ஆங்காங்கு காணப்படும் விசேஷமான மலைகள், ஆறுகள், ஏரிகள், பட்டணங்கள், மனுஷர், மிருகங்கள், மரங்கள், செடிகள் முதலியவை நன்றாய்ச் சித்திரிக்கப்பட்டு மிருக்கின்றன. இங்கு, கப்பல்களைப்போலச் செய்யப்பட்ட சிறு உருவங்கள் மின்சார சக்தியால் ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்திற்குச் செல்வதும் உலகத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு வர்த்தகப் பொருட்களை ஏற்றிக்கொண்டு போவதும் வெகு ஆச்சரியத்தை உண்டாக்கின.

ஆயினும் இதைவிட விசேஷமான இன்னொரு காட்சியொன்று இங்கேயுண்டு. கட்டடத்தின் கிழக்குப்புறத்தில் ஒரு பெரிய மேடையொன் றியற்றப்பட்டிருந்தது. இது சிற்பசாஸ்திர நிபுணருடைய இஷ்டப்பிரகாரம் நீராயும் நிலமாயும் மாறவல்லது. இங்கு ஆச்சரியமான கப்பற்படை, காலாட்படை, ஆகாயவிமானப்படை என்னுமிவற்றின் காட்சிகள் காட்டப்பட்டன. கப்பற்படை குண்டுப் பிரயோகஞ்செய்வதும், மகாயுத்தத்தில் நட்பரசர் ஸீப்ரூஸ் நகரைத் தாக்கிய காட்சியும் மிகவும் விபரமாயும் தத்ரூபமாயுமிருந்தன. ஆகாய விமானங்கள் ஆகாயத்திற் பறந்து செல்லும் விநோதமும் சப்மா ரீன் என்னும் முழுகுங்கப்பல்கள் நீரில் முழுகிக் குண்டுப்பிரயோகம் செய்வதும் பின்னர் நீரின்மேலெழுந்து தலையைக் காட்டுவதும் அப்பால் நீரில் மூழ்குவதும் வெகு விநோத காட்சிகளேயாம்.

இந்த மாளிகையில் பற்பல ராஜாங்க உத்தியோக சாலைகளும் சமுத்திரத்திற்கப்பாலுள்ள வெளித்தேசங்களில் ராஜாங்கத்தார் வர்த்தக விஷயமாய்ச் செய்யும் பெருமுயற்சிகளும், சுகாதாரம் விவசாயம் முதலிய முயற்சிகளும் காட்டப்பட்டன. இங்கு டெலிபோன் என்னும் தூர சத்தத்தைக் கேட்கச்செய்யும் விதம்விதமான யந்திரங்களும், மின்தபால் யந்திரங்களும், கம்பியில்லாது சமாசாரங்களைத் தெரிவிக்கும் யந்திரங்களும் அவற்றை உபயோகப்படுத்தும் முறையும் தெளிவாய்க் காட்டப்பட்டிருந்தன. இவ்வியந்திரங்கள் நூற்றுக் கணக்காய் அங்கு வேலை செய்துகொண்டிருந்தன.

இம்மாளிகையின் கீழ்வீட்டில் குடியேற்ற நாடுகளிலுள்ள விளை பொருட்கள், தாதுவர்க்கங்கள், கைத்தொழிற் பொருட்கள் முதலியவை காட்டப்பட்டன. கட்டடச்சுவரில் அவற்றைக்காட்டும் துணிப்படமொன்று தொங்கிக்கொண்டிருந்தது. சமுத்திரத்திற்கப்பாலுள்ள குடியேற்றநாடுகளில் ஆங்கிலேயரை வசிக்கச் செய்யவேண்டுமென்பதே இதின் நோக்கம். இந்த மாளிகையைக் கட்டுவதற்கும் காட்சிப் பொருட்களை ஜோடித்து வைப்பதற்கும் எட்டு மாசங்கள் சென்றன. இந்த மாளிகைக்குச் சென்று அங்குள்ளவற்றைக் கவனிப்பதினால் தற்காலத்திலுள்ள ஒரு பூரணமான ராஜ்ஜியத்திற்கு வேண்டியவை எவையென்பதை அறியலாம்.

**கைத்தொழில் மாளிகை.** Palace of Industry. கைத்தொழில் மாளிகை உவெம்பிளியிலுள்ள கட்டடங்களுளெல்லாம் ஆணிமுத்தே

போன்றொளிரும் விநோத கட்டடம். அது ஆங்கிலேயருடைய சிற்பசாஸ்திர உயர்வையும் கைத்தொழிற்றிறனையும் விளக்கிக் காட்டுகின்றமையால் அதுவே இப்பல்பொருட்காட்சியில் ஒரு காட்சிப் பொருளாக விளங்கினது. இங்கிலாந்தின் பேர்பெற்ற சிற்பிகளால் தற்கால சிற்பசாஸ்திர முறைக்கேற்க வெகு விநோதமா யியற்றப்பட்ட அம்மாளிகை பற்பல மண்டபங்களையும் மேடைகளையுமுடையதாய் லக்ஷக்கணக்கான கைத்தொழிற் பொருட்களுக்குறைவிடமாயிருந்தது. அங்கு காட்டப்பட்ட பொருட்கள் சுத்தமானவையாயும் கலப்பில்லாத அப்பட்டமான சரக்குகளாயுமிருந்ததுமன்றி அவை அழகிய பொட்டணங்களிலும், விநோதமான பெட்டிகள் பணிச்செப்புகள் முதலியவற்றிலும் சீசாக்களிலும் பத்திரப்படுத்தப்பட்டு வெகு சிறப்பாய் ஜோடித்து வைக்கப்பட்டிருந்தமையால் பார்ப்பவர்களைப் பிரமிக்கச்செய்தன. ஆகையால் அப்பொருட்களைக் கண்டது ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் உல்லாசத்தையும் கொடுத்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அந்த மாளிகையில் பின்வரும் முக்கியமான வஸ்துக்கள் காட்டப்பட்டன.

**ஆங்கிலேய ஔஷதங்கள்.** ஒரு லக்ஷம் பவுண் விலையுள்ள ஆங்கிலேய ஔஷதங்கள் கைத்தொழில் மாளிகையில் அழகாய் வைக்கப்பட்டிருந்தன. அங்கு காட்டப்பட்ட வாசனைத்திரவியங்கள், கூந்தலை வளர்க்கும் எண்ணெய்கள், தேகத்திற்குப் புஷ்டியைத்தரும் மருந்துகள் முதலியவற்றிற்குக் கணக்கேயில்லை. சாய தினுசுகளில் எத்தனையோ வகை அங்கு வைக்கப்பட்டிருந்தன. அங்குள பொருட்களைப் பார்ப்பதினால் இக்காலத்தில் வைத்தியம் முதலிய சாஸ்திரங்கள் எவ்வளவு விருத்தியடைந்திருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளலாம்.

**பருத்தியும் பருத்திநூற்றுணிகளும்.** பருத்திநூலும் பருத்திநூலாற் செய்யப்பட்ட பலவிதமான துணிகளும் நன்றாய்க் காட்டப்படவேண்டுமென்று ஆங்கிலேய வர்த்தகர் கொண்ட கொள்கைக்கேற்க, இரண்டரை லக்ஷம் பவுண் விலையுள்ள துணிகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. பலவிதமான துணிகளை நெசவுசெய்யும் யந்திரங்களும் அவை தத்தம் வேலையைச் செய்யும் சிறப்பும் மிக்க அதிசயத்தையும் நேத்திரானந்தத்தையும் கொடுத்தன. இப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தவிடம் முப்பதினாயிரமடி விஸ்தீரணமுடையது.

**கம்பளியும் கம்பளியினுற் செய்த துணிகளும்.** இவைக ளுள் பிராட்போர்ட் நகரத்துச் சரக்கு மிக்க விசேஷமானது. கம்பளித்துணிகள் மாத்திரமல்ல, அங்கிருந்து வந்த நெசவு தறிகளும் யந்திரங்களும் முதற்றரமானவை. சில யந்திரங்கள் கம்பளிநூல் நூற்பதையும் வேறு சில அவற்றைத் துணியாக நெசவு செய்வதையும் அங்கு காணத்தக்கதாயிருந்தது.

**பட்டுநூலும் பட்டுத்துணிகளும்.** பட்டுநூல் நூற்பதும் பட்டுத் துணிகளை நெசவுசெய்வதும் மிகவும் அருமையான வேலை. பல தேசத்திலுமிருந்து வந்திருந்த வர்த்தகர்கள் இங்கிலாந்தில் நெசவாகும் பட்டு மற்றைய தேசத்துப் பட்டுகளுக்குச் சிறிதும் தாழ்ந்ததன் றெனக் கருதி அதையே வாங்குவதற்கு ஆரம்பித்தனர். இங்கிலாந் திற்கு அதிக லாபத்தைத் தரக்கூடிய பொருட்களுள் பட்டு ஒன்று. அங்கு வைத்திருந்த பற்பல தினுசான பட்டுக்களின் தொகுப்பும் வெவ்வேறு வகையான பல வர்ணங்களின் வனப்பும் நெசவின் உறுதியும் ஸ்திரீகளையும் பட்டுநெசவுத் தொழிலிற் கைதேர்ந்த தொழி லாளர்களையும் கவர்வனவாயின. செலானீஸ் என்று சொல்லப்படு கிற இன்னெரு வகையான செயற்கைப்பட்டும், அது சம்பந்தமான நூல்கள், தறிகள், யந்திரங்கள் முதலியவைகளும் இந்த மாளிகையின் இன்னெரு பக்கத்தில் தனியாய் வைக்கப்பட்டிருந்தன.

**நெசவு சம்பந்தமான வெவ்வேறுவித உடைகள்.** உடை யென்ற வகுப்பைச்சேர்ந்த நெசவு பொருட்களாகிய தொப்பி கள், உடைகளிலேரங்களை அணிபெறச் செய்யும் தொங்கல் கள், சோபா நாற்காலிகளுக் குபயோகமான துணிகள், படுக்கை களுக்கு விரிக்கும் துப்பட்டிகள் முதலிய அநேகவிதமான நெசவு பொருட்கள் பன்னிரண்டாயிரம் சதுரவடி விஸ்தீரணமுடைய விடத்தில் பரப்பப்பட்டிருந்தன. இங்கு ஸ்திரீகளுடைய தற்கால மாதிரியான மேற்ஜோடுகளை நெசவுசெய்ய வல்ல யந்திரமொன் றையும் அதன்புறத்தே தினமொன்றுக்கு ஒரேஜோடு மேற்ஜோட்டை நெசவு செய்யும் கைத்தறியொன்றையும் காணலாம்.

**நகை தினுசுகள்.** இந்த வகுப்பில் சகலவிதமான நகைகள், பெரிய கெடியாரங்கள், சிறிய கைக்கெடியாரங்கள் முதலியவை அடங்கும். பற்பலவிதமான வைரம், மாகதம், புஷ்பராகம், கோமே தகம் முதலிய இரத்தினங்கள் எதேஷ்டமாய் அங்கு வைக்கப்பட்

டிருந்தன. உருவில்லாது மந்தமாயிருக்கும் வையிரக்கற்களை வெட்டிப் பட்டையடித்துப் பளீர்பளீரென்று பிரகாசிக்கும் வையிரமாகச் செய்யும் யந்திரமொன்று அங்கு வேலைசெய்துகொண்டிருந்தது. அதைப் பற்பல தேசத்து அரசரும் நமது இளவரசரும் பல பிரபுக்களும் பார்த்தானந்தித்தனர். உலகத்திலுள்ள கெடியாரங்களுள் மிகப் பெரிதான கெடியாரமொன்றும், உலகத்திலுள்ள கத்திகளுள் மிகப் பெரியதொன்றும் இங்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கத்தி 1,924 அலகுகளையுடையது.

ஊசிகளை எவ்விதம் செய்வதென்பதைக் காட்டுவதற்கு ஊசி செய்யும் யந்திரம்போல் ஒரு மாதிரி அங்கு வைக்கப்பட்டிருந்தது.

**கட்டட சாமான்கள்.** கட்டடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய எல்லாவிதமான சாமான்களும அங்கு காணப்பட்டன. பலவகையான சிமிட்டிச் சுண்ணும்பு, அவற்றைச் செய்யும்விதம், காற்றோட்டத்திற்கு அவசியம் வேண்டிய ஜன்னல்கள், பலவகையான இருப்புத் தூண்கள், உத்திரங்கள், வீடு வேய்வதற்குவேண்டிய கண்ணுடி ஓடுகள், சாதா ஓடுகள், கற்பலகைகள் முதலிய பலவிதமான சாமான்களும் பலவிதமான வர்ணங்களும் அங்கு காட்டப்பட்டன. பணம் நகை முதலியவற்றை வைத்துப் பத்திரப்படுத்தும் இரும்புப்பெட்டிகள் பல அங்கே யுண்டு. அவற்றுள் முப்பது டன் எடையுள்ள இரும்புப் பெட்டியொன்று மிகவும் ஆச்சரியமானது. அது அவ்வளவு பெரிதாயிருந்தும் ஒரு சிறு பையன் அதைப் பூட்டவும் திறக்கவும் தக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

**சங்கீதம்.** கட்டடத்தின் ஒரு பாகத்தில் பூர்வகாலம் முதல் இது வரையிலும் சங்கீதத்தின் பொருட்டு உபயோகிக்கப்பட்டுவரும் சகல விதமான வாத்தியக் கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. மின்சாரத்தின் சகாயத்தாற் பாடும் பியானோ வாத்தியமொன்றும் **கிராமபோன்** என்னும் பேசுங் கருவிகளும், இக்கருவிகளைச் செய்யும் விதமும் பற்பல துளைக்கருவி, நரம்புக் கருவிகளும் இங்கு காட்டப்பட்டன.

**சாஸ்திர சம்பந்தமான ஆயுதங்கள், படம் பிடிக்கும் கருவிகள் முதலியவைகள்.** கைத்தொழில் மாளிகையின் இன்னொரு பாகத்தில் உஷ்ணமளக்குங் கருவி, வாயுமானி, வைத்தியத்திற்கடுத்த ஆயுதங்கள், படம் பிடிப்பதற்கு வேண்டிய கருவிகள் முதலிய பலவிதமான ஆயுதங்களைக் காணலாம்.

**காகிதம்.** காகிதம், காகிதத்தில் அச்சிடும் பலவிதமான முறை, எழுதுவதற்கு வேண்டிய மை, பேனா, முதலியவைகள், காகிதம் செய்யும் முறை, அதற்கு வேண்டிய உபகரணங்கள் ஆகிய இவையெல்லாம் கைத்தொழில் மாளிகையின் இன்னொருபுறத்திற் காட்டப்பட்டன. இங்கு காகிதம் செய்யும் யந்திரமொன்று. காகிதம் செய்யுங் காட்சி மிக்க விநோதமானது. முப்பதங்குல அகலமுள்ள நூறடி காகிதத்தை அது ஒரு நிமிஷ நேரத்திற் செய்ய வல்லது. சகல விதமான காகிதங்கள், எழுதுவதற்கு வேண்டிய சாயான்கள், சகல விதமான சித்திர வேலைகள், போகரவேலைகள், கல்லச்சுவேலைகள் முதலியவற்றையும் இங்கே காணலாம்.

**ஆகாரத்திற்கு வேண்டிய வஸ்துக்கள்.** மனுஷருக்கு வேண்டிய மிகவும் முக்கியமான வஸ்து ஆகாரமாதலின் கைத்தொழில் மாளிகையில் நாற்பதினாயிரம் சதுரவடி விஸ்தீரணமுள்ள பாகம் ஆகார சம்பந்தமான சாமான்களுக்கென்று பிரத்தியேகமாய் விடப்பட்டது. ரொட்டி சுடுவதற்கு வேண்டிய உபகரணங்களும் விஸ்கோத்து, பலவிதமான பலகாரங்கள் முதலியவற்றைச் செய்யும் யந்திரங்களும் வெகு தூரம்வரையில் எட்டியிருந்தன. ஆகாரத்திற்கு வேண்டிய தானியங்கள் யாவையும் அங்கு காணலாம். பழரசத்தாற் செய்த இனிய குழம்புகள், பானத்திற்கேற்ற ஷர்பத்துகள், கிச்சிலிப்பழம் எலுமிச்சம் பழம் முதலியவற்றாற் செய்தபாகுகள், இவையாவும் வெகு அழகாயும் எதேஷ்டமாயும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவை அநேகர்க்குப் பெருமகிழ்ச்சியையும் வியப்பையு முண்டாக்கிற்று. மனுஷன் ஆகாரமாய்க் கொள்ளும் சமஸ்த வஸ்துக்களும் அங்கு காணப்பட்டமையால் அது மிகவும் பூரணமான காட்சியாம்.

**புகையிலை.** இதற்கென்று குறிப்பிடப்பட்டவிடத்தில் பலவிதமான புகையிலைகள் சுருட்டுகள் முதலியவைகளும், சுருட்டுச் செய்யும் விதமும் காண்பிக்கப்பட்டன. வேர்ஜினியா, புகையிலைக்குப் பேர்போன ஸ்தலமாகையால், அங்குள்ள சுருட்டுச் செய்யும் வீடொன்றைப்போல ஒரு மாதிரி செய்து இம்மாளிகையில் வைக்கப்பட்டிருந்தது, தினமொன்றிற்கு 350,003 சுருட்டுகளைச் செய்ய வல்ல யந்திரமொன்று பல்லாயிரம் ஜனங்களுக்கு மிக்க ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

றப்பர். Rubber. இந்த மிகவும் முக்கியமான வஸ்து எப்படிப் பலவிதமாய் உபயோகப்படுகிறதென்பது இம்மாளிகையில் அதை நேரிற் பார்த்தவர்களுக்கே தெரியும். இந்த மாளிகைக்குள் அதற்கென்று இன்னொரு சிறிய கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அது மிகவும் அலங்காரமாயிருந்தமையால் அதையும் ஒரு மாளிகையென்றே சொல்லத்தகும். அதின் முன்பக்கத்தில் இருபுறமும் றப்பர் செடிகள் அடர்ந்த ஒரு தலைவாயில் அமைக்கப்பட்டிருந்தது. றப்பர் மாளிகைக்குச் செல்வோர் அத்தலைவாயில் வழியாகத்தான் செல்ல வேண்டும். அங்கு தரை, சுவர் கட்டடத்தின் மேற்புறம் முதலிய யாவும் றப்பர் மயமாகவே விளங்கின. சிறிய பொம்மைகள், தரையில் விரிக்கும் பாய்கள், வண்டிப்பாய்கள், படுதாக்கள், மோட்டார் வண்டிச் சக்கரங்கட்குரிய கட்டுகள் முதலிய பலவிதமான சாமான்களை அங்கு ஜனங்கள் கண்டு களித்தனர்.

வெடி மருந்துகள். வெடி மருந்துகள் எவ்வாறு உபயோகப்படுகின்றன வென்பதைக் காட்டும் மாதிரியொன்று இங்கு காட்டப்பட்டது. வெடிமருந்து, துப்பாக்கி, பீரங்கி முதலியவைகளுக்கும், மலைகளிலும் சுரங்கங்களிலுமுள்ள பாறைகளைப் பிளப்பதற்குப் பின்னும் பல வேலைகளுக்குமுபயோகமாவதையும் அந்த மாதிரி காண்பித்தது.

விநோதமான சாமான்கள். இவைகளுக்கென்று குறிப்பிடப் பட்டவிடத்தில குடும்பங்கட்குபயோகமான பல சில்லறைச் சாமான்கள் ஜனங்களைக் கவர்வனவாயின. அவற்றிற் சில மிகவும் நூதனமானவை: காப்பிக்கொட்டையை அரைக்கும் யந்திரம், உருளைக்கிழங்கின் தோலையுரிக்கும் யந்திரம், தேய்நீர் வடிகட்டி, பலவித ஜல்லடைகள் முதலிய பல்லாயிரம் சில்லறைச்சாமான்களை அங்கு காணலாம். மின்சாரத்தின் சகாயத்தால் தையல் வேலை செய்வது எவ்விதமென்று அங்கு காட்டப்பட்டது. இப்பொழுது விசேஷமாய் வழக்கத்தில் வந்துகொண்டிருக்கும் பலவகையான அலுமினியப் பாத்திரங்கள் அங்கு ஏராளமாய்க் காணப்பட்டன.

ஆட்டக்கருவிகளும் விளையாட்டுச் சாமான்களும். இக்காலத்தில் இவைகள் அதிகமாய் உபயோகப்படுகின்றன. விதம்விதமான பந்துகள், பந்தடிக்கும் கருவிகள், கொல்வ் ஆடுவதற்குபயோகமான தடிகள், சதுரங்கம் முதலிய ஆட்டங்களுக்குரிய கருவிகள், பிள்ளை

களுக்கேற்ற விதம்விதமான பொம்மைகள், ஓடும் மிருகங்கள், கீச்சிடும் குருவிகள், ரயில் வண்டிகள், மோட்டார் வண்டிகள் முதலிய எண்ணிறந்த விளையாட்டுச் சாமான்கள் சிறுவருக்கும் பெரியோருக்கும் பேரானந்தத்தை யுண்டாக்கின.

**பாத்திரங்களும் கண்ணாடிச் சாமான்களும்.** இவற்றின் தொகை எண்ணுளடங்கா. இங்கிலாந்து சென்ற இருநூறு வருஷகாலமாக மிகவும் நயமான பாத்திரங்கள் பீங்கான்கள் செய்வதில் மிகவும் பெயர்பெற்றது. அதின் வடபாகத்தில் மட்கலங்கள் விசேஷமாய்ச் செய்யப்படுகின்றன. ஆகையால் அநேக நூதனமான பாத்திரங்கள், தேக்கோப்பைகள், பொன்முலாமிட்ட பீங்கான்கள், தட்டுக்கள், ஜாடிகள், கண்ணாடிக் குளாப்புகள், லஸ்டர்கள், ரசக்குண்டுகள், கண்ணாடிப்பாத்திரங்கள் முதலிய எண்ணிறந்த விநோத சாமான்கள் அவைக்கென்று குறிக்கப்பட்ட மண்டபத்தில் அலங்காரமாய் அடுக்கப்பட்டிருந்தன.

**தோலும் தோற் சாமான்களும்.** தோற் சாமான்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட விடத்தில் தோல் எந்தெந்த விதமாய் உபயோகப் படுத்தப்படுகிறதோ அந்தந்த விதமெல்லாம் காட்டப்பட்டிருந்தன. ஸ்திரீகளும் புருஷரும் அணிந்துகொள்ளும் பலவகையான ஜோடுகள், தோற்பைகள், உடுப்புப் பெட்டிகள், அரைக்கச்சுகள், மெத்தைகள், குதிரை உடுப்புகள் முதலிய எண்ணிறந்தனவாய சாமான்கள் சாதாரண ஜனங்களையும் வர்த்தகரையும் ஒருங்கே கவர்ந்தன. இவை தோலினாற்செய்து முடிந்த சாமான்கள். இவையன்றி, சுத்தமாய்ப் பதனிட்டு வேலைசெய்வதற்குப் பக்குவமான ஆட்டுத்தோல், மாட்டுத்தோல், குதிரைத்தோல், மான்தோல், ஒட்டகத்தோல் முதலிய பல மிருகங்களின் தோல்கள் மண்டபமெங்கும் நிறைந்திருந்தன. அவற்றுட் சில வெகு மென்மையும் நயமான தன்மையுமுடையனவாய், பட்டுத்துணிபோல் பார்வைக்கு வெகு அழகாயிருந்தமையால் அவை தோல்தானென்று கண்டறிவது நிபுணருக்கும் அசாத்தியமாயிற்று.

**வீட்டுச் சாமான்களும் அலங்கார வஸ்துக்களும்.** இவைக்கென்றமைக்கப்பட்ட விடத்தில் கடைச்சல் வேலை, சிற்றுளிவேலை முதலிய அற்புதமான வேலைப்பாடமைந்த நாற்காலிகள், மேசைகள்,

பீரோக்கள் முதலியனவும், பற்பல வர்ணமுடைய புஷ்பங்களும் செடிகொடிகளும் சித்திரிக்கப்பட்ட அலங்காரமான துணிகளில் பஞ்சை மெத்தெனவூட்டி அணிபெற வமைத்த சோபாக்களும் விளங்கின. இவை இங்கிலாந்தின் மரவேலைச் சிறப்பைக் காட்டின. இவையன்றி, வினோதமான படுதாக்கள், கம்பளங்கள், ஜமுக்காளங்கள், சுவருக்கொட்டுங் காகிதங்கள் முதலியவைகளும் அங்கு காணப்பட்டன. உரப்பான துணியில் பலவகையான வர்ணமிட்டு நிலத்தில் விரிக்கும்படியான கம்பளங்கள்போலவும் சலவைக்கல் பரப்பிய தளவரிசைபோலவும் செய்யுந் தொழிலில் ஆங்கிலேயர் மிகக் கைதேர்ந்தவர்கள். அவ்வகையான துணிக்கு லினோலியம் என்று பெயர். சலவைக்கல் பரப்பிய தளவரிசைபோல் செய்யப்பட்டுள்ள லினோலியம் தூரப்பார்வைக்குச் சலவைக்கல் பதித்த தளம் போலவே காணப்படும். லினோலியத்தில் ஜலம் ஊறாது. ஆகையால் அது தரையில் விரிக்கவும் சுவரில் ஒட்டவும் உபயோகப்படுகிறது. அதில் பல தினிசுகள் அங்கு காண்பிக்கப்பட்டன. அதினால் தயார் செய்யப்பட்ட ஸ்நான மண்டபமொன்று ஜனங்களுக்கு வியப்பைக் கொடுத்தது.

**லேஸ் என்னும் விசித்திரமான பின்னல் வேலை.** இங்கிலாந்தில் நோற்றிங்ஹாம், ஆயிர்ஸ்ஷயர் என்னுமிரண்டு மாகாணங்களும் இவ்விதமான பின்னல் வேலைக்குப் பேர்போனவை. அங்கு விதம் விதமான லேஸ், ஜாலர்கள், நாடாக்கள், கொசுவலைகள், ஆங்கிலேய மாதர் முகத்தை மூடித்தரித்துக்கொள்ளும் மெல்லிய வலைகள், படுதாக்கள் முதலியவை செய்யப்படுகின்றன. அவையனைத்தும் கைத்தொழில் மாளிகையி னொருபுறத்தே வெகு அழகாய்ப் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. பல்பொருட் காட்சியைக் கண்டு களிக்க வந்த ஸ்திரீகள் அவற்றை வெகு பிரீதியோடு பார்த்ததுமன்றி அவற்றில் பல தினிசுகளை விலைக்கு வாங்கியும் கொண்டார்கள்.

இவ்விதமாய்க் கைத்தொழில் மண்டபத்தில் வந்து மலைபோற் குவிந்திருந்த கைத்தொழிற் பொருட்கள் இத்தன்மையுடையவையென்றும் இவ்வளவினவென்றும் கூறுதல் எவர்க்கு மியலாது. மண்டபங்களனைத்தும் இச்சரக்குகளினால் தேங்கி வழிந்து நின்ற காட்சியும், பிரதிதினமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அம்மண்டபங்கட்குச் சென்று அவற்றைக் கண்ணுற்ற காட்சியும் வர்த்தகர் வெகு உல்லா

சத்தோடு தத்தம் பொருட்களை ஜனங்களுக்குக் காண்பித்து அவைக ளின் விசேஷங்களை அவர்களுக்குத் தெரியச்சொன்ன காட்சியும், இடையிடையே ஆங்குள சிற்றுண்டிச் சாலைகளில் ஆடவர் அரிவை யர் என்னுமிருபாலாரும் காப்பி, தேய்நீர், சிற்றுண்டி முதலிய வற்றை அருந்திக் களித்த காட்சியும், அவற்றைக் கண்டவர்க்கு நெடுங்காலம் உளத்தைவிட்டகலா.

இன்னும் இம்மாளிகையில் மிகவுமாச்சரியமான சில காட்சிகள் காணப்பட்டன. லக்ஷக்கணக்கான ஸோப்புக்குமிளிகளை ஆகாயத்தி லெறியும் ஸோப்பு நீர்க்குழாயொன்று அங்கமைக்கப்பட்டிருந்தது. அது சுமார் இருபதடி உயரத்திற்குக் குமிளிகளை எறிந்துகொண் டிருந்தது; பல வர்ணமான மின்சார வெளிச்சத்தில் அந்தக் குமிளிகள் பல வர்ணமுடைய ரசக்குண்டுகள் லக்ஷம் லக்ஷமாய் ஒரு குழாயினின்றும் மேலே கிளம்புவதுபோலத் தோன்றின. இது ஸோப்பு வர்த்தக சங்கங்களனைத்தும் ஒன்றுசேர்ந்து தங்கள் பலவகைப்பட்ட சரக்கை ஜனங்களறிவதற்குச் செய்த உபாயம்.

இன்னோரிடத்தில் ஊசிகளுக்குக் கண்ணிடும் யந்திரமொன்று அமைக்கப்பட்டிருந்தது. அது ஒரு நிமிஷத்திற்கு இருநூற்றைம் பது ஊசிகளுக்குக் கண்ணிட்டது மிக்க வியப்பை உண்டாக் கிற்று.

பின்னுமொரு இடத்தில் தானேய்ச் சுற்றுகிற இரும்புப்பெட்டி யொன்று நிறுத்தப்பட்டிருந்தது. அது மின்சாரத்தின் சகாயத்தால் சுற்றுவது. இராக்காலத்தில் அது சுற்றிக்கொண்டேயிருக்கும் இயல் புடையது. திருடர் அதை நிறுத்திவிட்டால் அதிலுள்ள வெளிச்சம் அணைந்துபோம்; உடனே அதன்கண்ணுள்ள மணிகள் கணீர் கணீரென்று சப்திக்கும். அப்படி சப்திப்பதனால் திருடன் அகப் படுவதற்கு ஏதுவாகின்றது.

ஜனங்களுக்கு மிக்க வியப்பைத் தந்த பின்னொரு விஷயம் பூமி யில் யாதொரு விதமான சம்பந்தமுமில்லாமல் ஆகாயத்தினின்றும் தொங்கிக்கொண்டிருந்த நீர்க்குழாயொன்று. அந்தக் குழாய் அவ்வித மான சம்பந்தமொன்றுமில்லாதிருந்தும் ஏதேஷ்டமான ஜலத்தைக் கொட்டிக்கொண்டிருந்தது. இதற்குக் காரணமென்னவென்று கவனிக்கத்தக்கது.

இனி, உலகத்திலுள்ள மிகப்பெரிய பேரிகையொன்றும், மிகவும் நுண்ணிய கைக்கெடியாரமொன்றும், உலகத்தின் மிகப்பழைய கிறிக்கட் பாட் ஒன்றும், நாற்பத்தைந்தடி நீளமுள்ள புதுமாதிரியான ஜீவாதாரப் படவொன்றும், மிகவும் நுண்ணிய புகைச்சுருட்டொன்றும் அங்கு ஜனங்கள் பார்த்து அதிசயித்த விநோதப் பொருட்கள்.

**யந்திர மாளிகை.** Palace of Engineering. இவ்வற்புதமான மாளிகை ஐந்து லக்ஷம் சதுரவடி விஸ்தீரணமுடையது. உலகத்தில் சுண்ணும்பினாலாய செயற்கைக் கற்களினாலும் இரும்பினாலும் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டடங்களுள் இதைப்போலும் பெரிது வேறொன்றில்லை. இதின் உண்மையழகை வர்ணிப்பதற்கு ஆயிரம் நாவமைந்திருப்பினும் போதாது. அது சிற்பசாஸ்திரத்தில் வல்லவர்க்கன்றி, ஏனைய சாமானியமான ஜனங்களுக்கும் பெருவியப்பைத் தரவல்லது. உவெம்பிளி சிங்கார வனத்திலுள்ள பின்னுஞ் சில கட்டடங்களைப்போலவே இதுவும் தெய்வலோக நிர்மாணமோவென்று எவருமையுறும் வண்ணம் இயற்றப்பட்டதோர் விநோத கட்டடமேயாயினும் இதற்கீடான மாளிகை உலகிலில்லையென்றே சொல்லத்தக்கது. ஆகையால் இவ்வற்புத மாளிகையே உவெம்பிளியிலுள்ள காட்சிப் பொருட்களிலெல்லாம் சிறந்ததாக விளங்கிற்று. இதின் பெருமையையும், பேரழகையும், பருமனையும் கண்டு புகழாதவர் யார்?

இம்மாளிகை, காட்சியின்பொருட்டுப் பற்பல விநோதமான யந்திரங்களமைக்கப்பெற்ற நீண்ட பல மண்டபங்களையுடையது. ஒவ்வொரு மண்டபமும் பற்பல பிரிவாய் வகுக்கப்பட்டும் ஒவ்வொரு பிரிவிலும் அநேகவிதமான யந்திரங்கள் நிறுத்தப்பட்டுமிருந்தன. இம்மண்டபங்களினிடையில் ஜனங்கள் தாராளமாய்ச் செல்வதற்கேற்ற அகன்ற வழிகள் உண்டு. லக்ஷக்கணக்கான யந்திரங்கள் இம்மாளிகையை நிரப்பியிருந்தன. மேலும் அங்குவந்த யந்திரங்கட்குப்போதிய விடமகப்படாமையால் அநேக யந்திரங்களை ஒன்றோடொன்று நெருக்கிவைக்க வேண்டியதாயிற்று. அவற்றுட் சில நூற்றைம்பது டன் எடையுள்ளவைகள். அவற்றைத் தொழிற்சாலையாகிய மூலஸ்தானத்திலிருந்து அங்கு கொண்டு வந்து சேர்ப்பது எளிதான காரியமல்ல. இந்தக் கட்டடத்தின் கீழ்ப்புறத்தில் நான்கு வரிசையான அகன்ற புகைவீதித் தண்ட

வாளங்கள் இடப்பட்டிருந்தன. இந்த நான்கு வீதிகளும் இங்கிலாந்தின் முக்கியமான புகை வீதிகளோடு கலக்கின்றன. ஆகையால் மிகவும் பாரமான யந்திரங்களையும் எளிதில் யந்திரமாளிகைக்குக் கொண்டுவரக்கூடியதா யிருந்தது. யந்திரங்களேற்றப்பட்டிருக்கும் ரயில் வண்டிகள் இம்மாளிகையைச் சேர்ந்தவுடன் அவைகளைத் தூக்கி அவற்றிற்குரிய ஸ்தானத்தில் வைப்பதற்காக அநேக பாரந் தூக்கும் யந்திரங்கள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன.

இவ்வியந்திர மாளிகை ஜனங்கள் எளிதிற்கண்டு களிக்கும் வண்ணம் ஐந்து பாகங்களாக வகுக்கப்பட்டிருந்தது. பொதுவாய் சிற்ப சாஸ்திரத்திற்கடுத்த யந்திரங்களும் உபகரணங்களும் முதலாவது பாகத்திற் காட்டப்பட்டன. இந்தப் பாகம் இம்மாளிகையில் சுமார் அரைவாசிவரையி லிருக்கும். இங்கு வைக்கப்பட்டிருந்த காட்சிப்பொருட்கள் யாவும் பிரித்தானிய சிற்பசாஸ்திர சங்கத்தவருடைய பெருமுயற்சியாற் சேகரிக்கப்பட்டவை. பல்பொருட் காட்சியின் பொருட்டு வரும் ஜனங்களுக்கு இங்குள்ள காட்சிப் பொருட்களால் நேரிடும் பலவிதமான சந்தேகங்களை நிவாரணஞ் செய்யும்பொருட்டும், அவற்றின் உபயோகம், விலை முதலிய விபரங்களைத் தெரிவிக்கும்பொருட்டும் அங்கு அவர்கள் சிற்ப சாஸ்திர நிபுணரான சிலரை நியமித்திருந்தனர். உருக்கப்படாத இரும்பு முதலிய லோக வகைகளையும், அவற்றாற் செய்யப்பட்ட நூதனமான பிரகாசம் பொருந்திய பலவித சாமான்களையும் ஒன்றின் பக்கத்திலொன்றாக வைத்துக் காட்டினது பெரும் வியப்பைத் தந்தது. தாதுவர்க்கங்களை முதலில் சுத்தப்படுத்தும் முறையைக் காண்பிக்கும் அநேக காட்சிகள் சிற்ப சாஸ்திரங் கற்போர்க்கு மிக்க பிரயோசனமுடையதாயிற்று. பின்னர் அவை யந்திரமாவதற்குமுன் அதன் வெவ்வேறு பாகங்களாவதும் ஈற்றில் அவையனைத்து மொன்றாசேர்ந்து யந்திரமாய் முடிவடைவதும் பெருவினோதமன்றோ? மனதால் நிதானிக்கக்கூடாத அபார சக்தியுடைய தீச்சுவாலைகள் இரும்பை யுருக்கி நீர்போலோடச்செய்வதும் அவ்வாறு மாறுதலடைந்த இரும்பு,தண்டவாளங்களாகவும் யந்திரங்களுக்கேற்ற சக்கரங்களாகவும் வேறு பலவகையான சாமான்களாகவும் நொடிப்பொழுதில் மாறுதலடைவதும் எத்தனை ஆச்சரியம்? மனுஷ யுக்திக்கும் சாஸ்திர விற்பத்திக்கும் எட்டியவரையில், வெகு நிதானமாயும் சுத்தமாயும் விவேகமாயும் செய்யப்பட்ட யந்திரங்கள்

பார்த்தவர்கள் திகைக்குமாறு அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறப்பை என்னென்றுரைப்பது. அவை தற்காலத்துச் சிற்ப சாஸ்திரத்தின் அதிசயங்களை விளக்கிக் காட்டுகின்றனவன்றோ?

மின்சாரத்தை உண்டாக்க வல்ல யந்திரங்களும் அவற்றின் பற்பல பாகங்களும் மின்சாரத்தாலியங்கும் பலவகையான யந்திரங்களும் அவை சம்பந்தமான பல உபகரணங்களும் இரண்டாவது பாகத்தில் காணப்பட்டன. இவை பிரித்தானிய மின்சார சங்கத்தாருடைய பெருமுயற்சியால் ஏற்படுத்தப்பட்டன. மின்சாரத்தைக் குறித்துப் பூர்வகாலத்தவர்கள் யாதுமறிந்திலர். இக்காலத்தில் மின்சாரம் உலகத்திற்கு உயிர்போலாய்விட்டது. அதின் சகாயத்தாற் செய்யப் படும் வேலைகளும், அது உபயோகப்படும் தேசங்களும் எண்ணிறந் தவை. தூரதேசங்களில் நடக்கும் சமாசாரங்களைத் தெரிந்து கொள்வதும், விளக்குகள் எரிவதும், பங்காக்களாடுவதும் மின்சாரத் தின் சகாயத்தாலேதான். இப்பொழுது கப்பல்களும், படவுகளும், புகைவண்டிகளும், பற்பலவகையான பெரிய யந்திரங்களும் அதினால் இயங்குகின்றன. அம்மட்டில் நில்லாது மின்சார சகாயத்தால், இக் காலத்தில் வீடுகளைப் பெருக்கவும், உடுப்புக்களைச் சுத்திசெய்யவும், சமையல் செய்யவும், ரொட்டி செய்வதற்குவேண்டிய மாவைப் பிசையவும் கூடியதாயிற்று. இவையனைத்திற்கும் வேண்டிய யந்திரங் களும் உபகரணங்களும் மின்சார சம்பந்தமான சாமான்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டவிடத்தை நிரப்பின.

மின்சார விருத்தியின் அதிசயங்களை அறியவேண்டுமென்னும் ஆவலுள்ளவர்களுக்குப் பல்பொருட் காட்சியில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான மின்சார சக்திஸ்தானம் (Power Station) வியப் பைத் தருமென்பதற்கு ஐயமில்லை. இந்த சக்திஸ்தானம் ஆறாயிரம் குதி ரைகளின் பலமுடையது. உவெம்பிளியின் கண்ணே நடைபெற்ற பல்பொருட்காட்சிக்கு வேண்டிய தீபங்களை ஏற்றுவதற்கு வேண்டிய மின்சார சக்தி முழுவதும் அந்தச் சக்திஸ்தானத்திலிருந்து உற்பத்தியா யிற்று. இங்கிலாந்திலுள்ள சமஸ்த மின்சார வர்த்தக சங்கங்களும் இந்த சக்திஸ்தானத்தைப் பூரணமாக்குவதற்குத் தங்களாலியன்றளவு உதவி புரிந்தன. இப்படிப்பட்ட பல்வேறு யந்திரங்களும் யந்திர வுபகரணங்களும் உலகத்தின் வேறெந்தப் பாகத்திலும் ஒன்றாய் அமைந்து கருதியவாறு பயனைத்தருவது அரிய காட்சியாம். இந்தப் பிர

மாண்டமான மின்சார மூலசக்திஸ்தானம், லக்ஷக்கணக்கான தீபங்களை ஏற்றி உவெம்பிளி சிங்காரவனத்தைக் அநேக சூரியர் ஒருங்கே பிரகாசித்தாற்போல விளங்கச் செய்ததுமன்றி அங்குள்ள யந்திரங்கள், பங்காக்கள், வண்டிகள் முதலியவை இயங்குவதற்கும் வேண்டிய சக்தியை அளிப்பதாயிற்று. உற்று நோக்குமிடத்து மின்சார சக்தியாற் செய்யமுடியாதது ஒன்றுமேயில்லையென்று கூறலாகும்.

மின்சாரத்தைக் கைத்தொழிலுக் குபயோகப்படுத்தும்படியான யந்திரங்கள் ஏராளமானவை அங்கே காணப்பட்டன. மின்சாரத்தினுலியங்கும் தையல் யந்திரங்கள், அச்சியந்திரங்கள் முதலிய பலவிதமான யந்திரங்கள் அங்கு வேலைசெய்துகொண்டிருந்தன.

இன்னொரு பாகத்தில் மோட்டார் வண்டிகளும் மோட்டாரின் சகாயத்தாலியங்கும் பலவிதமான இடப்பெயர்ச்சிக்குரிய சாதனங்களும் சுமார் ஐம்பதினுயிரம் அடி விஸ்தீர்ணமுடைய இடத்தை அடக்கியிருந்தன. இதுவே மூன்ருவது பாகம். மோட்டார் வண்டிகள், மோட்டார் இடப்பெயர்ச்சிக்குரிய சாதனங்கள் சம்பந்தமான விஷயங்கள் யாவும் பிரித்தானிய மோட்டார் நிர்மாண சங்கத்தாராலும் மோட்டார் வர்த்தக சங்கத்தாராலும் ஏற்பாடு செய்யப்பட்டன. பிரபுக்கள் சவாரிசெய்யும் புது மாதிரியான பலவித உயர்தர மோட்டார் வண்டிகள், வாடகைக்குச் செல்லும் சாதாரண மோட்டார் வண்டிகள், நடுநிலையினர்க்குரிய சாதாரண சவாரிவண்டிகள், வர்த்தகப் பொருட்களைக்கொண்டு செல்லவல்ல பாரவண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், அவற்றிற்குரிய பல்லாயிரம் விதமான சாமான்கள் யாவும் அங்கு ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் காண்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தவிடம் பெரிதாயிருந்தபோதிலும் போதிய இடமில்லாமையால் அநேகவிதமான வண்டிகளைக் காண்பிப்பதற்கு சாத்தியப்படவில்லை. இங்கிலாந்திலுள்ள பிரசித்திபெற்ற மோட்டார் பட்டடைக்காரர் இப்பெருங்காட்சியில் தத்தம் வண்டிகளைக் காட்டினமையால் அவர்களுடைய வண்டிகளை அநேகர் வாங்குவதற்கு ஏதுவாயிற்று. அதனுல் அவ்வர்த்தகர் வெகு லாபத்தையடைந்தனர்.

எஞ்சீனிலும் செல்லவல்ல புகைக்கப்பல்களையும் மற்றைய கலங்களையும் கட்டுவதற்கு வேண்டிய யந்திரங்களும் சாமான்களும் நான்காவது பாகத்திலமைக்கப்பட்டன. இங்கிலாந்திலுள்ள பிரபல

மான புகைக்கப்பற் சங்கங்கள் யாவும் தங்கள் கப்பல்களையும், சமுத்திரத்திற் பிரயாணஞ்செய்வதற்குத் தாம் செய்துள்ள சாதனங்களையும், துறைமுகங்களிற் பிரயாணிகளுடைய சௌகர்யத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மேடைகள், பாரந்தூக்கும் யந்திரங்கள், மோட்டார் படவுகள் முதலியவற்றையும் காட்டும் மாதிரிகளை அங்கு வைத்துக் காட்டினார்கள். தற்காலத்தில் பிரயாணத்திற்குபயோகமாகும் கப்பல் எவ்வாறு வேலைசெய்கிறதென்றும், அதின் பற்பல பாகங்களெவை யென்றும், அதன் யந்திரம் எங்கு அமைக்கப்பட்டிருக்கின்றதென்றும், அதை மனுஷன் எவ்வாறடக்கித் தன்னிஷ்டப்படி போகவும் வரவும் நிற்கவும் செய்கிறானென்றும் கப்பல்களை நீரிற்செலுத்தும் சக்தி எதுவென்றும் அந்த மாதிரிகள் மூலமாய் ஜனங்கள் அறிய ஏதுவாயிற்று.

லண்டன் நகரத்துத் துறைமுக அதிகாரிகள், அந்த நகரத்தில் கப்பல்களைப் பழுதுபார்க்கும் வண்ணம் தம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பெரிய கப்பற்றுறையை விளக்கிக்காட்டும் மாதிரி யொன்றையும் டில்பெறியில் பிரயாணிகளை இறக்குவதற்காகத் தாங்கள் செய்திருக்கும் விசேஷ ஏற்பாடுகளைக் காட்டும் மாதிரி யொன்றையும் அங்கு வைத்திருந்தார்கள். இவ்விதமாய் லண்டன் நகரத்தைப் பிரபல்யப்படுத்தி உலகத்தின் பல பாகங்களிலிருந்து வரும் ஜனங்கள் லண்டன் நகரில் வந்திறங்கும்படி செய்யவேண்டுமென்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

லிவர்ப்பூல் நகரத்துத் துறைமுகத்தில் முப்பத்தேழு மைல் நீளமுள்ள கப்பல்மராமத்துத் துறையில் பிரமாண்டமான பிரயாணக் கப்பல்கள் வருவதும் போவதும்போல் காட்டும் மாதிரியொன்றும், கப்பல்கள் செல்வதற்காக மான்செஸ்டர் நகரத்தில் வெட்டப்பட்ட புதிய கால்வாயில் கப்பல்கள் போவதும் வருவதும்போல் காட்டும் மாதிரியொன்றும் ஜனங்களைப் பிரமிக்கச் செய்தது. அதேபிரகாரம் பிறிஸ்டல் நகரத்துத் துறைமுகமும் அதின் விசேஷமும், அதின் அறுபத்துமூன்று ஏக்கர் விஸ்தீரணமுடைய கப்பல்மராமத்துத் துறையும், சுமார் இரண்டரை லக்ஷம் டன் எடையுள்ள சரக்குகள் வந்திறங்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள பண்டகசாலைகளும் ஒரு பெரிய மாதிரியின் மூலமாய்க் காட்டப்பட்டன.

அடுத்த பாகத்தில் ரயில்வண்டிகள், அவை சம்பந்தமான பலவித சாமான்கள், அவற்றை இழுத்துச் செல்லும் யந்திரவண்டிகள் அவற்றின் பற்பல பாகங்கள் முதலியவை காட்டப்பட்டன. பிரதமத்தில் ஸ்டிவின்ஸன் செய்த, மணியொன்றுக்கு எட்டு மைல் செல்லக்கூடிய யந்திரவண்டியையும் இக்கால சாஸ்திர விற்பத்திற்குத் தக்கவாறு அனேகவிதமான திருத்தங்களை யடையப்பெற்று மணியொன்றுக்கு நூறு மைல் செல்லக்கூடிய யந்திர வண்டியையும் ஒன்றின் பக்கத்திலொன்றாய் அங்கு வைத்திருந்தது நீராவியாலியங்கும் வண்டிகள் எவ்வளவு திருத்தமடைந்திருக்கின்றனவென்பதை ஜனங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்வதற்குக் காரணமாயிற்று. மலைபோன்ற பருமனும் உறுதியுமுடையனவாய் ஓடும்போது பூமியை அதிரச்செய்யும் பெரிய யந்திரவண்டிகளும், அரசரும், ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களும் பிரயாணஞ் செய்வதற்கேற்றனவாய், பட்டுமெத்தைகளும் நிலைக்கண்ணாடிகளும், மின்சார விளக்குகளும் விசித்திரமான விசிறிகளும் இடப்பட்ட ஸாலூன் வண்டிகளும், சாதாரண ஜனங்களுக்கேற்ற பலவிதமான பிரயாண வண்டிகளும், சாமான்வண்டிகளும், அவ்வண்டிகளுக்குரிய அச்சு, வில்லு, சக்கரம் முதலிய பலவிதமான சாமான்களும் அங்கு நிறைந்திருந்தன.

ஆங்கிலேய கைத்தொழிலின் பெருமையும், பிரசித்தியும், மகிமையும் யந்திரவித்தையால் ஏற்பட்டவை. வேறு தேசங்கள் அவ்வித்தையில் இங்கிலாந்தைவிட மேலான விவேகமுடையவையாயிருக்கலாம். ஆயினும் பலமும், நெடுங்கால முழைக்கக்கூடிய தன்மையுமுடைய பெரிய யந்திரங்களை யியற்றுவதில் இங்கிலாந்திற்கிணையான தேசம் வேறில்லை. மேலைத் தேசத்தவருடைய யந்திரசாஸ்திர விற்பத்தியை நன்குணர்ந்தவர்கள், 'அவர்கள் இறந்தவரை உயிர்ப்பிக்க மாத்திரம் வகையறியார், மற்றைய யாவும் செய்வர்' என்று ஆங்கிலேயரைப் புகழ்ச்சியாய்க் கூறுவதுண்டு. யந்திரமாளிகையின் கண்ணே தோற்றிய பல்லாயிரம் யந்திரங்களை நன்றாய் ஆராயும்போது அவர்கள் கூற்று உண்மையென்றெண்ணும்படி அவை பிரமிக்கச்செய்யும். இங்கிலாந்தின் யந்திர சாஸ்திர நிபுணரும் அவர்களாலியற்றப்பட்ட எண்ணிறந்த யந்திரங்களும் இவ்வுலகின் கண்ணே செல்லாத பாகமில்லை. மேலைத்தேசத்தவருடைய யந்திரங்களும் சிற்ப சாஸ்திரத்திற்கடுத்த உபகரணங்களுமில்லாவிடில் சில விஷயங்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
R M DIST INDIA

களில் மனுஷன் சுகமாய் ஜீவிப்பது அசாத்தியமென்றே கொள்ள வேண்டும்.

**சித்திர மாளிகை.** Palace of Arts. சித்திர மாளிகை மிக்க அலங்காரமாயியற்றப்பட்டு அநேக தீபங்களையுடையதாயிருந்ததால் மாத்திரமன்றி வேறு பல காரணங்களாலும் மிகச் சிறந்த மாளிகையாக மதிக்கப்பட்டது. இந்த மாளிகையிலுள்ள விசேஷங்களைக் கண்டு களிக்க விரும்புவோர் மாத்திரம் பணம்கொடுத்து உள்ளே செல்ல வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் அம்மாளிகையில் ஜனக்கூட்டம் எப்பொழுதும் நிறைந்திருந்தது. அதற்குக் காரணம் அங்குள்ள காட்சிகளின் விநோதமே.

இந்தக் கட்டடம் சுமார் நாற்பதினாயிரம் சதுர அடி விஸ்தீரணமுடையது. அதிற் பல பிரிவுகளுண்டு. மகாராணியுடைய பொம்மைவீடு (Doll's House) அதற்கென்றியற்றப்பட்ட அதியுன்னத சிங்கார மேடையொன்றின்மேல் அமைக்கப்பட்டிருந்தது. பழைய காலத்துச் சித்திர வேலைகளும், பின்னர் அவை காலத்திற்குக்காலம் மாறுதலடைந்ததனாலேற்பட்ட புது மாதிரியான சித்திரங்களும், தற்காலத்து நடை உடை பாவனைகளைக் காட்டும் சித்திரங்களும், மரத்திலும் கல்லிலும் செய்யப்படும் கடைச்சல்வேலை சிற்றுளி வேலை முதலிய அருமையான வேலைகளும், மண்பாண்டம் முதலியவற்றிற் செய்யப்படும் சிறந்த சித்திரவேலைகளும், கிறிஸ்தவ சபைகளுக்கு வேண்டிய வேலைப்பாடமைந்த சிலுவை, பலிபீடம் முதலியவைகளும், கிறிஸ்துவின் ஜீவியசரித்திரத்தை விளக்கும் பல வர்ணப்படங்களமைந்த கண்ணாடி ஜன்னல்களும் இம்மாளிகையிற் காணப்பட்ட விநோதங்களாம்.

நாடக மேடைக்குரிய சித்திரவேலை மிகவும் விசேஷமானதாகையால் இங்கிலாந்தில் நாடகம் உற்பத்தியான காலம்முதல் இதுவரையிலும் நடந்த நாடக காட்சிகளில் முக்கியமானவையும் நடை கொடி பாவனைகளின் விசேஷங்களும், பற்பலவிதமான உடுப்புக்களின் அலங்காரமும் அந்த காட்டப்பட்டன. அவையன்றி மரத்தினாற் செய்து வர்ணமிடப்பட்ட பலவகையான காட்சிகளைக் காட்டும் படுதாக்களையுடைய நாடக அரங்கங்கள் பல அங்கு காணப்பட்டன. நாடகம் பற்பல காலங்களிலடைந்திருந்த திருத்தங்களை அவை உள்ளபடி காட்டுவனவாயின.

கட்டடங்களைக் கட்டுதல், பட்டணங்களை ஏற்படுத்துதல், ஏழைகளுக்கேற்ற வாசஸ்தலங்களை நிரூபித்தல், கொத்துவேலைகள் முதலிய பலவிதமான வேலைகளைக் குறிக்கும் படங்களைச் சொற்பகாலத்திற்கு மாத்திரம் காட்டும்படி இந்தச் சித்திரமாளிகையில் நான்கு மேடைகள், பிரத்தியேகமாய் விடப்பட்டிருந்தன. இவ்விஷயங்களில் புதிதாய்க் கண்டுபிடித்த முக்கியமான விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு இவ்விதமான ஏற்பாடு மிகவும் அனுகூலமாயிற்று.

சித்திர மாளிகையின் தீப அலங்காரமும் மற்றைய ஏற்பாடுகளும் மிகவும் உசிதமானவை. மற்ற மாளிகைகளிலுள்ள காட்சிப்பொருட்களைக் காண்பதனாலுண்டாகும் சிரமத்தை இம்மாளிகை பரிகரிப்பதாயிற்று. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட சகல தேசங்களும் தத்தம் சித்திர விநோதங்களை இங்கு காட்டின. இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா, பர்மா முதலிய பல நாடுகள் அவையவைக்கென்று ஏற்படுத்தப்பட்ட மேடையில் தத்தம் சித்திரங்களையும் சித்திரங்களமைந்த பலவிதமான சாமான்களையும் படங்களையும் பரப்பி வைத்தன. இந்தியாவின் சிற்றுளி வேலைகளும் யானைத் தந்தத்தாற்செய்த சாமான்களும் பெருவியப்பை உண்டாக்கின.

**மகாராணியின் பொம்மை வீடு.** The Queen's Doll House. இந்த விசித்திரமான சிறிய வீடு சித்திர மாளிகையின் ஒரு புறத்தில் அதற்கென்றமைக்கப்பட்ட மேடையின்மீது அலங்காரமாய் நிறுத்தப்பட்டிருந்தது. அது எட்டரையடி நீளமும் ஐந்தடி அகலமும், ஐந்தடி உயரமுமுள்ள சிங்காரமான மாவீடு. அதின் முன்புறக் கதவை மின்சார சக்தியாலியங்கும் கப்பிகளின் சகாயத்தைக் கொண்டு மேலே தூக்கும்படி அது வெகு நூதனமாயியற்றப்பட்ட சித்திர மண்டபம். முன் மண்டபம் சலவைக்கல் பரப்பப்பெற்றது. அதிலுள்ள நுண்ணிய அறைகள் வெகு சிங்காரமானவை. அதின் படிக்கட்டுகளும் சலவை கல்லினாற் செய்யப்பட்டவை. அம்மண்டபத்தில் அரசருடைய புஸ்தகசாலை, அசன மண்டபம் முதலியவைகளும், மேல்மாடியில் அரசர் அரசியுடைய சயனமண்டபம், கொலுமண்டபம் முதலியவைகளும் அவை சம்பந்தமான பல அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அதன்மேலேயுள்ள மாடியில் குழந்தைகளின் போஷணசாலை யுண்டு. அங்கு ராணியின் கொலுமண்ட

பம் வெகு அழகாயமைக்கப்பட்டிருந்தது. ராஜ அரமனை போலும் செய்யப்பட்ட இந்த மாதிரியைப் பிரதிதினமும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்து பார்த்துக் களித்தனர்.

**நகர மண்டபம். The Civic Hall.** இது உவெம்பிளியில் இயற்றப்பட்ட விசாலமான வோர் மண்டபம். பல்பொருட்காட்சி நடக்கும் காலத்தில் இங்கிலாந்திலுள்ள முக்கியமான பட்டணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாரம் அம்மண்டபத்தில் விருந்துடைத் தலைமை பூண்டிருந்து, அங்குவரும் ஜனங்களை நல்வரவேற்று பொது ஜன நன்மை, சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றி ஒருவரோடொருவர் சம்பாஷிக்கவும், ராஜ்ஜிய தந்திர விஷயங்களைப்பற்றி பேசவும் அனுகூலமாகுமெனக் கருதி அம்மண்டபம் கட்டப் பட்டது.

**ஆலோசனை மண்டபங்கள். Conference Halls.** பல்பொருட் காட்சி நடக்கும் காலத்தில் அங்கு வந்தவர்களில் அறிஞராயுள்ளவர்கள் கூடி நானாவித விஷயங்களைப்பற்றி ஆலோசிக்குமாறு நான்கு மண்டபங்கள் உவெம்பிளி சிங்காரவனத்தில் அமைக்கப்பட்டன. இங்கிலாந்திலும், புறதேசங்களிலும் பற்பல விஷயமாய் ஏற்படுத்தப் பட்டுள்ள சங்கங்கள் அங்கு கூடிப் பல முக்கியமான விஷயங்களை ஆலோசிக்கலாயின.

இவ்விதமாய் உவெம்பிளி சிங்காரவனம், பல்பொருட்காட்சியின் பொருட்டுப் பல சிங்கார மாளிகைகளும் விநோத கட்டடங்களும் அமைக்கப்பெற்றுச் சிறந்து விளங்கிற்று.

---

## ஐந்தாம் அதிகாரம்

### இந்திய மாளிகை

ஆங்கிலேய பல்பொருட்காட்சியில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட சகல நாடுகளும் சேர்ந்து அது இனிது முடியுமாறு செய்யவேண்டுமென்று நமது ராஜாங்கத்தார் கருதியவண்ணம் இந்தியாவும் இங்கிலாந்தோடு ஒத்துழைக்க வேண்டியதாயிற்று. ஆகையால் இந்திய ராஜாங்கத்தார், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக திவான் பகதூர் தி. விஜயராகவாச்சாரியார் அவர்களை இந்தி

யாவின் பல்பொருட்காட்சி இலாகாவின் சர்வாதிகாரியாகவும், அவருக்குதவியாக ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு உத்தியோகஸ்தரையும் நியமித்து, பல்பொருட்காட்சிக்கு வேண்டிய காட்சிப் பொருள்களைச் சேகரிப்பதற்கும், அவற்றை இங்கிலாந்திற்குக் கொண்டு சென்று இந்தியாவின் பெருஞ் சிறப்புக்குத் தக்கதோர் மாளிகையை யியற்றி அப்பொருட்களை அதில் வைத்துக் காட்டுவதற்கும் வேண்டிய பணத்தையும் கொடுத்தனர். திவான் பகதூர்



திவான் பகதூர் தி. விஜயராகவாச்சாரியார் அவர்கள்

தி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் சென்னை ராஜாங்கத்தாரிடத்தில் சிறந்த கலெக்டராகவும், சிலகாலம் சென்னை நகர சங்கத்து வரி வசூல் செய்யும் உத்தியோகஸ்தராகவும், பின்னர் கொச்சி ராஜ சமஸ்தானத்து மந்திரியாகவும் உத்தியோகம் வகித்துப் பெரும் கீர்த்தி பெற்றவர். ராஜாங்க விஷயங்களை நடத்தி அனுபோகப்பட்டவர். ராஜாங்கத்தார் அவரை இம்மேலான பதவிக்குத் தெரிந்துகொண்டது மிகவும் வியக்கத்தக்கது. நேர்மையும் சாந்தமும் விடாமுயற்சியுமே பூஷணங்களாகக் கொண்ட அவர், ராஜாங்கத்தார் தமக்களித்த உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு, உவெம்பிளி பல்பொருட்காட்சியில் இந்தியா மிக்க பிரசித்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு, இந்தியாவின் பற்பல பாகங்களுக்குச் சென்று காட்சிப்பொருள்களைச் சேகரிப்பதற்கு வேண்டிய வேற்பாடுகளைச் செய்தும், சுதேச அரசர் பல்பொருட் காட்சியில் ஒத்துழைக்கும்படி அவர்களைத் தூண்டியும் அருந்தொழில் புரிவாராயினர். இக்காலத்தில் ஆங்கிலேய ராஜ்ஜிய முறையைக் குறித்து அதிருப்தியடைந்த சிலர் ராஜாங்

கத்தாரோடு எவ்விஷயத்திலும் ஒத்துழைப்பதில்லையென்னும் பிடிவாதங்கொண்டு தமது கோட்பாட்டைத் தேசமெங்கும் பரவச் செய்தமையால் பல்பொருட்காட்சிக்கு வேண்டிய காட்சிப் பொருள்களைச் சேகரிப்பதும், இந்தியாவை ஒத்துழைக்கும்படி செய்வதும் கஷ்டமாகவேயிருந்தது. ஆயினும் இந்தியாவின் ஒவ்வொரு ராஜதானியிலும், பல்பொருட்காட்சி விஷயமாக ஒவ்வொரு நிர்வாக சபையையும் பல்பொருட்காட்சிக்கு வேண்டிய பிரயத்தனங்களை அந்தந்த ராஜதானியில் செய்வதற்காக ஒவ்வொரு தகுந்த உத்தியோகஸ்தரையும் நியமித்தனர். பின்சொல்லப்படுபவர்களே அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் :

| | |
|---|---|
| சென்னபட்டணம் | ராவ் பகதூர் எஸ். கே. சுந்தராச்சார்லு. |
| வங்காளம் | ,, ஜே. எம். மித்திரா. |
| பம்பாய் | மிஸ்டர் பீ. டீ. ஆஸ்லி. |
| ஐக்கிய மகாணங்கள் | ராவ் ஸாஹிப் எம். எம். சின்ஹா. |
| பஞ்சாப் டில்லி மாகாணங்கள் | மிஸ்டர் லயோனெல் ஹீத். |
| பேகாருப் ஒரிஸாவும் | ,, ஈ. சி. ஹைலண்ட். |

திவான் பகதூர் விஜயராகவாச்சாரியார் அவர்களும் அவருக்குதவியாக நியமிக்கப்பட்ட மேற்கூறிய உத்தியோகஸ்தரும் எவ்வித விடையூறுகள் நேரிட்டபோதிலும் சிறிதும் பின்வாங்காது தாமெடுத்துக்கொண்ட கருமத்திலேயே நாட்டமுடையவராய் வெகு சிரமப்பட்டு அதிசீக்கிரத்தில் காட்சிப் பொருள்களைச் சேகரிப்பதற்கு முயன்றனர். உலகம் முழுவதற்கும் சந்திப்பு ஸ்தானமாய் விளங்கப்போகிற உவெம்பிளியில் எவ்வித காட்சிப்பொருள்களை வைத்துக் காட்டவேண்டுமென்றும் அவற்றை எவ்வாறு சேகரிப்பதென்றும் தீர்மானிப்பது சுலபமான விஷயமல்ல. ஆகையால் அவர்கள் முழு முயற்சியோடு வெகு கஷ்டப்பட்டு கூடியசீக்கிரத்தில் காட்சிப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டனர்.

ஆங்கிலேய ராஜாங்கத்திற் குட்பட்டு இந்தியாவில் அரசு செலுத்தி வரும் பல சுதேச அரசரும் பல்பொருட்காட்சி விஷயத்தில் தாமும் ஒத்துழைப்பதாக முன்வந்து ஆங்கிலேய இந்திய ராஜாங்கத்தாரைப் போலவே தாமும் தக்க உத்தியோகஸ்தரை நியமித்து பல்பொருட் காட்சி விஷயத்திற் பெருஞ் சிரத்தை யெடுத்துக்கொண்டனர்.

கோச்சி, பங்கனப்பள்ளி, சாந்தூர் என்னும் மூன்று சமஸ்தானங்களும் இந்திய மாளிகையில் சென்னை ராஜதானிக்கென்று குறிப்பிடப்பட்ட பாகத்திலும், பேன்னுறேஸ், றும்பூர் என்னுமிரண்டும் ஐக்கிய மாகாணத்திற்கென்று குறிப்பிடப்பட்ட பாகத்திலும், கார்புத்தலா பஞ்சாப்புக்கென்று குறிப்பிடப்பட்ட பாகத்திலும் தத்தம் விளைபொருட்கள் கைத்தொழிற் பொருட்கள் முதலிய பலவிதமான காட்சிப்பொருட்களை வைத்துக் காண்பித்துத் தத்தம் திறமையையும் இப்பெரும் பல்பொருட்காட்சியில் தமக்குள்ள அனுதாபத்தையும் காட்டின.

இந்தியாவின் முக்கியமான காட்சிப்பொருட்களாக மதிக்கப்பட்ட பல பொருட்களைச் சேகரிப்பதற்கும் அவற்றைப் பல்பொருட்காட்சியிற் சிறப்புறக் காட்டுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு வேறுஞ் சிலர் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டனர்.

இவ்விஷயமாய் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரனைவரும் தாங்கள் சேகரித்த பலவிதமான காட்சிப்பொருட்களை இங்கிலாந்திற்கு அனுப்பினார்கள். 1923-ம் வருஷக் கடைசியிலும் 1924-ம் வருஷ ஆரம்பத்திலும் இங்கிலாந்திற்குச் சென்ற கப்பல்களில் இந்தியாவின் காட்சிப்பொருட்களை ஏற்றிச் செல்லாத கப்பல்கள் இல்லை. காட்சிப்பொருட்களும், மற்றக் காட்சிக்குரிய சாமான்களும் நிறைந்த பல்லாயிரம் பெட்டிகள் இந்தியாவிலிருந்து மாத்திரமல்ல, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து லண்டன் நகரத்துத் துறைமுகத்திலுள்ள பண்டகசாலைகளை நிரப்பின. ஆயினும் மற்ற நாடுகளிலிருந்து வந்த காட்சிப்பொருட்கள், பூர்வீக நாகரீகமுமுடையதாகவும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் திலகமாகவும் விளங்கும் இந்தியாவிலிருந்து வந்த காட்சிப்பொருட்களுக்கு எவ்வாற்றானும் ஈடாகா. அப்பொருட்களை உவெம்பிளி சிங்காரவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு இங்கிலாந்திலுள்ள பிரபலமான புகைவீதிச் சங்கத்தவருக்குப் பல மாதங்கள் சென்றனவெனில் அக்காட்சிப் பொருட்கள் எவ்வளவினவென்று சொல்லவமையா. அவற்றைத் தக்கவாறு சிறப்புற அடுக்கிக் காட்டுவதற்கு, தகுந்ததோர் மாளிகையை இயற்றுவது அவசியம். அதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் யாவும் முன்னரே செய்யப்பட்டன. பல்பொருட்காட்சியில் ஒத்துழைக்குமாறு முன்வந்த பற்பல நாடுகளுக்குப் போதியளவு நிலம் நிர்வாக



இந்திய மாளிகை

சபையாரால் வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. இந்திய மாளிகை இந்திய சிற்பசாஸ்திர முறையை அனுசரித்துக் கட்டப்பட்டது. இந்திய சிற்பசாஸ்திர முறைகள் பலவிதமானவை; அவை உலகத்திற் பிரசித்திபெற்றவை. அவற்றைப் பார்த்தவுடனேயே இந்திய சிற்பசாஸ்திர முறையென்று பிரத்தியேகமாய்த் தெரிந்துகொள்ளக் கூடியவை.

உவெம்பிளி சிங்காரவனத்தில் இந்திய மாளிகையைக் கட்டுவதற்கென்று கொடுக்கப்பட்ட ஸ்தானம் மிகவும் விசேஷமானது. இந்திய மாளிகைக்கென்று குறிக்கப்பட்டவிடம் மாத்திரம் மேடான பூமி. இந்திய மாளிகை மிகவும் உன்னதமாகவும் கம்பீரமாகவும் காணப்படுவதற்கு இது ஒரு காரணம். கைத்தொழில் மாளிகை, யந்திர மாளிகை என்னு மிருமாளிகைகள் ஒருபுறத்தும், கனடா ஆஸ்திரேலியாக் கட்டடங்கள் மற்றொரு புறத்தும் துலங்க, பற்பல அழகிய சிகரங்களையும், கோபுரங்களையுமுடையதாய் மத்தியில் பெரியதோர் தூபி விளங்க, உவெம்பிளியிலுள்ள கட்டடங்களுள் ஆணிமுத்தே போன்று உலகமனைத்தையும் தன்பாலிழுத்தது இந்திய மாளிகை யென்பதற் கையமில்லை. அம்மாளிகை இயற்றப்பட்டுள்ள ஸ்தானம் 450 அடி நீளமும் 402 அடி அகலமுமுடையது. கட்டடத்தின் முற்புற நீளம் 350 அடி. அதன் மத்தியில் தோரணவாயிலையுடைய அழகிய மகா மண்டபம் அமைந்துள்ளது. அது 42 அடி நீளமும் 35 அடி அகலமும் 70 அடி உயரமுமுடைய விநோத மண்டபம். வெண்ணிறம் பொருந்திய அம்மண்டபத்தின் ஒவ்வொரு பக்கத்து மூலையிலும் மெல்லிய சிகரங்களும், கோபுரங்களும் மேலெழுந்து அம்மாளிகைக்குப் பேரழகைக் கொடுப்பனவாயின. தோரண வாயிலின் மேற்புறமும் முன்புறமும் பின்புறமும் சிறு கோபுரங்களாலும் வில்வளைவாயமைந்த கல்வரிசைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வாயிலின் வலப்புறத்தும் இடப்புறத்தும் பதினாறடி அகலமுள்ள தூணிரைகளுள்ளன. அவை உள்ளே சென்று நூற்றறுபத்தேழடி நீளமும் நூற்றைம்பதடி அகலமுமுள்ள பிறிதோர் மண்டபமொன்றைச் சூழ்கின்றன. அம்மண்டபத்தின் மத்தியில் எண்பதடி நீளமும், நாற்பதடி அகலமுமுள்ள நீர்நிலையொன்றுண்டு. அந்நீர்நிலையைச் சுற்றி அழகிய மதிற்சுவரும், மத்தியில் நிலவிறிசுபோல நீரை மேலே லெறியவல்ல நீர்க்குழாய்களும், நாற்புறமும் ஜனங்கள் தாராள

மாய்ச் செல்வதற்கேற்ற உட்சாலைகளும் காணப்படும். இம்மண்டபத்தின் வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் வில்வளைவாயமைந்த தோரண வாயில்களுண்டு. கிழக்குப் பக்கத்திலுள்ள வாயிலே பிரதானமான வாயில். இவ்வாயில்களே காட்சிப்பொருட்கள் பரப்பியுள்ள ஒவ்வொரு மாகாணத்து மண்டபத்திற்கும் வழி காட்டுவன. வில்வளைவாயமைந்த பிரதானமான தோரண வாயிலின் மேற்புறத்தில் ஓர் மேற்றளமும் தூணிரையும் அத்தூணிரைக்குமேல் கைபிடிச்சுவரு மமைந்துள்ளன. அம்மேற்றளத்தின் ஒவ்வொரு மூலையிலும் தாமரை மலர்போன்ற சிகரங்களும், மத்தியில் ஆக்றா நகரின்கண்ணேயுள்ள டாஜ்மஹால் என்னும் சிங்கார மண்டபத்துக் கும்மட்டம்போலும் பெரியதோர் கும்மட்டமும் வெகு தூரம்வரையிற் றோன்றும். கட்டட முற்புறத்தின் இருபக்கத்திலும் நூற்றுப் பதினேரடி உயரமுள்ள இரண்டு எண்கோணத் தூண்கள், இந்திய மாளிகையின் காவலாளிகளேபோல வெகு கம்பீரமாய் நிற்கின்றன. மாளிகையில் ஆங்காங்கு தோன்றும் சாளரங்களின் சிறப்பும், வில்வளைவாயமைந்த தோரண வாயில்களின் சிறப்பும், அவற்றின் மத்தியில் வெண்டாமரை மலர்ந்து தொங்குவதேபோல வெண்கற்குஞ்சங்கள் அணியணியாகத் தொங்குஞ் சிறப்பும், அவற்றிற்கிசைய மேல்மச்சு, சுவர் எனுமிவற்றின்மீது வெண்மலர்களைக் கொய்து நிரைத்து வைத்தாற்போலச் சித்திரித்துள்ள புஷ்பங்களின் சிறப்பும் எடுத்துரைக்கும் தரத்தனவன்று.

இச்சிறந்த மாளிகை மொகலாய சக்கரவர்த்திகளுடைய சிற்ப சாஸ்திர முறையைக் கைக்கொண்டு இயற்றப்பட்டது. அக்காலத்திலிருந்த பேர்பெற்ற சிற்ப சாஸ்திர நிபுணரால் இயற்றப்பட்ட கட்டடங்களிலுள்ள நுட்பங்கள் யாவும் இம்மாளிகையில் அமைந்துள்ளன. ஏதாவது ஒரு கட்டடத்தை முற்றிலும் பின்பற்றி அதே பிரகாரம் இம்மாளிகை கட்டப்பட்டதென்று சொல்வதற்கிடமில்லை. இந்தியாவிலுள்ள பழைய மொகலாய கட்டடங்களிலிருக்கிற அருமையான விஷயங்களனைத்தையும் அமைத்து இம்மாளிகை கட்டப்பட்டதென்று ஒருவாறு கூறலாம்.

மண்டபத்துத் தூண்களும் வில்வளைவாயமைந்த வாயில்களும் ஆக்றாவிலுள்ள திவானிகாஸ் என்னும் கட்டடத்தின் தூண்களையும் வாயில்களையும்போல் அமைக்கப்பட்டவை. உட்புறத்தேயுள்ள தூண்

களின் நிறைா ஆக்ருவிலுள்ள முத்து மஸீதியின் தூண் நிரைபோன்றவை. பிரதானமான வில்வளைவான தோரணவாயில்கள், டில்லி, ஆஜ்மீர், ஜம்னு மஜ்ஜீட் முதலிய கட்டடங்களிற் காணப்படுபவை போல் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாளிகையின் கோபுரங்கள் லாகூரிலுள்ள பொன் மசூதிக் கோபுரத்தை யொத்தவை.

இவ்வாறு வெகு அழகாய்க் கட்டப்பட்ட இந்திய மாளிகையைக் கண்டு புகழாதார் யாருமில்லை. சில இந்திய அரசருடைய சமஸ்தானங்களுள்பட இந்தியாவிலுள்ள இருபத்தேழு மாகாணங்கள் இப்பெருங் காட்சியில் ஒத்துழைத்துத் தத்தம் காட்சிப்பொருட்களை இந்திய மாளிகையில் அவைக்கென்று குறிக்கப்பட்ட மண்டபங்களில் நிரப்பி வைத்தன. அம்மாகாணங்களும் சமஸ்தானங்களும் எவையென்றும் அவை காட்டின காட்சிப்பொருட்கள் எவையென்றும் சிறிது தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

வங்காள மண்டபம். Bengal Court. இது வங்காள ராஜதானியில் விளையும் விளைபொருட்கள், அகப்படும் தாதுவர்க்கங்கள், செய்யப்படும் கைத்தொழிற் பொருட்கள் முதலியவற்றையும் வேறு பல உபயோகமான பொருட்களையும் காட்டினது. வங்காளம் முக்கியமாய்ப் பயிரிடும் தேசம். வங்காளத்திலிருந்து உவெம்பிளி பல்பொருட்காட்சிக்கு அனுப்பப்பட்ட காட்சிப் பொருட்களாவன :—

1. நெல்லு, அரிசி முதலிய தானியங்கள், பருப்பு தினிசுகள், தேங்காய், தென்னம் நார், சணல், பருத்திப்பஞ்சு, வாசனைத் திரவியம், கறிமசாலைப் பொடிகள், எண்ணெய் தினிசுகள் ;

2. சுத்திசெய்த சர்க்கரை, சர்க்கரைப் பாகிலிட்டுப் பத்திரப்படுத்தப்பட்ட பழ தினிசுகள், மிட்டாய் தினிசுகள், ஜாம், ஜெல்லி முதலிய ஆகாரத்திற்குரிய வஸ்துக்கள் ;

3. பட்டு, பட்டுப்பூச்சிக் கூண்டு, பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதற்கு வேண்டிய உபகரணங்கள், பட்டுநூல் சுற்றும் யந்திரம் முதலியவைகள் ;

4. வேலை செய்யாத சணல் நார் முதலிய பலவகையான நார்கள், நெசவு செய்த பலவகையான துணிகள், சாரிகள், துப்பட்டிகள், படுதாக்கள், பட்டும் பருத்தியும் கலந்து நெய்த பலவகையான பிடவைகள், ஜமுக்காளங்கள்

5. ஆடு மாடு எருமை பசு முதலியவற்றின் பதனிட்ட தோல்கள்; முதலை புலி முதலியவற்றின் தோல்கள், தோலினாற் செய்யப்பட்ட சாமான்கள்;

6. மருந்திற்காக உபயோகிக்கக்கூடிய மருந்துச் சாமான்கள், வைத்தியத்திற்குரிய ஆயுதங்கள் முதலியவைகள்;

7. கையினால் எழுதி வர்ணமிடப்பட்ட படங்கள், இமய பர்வதத்தின் அழகைக் காட்டும் பலவகையான புகைப்படங்கள், சித்திர வேலைக்கடுத்த பொருட்கள்;

8. தையல் வேலைகள், பின்னல் வேலைகள், பட்டு நூல்களிலும் பருத்தி நூல்களிலும் செய்யப்பட்ட லேஸ் முதலியவைகள், பொன் வெள்ளி சரிகைகள், வெள்ளி பொன் முதலியவற்றாற் செய்த பலவகையான ஆபரணங்கள், வெள்ளியினாற் செய்யப்பட்ட விக்கிரகங்கள், பலவகையான இரத்தினங்கள், யானைத் தந்தத்தினாற் செய்யப்பட்ட அருமையான பெட்டிகள், டப்பிகள், சீப்புகள், விக்கிரகங்கள், பொம்மைகள், சிப்பியினாற் செய்த பொத்தான்கள், படத்துச் சட்டங்கள், மிருகங்களின் கொம்புகளாற் செய்த பெட்டிகள், சீப்புகள், குங்குமப் பரணைகள், சங்கினாற் செய்த வளையல்கள், மணிகள், வளையங்கள் முதலிய பலவிதமான கைத்தொழிற் பொருட்கள்;

9. செம்பு, பித்தளை முதலியவற்றாற் செய்த குடங்கள், தவலைகள், அண்டாக்கள், சட்டிகள், கிண்ணங்கள், தட்டுகள், பூத்தொட்டிகள், பல்லாயிரம் விதமான வீட்டுப் பாத்திரங்கள், மிருகங்களின் உருவங்கள், விக்கிரகங்கள், விளையாட்டுச் சாமான்கள் முதலியவைகளே.

ஆயினும், யாரொன்றறியாத யுத்த வீரனென்று உலகமெங்கும் புகழ்பெற்ற ஐரோப்பிய வீரனுடைய சித்திரப் படமொன்றும், ஆனை யோடு முதலிய பலவகையான ஓடுகளாற் செய்யப்பட்ட வளையல்களும் இவையனைத்தினும் சிறந்தனவாக மதிக்கப்பட்டன.

**பொம்பாய் மண்டபம்.** Bombay Court. பொம்பாய் இந்தியாவின் முக்கியமான பட்டணமாயும் வர்த்தகத்தில் நிகரற்றதாயுமிருக்கிறது. இந்திய மாளிகையில் பொம்பாய்க்கென்று குறிப்பிடப்பட்ட விடம் இரண்டாயிரத்து ஐந்நூறடி விஸ்தீரணமுடையது. பொம்பாய் இந்தியாவின் மேற்குக் கரையி லமைந்திருப்பது உலகத்தின் மற்றப் பாகங்களோடு அது வர்த்தகஞ்செய்து பிரசித்தி யடைவதற் கேதுவாயிற்று. ஆகையால் அதின் விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் முத

லிய யாவும் நன்றாய் விருத்தியடைந்தன. பொம்பாயிலிருந்துவந்த காட்சிப்பொருட்கள் மிகவும் விசேஷமானவை. அவையாவன :—

1. அரிசி, தேயிலை, பருப்பு தினிசுகள், நெய், தேன், பலவித மான மசாலைப் பொடிகள், ஷர்பத்து வகைகள், ஜெல்லிகள், பத்திரப் படுத்தப்பட்ட பழங்கள் முதலிய ஆகாரத்திற்குரிய சாமான்கள் ;

2. எண்ணெய்க் குபயோகமான எள்ளு, ஆமணக்கம் விதை, நிலக்கடலை முதலிய விதைகளும், பிண்ணாக்கும் ;

3. பொன் வெள்ளி முதலியவற்றாற் செய்த நகைகள், மோதிரங் ரங்கள் ;

4. செம்பு பித்தளை முதலியவற்றாற் செய்த பலவகையான பாத்தி ரங்கள், படிக்கங்கள், தட்டுக்கள், தாம்பாளங்கள், சுருட்டுப் பெட்டி கள் ;

5. இரும்பு எஃகு முதலியவற்றாற் செய்த பூட்டுகள், கீல்கள், ஈட்டி முதலிய ஆயுதங்கள் ;

6. பட்டு, பருத்தி, கம்பளி இவற்றால் நெசவு செய்யப்பட்ட பல வகையான துணிகள், பிடவைகள், குட்டைகள், ரவிக்கைகள், சரிகை வேலைசெய்த சாரிகள், துப்பட்டாக்கள் முதலியவைகளும், மேல்ஜோடு, கோட்டுகளுக்கேற்ற பலவகையான கம்பளித்துணி களும் ;

7. தோலினாற் செய்யப்படும் ஜோடுகள், பெட்டிகள், குதிரைச் சாமான்கள், சவுக்குகள் ;

8. மருந்துச் சாமான்கள் வாசனைத்திரவியங்கள் ;

9. சலவைக் கல்லினாற் செய்த தட்டுகள், நிலத்திற்குப் பதிக்கும் தளவரிசைக் கற்கள், விக்கிரகங்கள், தாஜ்மஹால் முதலிய ஆக்ருதி யுள்ள கட்டடங்களைப்போன்ற பலவிதமான மாதிரிகள் ;

10. எலும்புகளினாற் செய்த விளையாட்டுச் சாமான்கள், பொம்மை, மேசைகள், நாற்காலிகள் ;

11. பலவிதமான மரங்களினாற் செய்த மேசைகள், நாற்காலிகள், பெட்டிகள், கட்டில்கள் முதலிய சாமான்கள், சந்தனமரத்தாற் செய்த சீப்புகள், பெட்டிகள் ;

12. யானைத் தந்தத்தாற் செய்த பலவிதமான விளையாட்டுச் சாமான்கள், விக்கிரகங்கள், சீப்புகள், நகைப்பெட்டிகள், சுருட்டுப் பெட்டிகள் முதலியனவே.

ஆயினும், பொம்பாய்த் துறைமுகத்தையும் அது இக்காலத்திலடைந்திருக்கும் திருத்தங்களையும் காட்டுவதுபோல் வெகு அற்புதமாய் அங்கு செய்து வைக்கப்பட்டிருந்த மாதிரியொன்று அங்குள்ள முக்கிய காட்சிப்பொருளாய் விளங்கிற்று.

**ஐக்கிய மாகாணங்கள்.** United Provinces. ஆக்று, அயோத்தி என்னும் இரண்டு நாடுகளும் இதிலடங்கியுள்ளன. கங்காநதி இங்கு பெருகியோடுவதினால் இது மிகவும் செழிப்பான பூமி. ஆகையால் இங்கு பலவகையான தானியங்கள் ஏதேஷ்டமாகப் பயிராகும். அநேக புண்ணிய ஸ்தலங்களும் பிரசித்திபெற்ற கோவில்களும் இங்கேயுண்டு. பருத்திப் பஞ்சிலிருந்து விதைகளை நீக்கிச் சுத்தப்படுத்துவது இம்மாகாணத்து விசேஷமான கைத்தொழில்களிலொன்று. இங்கிருந்து பல்பொருட்காட்சிக் கனுப்பப்பட்ட சாமான்கள், பெரும்பாலும் வங்காளம், பொம்பாய் மாகாணங்களிலிருந்து அனுப்பப்பட்ட சாமான்கள் போன்றவையே. ஆயினும் பட்டுடன் பொன் வெள்ளி சரிகையைச் சேர்த்து நெசவு செய்வதிலும், பாத்திரம் செய்வதிலும் காசியிலுள்ள தொழிலாளர் மிகக் கைதேர்ந்தவர்கள். ஆகையால் இங்கிருந்து அனுப்பப்பட்ட பட்டுதினிசுகளும், பொன் வெள்ளி சாமான்களும் மிகவும் மேலானவையென்று மதிக்கப்பெற்றன.

**பஞ்சாப் மண்டபம்.** Punjab Court. இந்நாட்டில் விவசாயம் மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. பருத்தியும் பலவிதமான தானியங்களும் இங்கு விசேஷமாய்ப் பயிராகின்றன. இங்கிருந்தனுப்பப்பட்ட சாமான்களும் பெரும்பாலும் முன் சொல்லப்பட்ட சாமான்களேயாயினும் விவசாய சாமான்கள் விசேஷமானவை. இவற்றோடுகூட அபின், புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்களும், விவசாயத்திற்கடுத்த யந்திரங்களும், மற்றைய நாடுகளிலிருந்து அனுப்பப்படாத அநேகவிதமான தானியங்களும், பலவிதமான பருத்திப்பஞ்சுகளும், அபூர்வமான காட்டுமரங்களும், இந்நாட்டில் பயிரிடுவதற்கு உபயோகப்படுகிற பலவிதமான ஆயுதங்களும் அனுப்பப்பட்டன.

பருத்தி, கொள்ளு, கடலை, துவரை, அவுரி முதலியவைகள் செழிந்தோங்கி வளர்ந்திருப்பதைக் காட்டும் பல படங்களும் பல் பொருட்காட்சிக்கு அனுப்பப்பட்டன.

இங்கிருந்தனுப்பப்பட்ட பேரீச்சம்பழமும், பேரீச்சமரத்து ஓலையினுற் செய்த பாய்களும் கூடைகளும் மிகச் சிறந்தனவென்று புகழ்ந்து கொண்டாடப்பட்டன.

**பேகார், ஒரிஸா மண்டபங்கள்.** Behar and Orissa Courts. இந்நாடுகளின் காட்சிப்பொருட்களும் பெரும்பாலும் முன்னே சொல்லப்பட்டவையேயாயினும், இங்கு கல்லினுல் ஆச்சரியமான வேலைகள் செய்யப்படுகின்றன. இங்கிருந்து பல்பொருட்காட்சிக்கு வந்த கற்றட்டுக்களும், கற்கிண்ணங்களும், கற்சட்டிகளும், விக்கிரகங்களும், பொம்மைகளும், யானை குதிரை முதலிய உருவங்களும் மிகவும் விநோதமானவை.

**பரோடா மண்டபம்.** Baroda Court. பொம்பாய்க்குச் சமீபத்திலுள்ள இந்த இந்து ராஜசமஸ்தானம் மிகத் தேர்ச்சியடைந்த இந்து ராஜ்ஜியங்களில் ஒன்று. இதின் காடுகளில் வளரும் மரங்கள் மிக்க விலையேறப் பெற்றவை. அம்மரங்களைச் சிறு புஸ்தகங்கள் போலவும் பலகைகளாகவும் வெட்டி, சிலவற்றை நன்ருய் மெருகிட்டும் சிலவற்றை மெருகிடாமலும் பல்பொருட்காட்சிக்கு அனுப்பினுர்கள். பரோடாவிலிருந்து வந்த பாட்டோலா பட்டு என்ற ஒரு வகையான பட்டு பல்பொருட்காட்சியில் விசேஷமாய் மதிக்கப்பட்டது. இந்தப் பட்டை பரோடாவிலுள்ள சீமாட்டிகள் பிடவைகளாக உடுத்துக்கொள்வார்கள். ஆங்கிலேயர் விரும்பி வாங்கி மேசைத் துப்பட்டிகளாகவும், திரைச்சீலைகளாகவும் தலையணையுறைகளாகவும் உபயோகிப்பார்கள்.

இன்னும் பரோடா ராஜ்ஜியம் பட்டுநூலையும், வெள்ளி பொன் சரிகைநூல் முதலியவற்ருற் செய்த சரிகைகளையும், பின்னல்களையும், அற்புதமான வேலைப்பாடமைந்த ஜமுக்காளங்களையும், நூதனமான சித்திரவேலைசெய்த மரச்சாமான்களையும், பித்தளைத் தகடு பதித்த முக்காலிகளையும், யானை, குதிரை, ஒட்டை, சிங்கம் முதலிய மிருகங்கள் தாங்கி நிற்பதுபோற் செய்யப்பட்டுள்ள பலவிதமான மேசைகளையும் அனுப்பிற்று.

**பரதப்பூர், பிக்கானீர், கச் மண்டபங்கள்.** Bharatpur, Bikanir and Cutch Courts. இந்த ராஜ்ஜியங்களும் அநேகமாய் இவ் விதமான காட்சிப்பொருட்களையே அனுப்பின.

**இந்தூர்.** Indore. இந்த சமஸ்தானம் இந்தியாவிலுள்ள முதற் தரமான சமஸ்தானங்களிலொன்று. அதை ஆளும் அரசனுக்கு ஹோல்க்கார் என்று பெயர். அந்த சமஸ்தானம் மற்ற சமஸ்தானங் களைப்போல் ஏராளமான காட்சிப்பொருட்களை அனுப்பி விசேஷ மாய் நடத்தாவிடினும், சிறிய மண்டபமொன்றில் அந்த சமஸ்தானத் தின் கைத்தொழிற் பொருட்களையும் வர்த்தகத்திற்குரிய சாமான்களை யும் வைத்துக் காட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தது.

**ஜயப்பூர் மண்டபம்.** Jaipur Court. ஜயப்பூரிலிருந்து அனுப்பப்பட்ட யானைத் தந்தத்தாற் செய்த யானை, குதிரை ஒட்டை, சிங்கம், பசு, மாட்டுவண்டி, காகிதம் வெட்டும் கத்தி, பட்சிகள் முத லியன மற்ற நாடுகளிலிருந்து வந்த தந்தச் சாமான்களைவிட அதிகம் மேலானவை. சலவைக் கல்லினாற் செய்த திரிமூர்த்திகளின் விக்கிரகம் மிக்க அபூர்வமானது. ஜயப்பூர் மண்டபத்திற் காணப் பட்ட ஏழு கண்டசாரங்களும் வெகு அழகானவை. அவை அவ்வி ராஜ்ஜியத்திலுள்ள தட்டாரின் கைத்தொழிற் திறமையை நன்குணர்த் தின. இன்னும் வாள், ஈட்டி, உடைவாள், கண்டகோடரி முத லிய போராயுதங்களும், பலவிதமான பித்தளைச் சாமான்களும், பொம்மைகளும், இந்து சரித்திரங்களிற் சொல்லப்பட்ட பல ஸ்திரீ புருஷர்களைக் குறிக்கும் அற்புதமான சித்திரப்படங்களும் ஜயப்பூரி லிருந்து வந்தன.

**ஜோட்பூர் மண்டபம்.** Jodhpur Court. இந்த சமஸ்தானம் ராஜபுத்தானாவிலுள்ள சமஸ்தானங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரி யது. ஆடுமாடுகளை வளர்ப்பதே ஜனங்களுடைய முக்கியமான தொழில். ஆகையால் கம்பளி நூல், ஆட்டு ரோமம், நெய் முதலிய வஸ்துக்கள் அங்கு விசேஷம். அங்கிருந்து தோல் சாமான்களும், வாசனைத் திரவியங்களும், யானைத் தந்தத்தாற் செய்த சில சாமான்க ளும் பல்பொருட்காட்சிக்கு அனுப்பப்பட்டன.

**காஷ்மீர மண்டபம்.** Kashmir Court. காஷ்மீரம் இமயமலை யின் மத்தியில் சமுத்திர மட்டத்திற்குமேல் 5,600 அடி உயரத்திலுள்

ளது. அது பல வளங்களிலும் சிறந்த தேசமாகையால் அதை இந்தியாவின் நந்தவனம் என்று சொல்வதுண்டு. அது பூலோக கைலாயமோவென்று சொல்லும்படியான அழகு வாய்ந்த ராஜ்ஜியம். காஷ்மீர மண்டபத்தில், பலவகையான தானியங்கள், பருப்பு தினிசுகள், பழ வற்றல்கள், வாதுமைக்கொட்டை, மஞ்சள், பட்டுநூல், பட்டுப் பூச்சியின் முட்டைகள், பட்டு நெசவு தொழிலைக் காண்பிக்கும் படங்கள், காஷ்மீரத்திலுள்ள சில காட்டு மிருகங்கள், காட்டில் அகப்படும் சுமார் ஐம்பது வகையான மரங்கள், தாதுவர்க்கங்கள், பித்தளைச் சாமான்கள், மரச்சாமான்கள், தோற்சாமான்கள், பலவகையான இரத்தினங்கள், வெள்ளிச் சாமான்கள், பொன்னாற் செய்து இரத்தினமிழைத்த பலவிதமான நகைகள் முதலியன காட்டப்பட்டன.

**காத்தியவார் ராஜ்ஜியங்களின் மண்டபம்.** Court of Kathiawar States. இந்த மண்டபத்தில் பவநகர், ஜனகாட், நவநகர் என்னும் மூன்று சிறு சமஸ்தானங்கள் தத்தமக்குரிய காட்சிப்பொருட்களைக் காட்டின. அவை பெரும்பாலும் காஷ்மீரத்திலிருந்து வந்த காட்சிப் பொருட்கள்தான். விசேஷமாய் வெள்ளைச்செம்பினாற் செய்த பாத்திரங்களும், சரிகை யிழைத்த படங்களும், வாத்தியக் கருவிகளும், பலவகையான நாட்டு மருந்துச் சரக்குகளும், நாட்டு வாசனைத்திரவியங்களும் இம்மண்டபத்திற் காணப்பட்டன.

**கையிர்ப்பூர் மண்டபம்.** Khairpur Court. இந்த சமஸ்தானமும் மேலே சொல்லப்பட்ட சாமான்களையும், விசேஷமாய் பெண்களணிந்துகொள்ளும் தலைச்சீராக்களையும், அங்கிகளையும், பட்டுச் சட்டைகளையும், கைக்கொம்புகள், கத்திகளையும், பலவகையான ரீலங்களையும் காண்பித்தன. இந்தியாவிலிருந்து வந்த குயவனொருவன் அழகிய மட்கலங்களை இங்கு செய்து காண்பித்தான்.

**மைசூர் மண்டபம்.** Mysore Court. மைசூர் ராஜ்ஜியம் இந்திய அரசரால் ஆளப்படும் மிகத் திருத்தமும் செல்வாக்குமுடைய ராஜ்ஜியங்களிலொன்று. அங்கு அகப்படும் விசேஷமான தாதுவர்க்கங்கள், பொன், குரோம், மாங்கனீஸ் என்னும் மூன்றுமே. நெசவுதொழில் ஜனங்களில் பெரும்பாலார்க்குரிய வேலையாயிருக்கிறது. பட்டு, பருத்திப்பஞ்சு கம்பளி இம்மூன்றும் மைசூரில் அகப்படுகிறது. சணலும் சிலவிடங்களில் விசேஷமாய்ப் பயிரிடப்

படுகிறது. எண்ணெய்க்குபயோகமான எள்ளு, ஆமணக்கம்விதை, நிலக்கடலை முதலியவை ஏதேஷ்டமாய் அகப்படுகின்றன. சந்தனக்கட்டை, ஏலம், கறுவா, வெட்டிவேர் முதலியவைகளிலிருந்தும் எண்ணெய் இறக்கப்படுகிறது. மைசூரின் காட்சிப்பொருட்கள் நெல்லு, அரிசி, கேழ்வரகு, கோதுமை, பயறு, கொள்ளு, உளுந்து, அவரை முதலிய பலவகையான தானியங்கள், எண்ணெய்க்குரிய விதைகள், தேங்காய், சர்க்கரை, வாசனைத்திரவியங்கள், காப்பி, தாதுவர்க்கங்கள், கருங்கல், பலவகையான காட்டுமரங்கள், பட்டு தினிசுகள், பருத்திப்பஞ்சு, பட்டுத்துணிகள், பலவகையான பருத்தித் துணிகள், தோல்கள், தோற்சாமான்கள், சோப்புத்தினிசுகள், தேக்கமரத்திலும் கருங்காலிமரத்திலும் சிற்றுளி வேலைசெய்த சாமான்கள், வாத்தியக் கருவிகள் முதலியவைகளே.

காட்டு யானைகளைப் பிடிக்கும் விதத்தைக் காண்பிக்கும் மாதிரி ஒன்று மைசூர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. இதை அநேகர் பிரியமாய்ப் பார்த்தார்கள். மைசூர் அரசருடைய புதிய அரண்மனை போன்ற மாதிரி ஒன்றும், இந்திய சாஸ்திர கலாவிருத்தி சபையார் பங்களூரில் ஸ்தாபித்துள்ள புஸ்தகசாலையின் மாதிரியொன்றும் வெகு விநோதமாயிருந்தன.

யானைத் தந்தத்தினுல் நன்றாயலங்கரிக்கப்பட்ட இரண்டு வீணைகள் மைசூர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு பெரிய ஜமுக்காளங்களும், சில சிறு ஜமுக்காளங்களும், மைசூரின் இயற்கையமைப்பு விளைபொருட்கள் முதலியவற்றைக் காட்டும் படமொன்றும், பெரிய தந்தங்களையுடைய யானைத் தலைகளும், புலித்தலை புலித்தோல் முதலியவைகளும் ஜனங்களுக்கு வியப்பை உண்டாக்கின.

பாட்டியாலா. Patiala. பாட்டியாலா மண்டபத்தில் இவைபோலும் சாதாரணமான விளைபொருட்களும் கைத்தொழிற் பொருட்களுமன்றி, ஷாஜீஹான் என்னும் மொகலாய சக்கரவர்த்தி தன்னிரு குமாரரோடு ஊர்க்கோலம் வருவதைக் காட்டும் படமொன்றும் ஔரங்கஸீப்பின் படமொன்றும், பின்னும் அநேக அருமையான சித்திரப்படங்களும் காணப்பட்டன. அவற்றுள் நமது இளவரசரைப் போல் கையினுல் எழுதப்பட்ட படமொன்று விசேஷமானது. பாட்டியாலா அரசர் வேட்டையாடுவதில் மகா சமர்த்தர். வேட்டையாடி

அவர் சம்பாதித்த ஜயசின்னங்கள் உலகமெங்கும் பிரசித்தி பெற்றவை. அவையனைத்தும் பாட்டியாலா மண்டபத்திற் காட்டப்பட்டன.

டாங்கு. Tonk. விவசாயமே இந்த சமஸ்தானத்து ஜனங்களுடைய முக்கியமான தொழில். ஆகையால், சாதாரணமான தானியவகைகள் டாங்கு மண்டபத்தில் நிறைந்திருந்தன. பருத்தி நூலினால் செய்த பலவகையான துணிகள், உரப்பான கம்பளிகள், கித்தார் என்னும் வாத்தியக் கருவி, தந்தத்தினாற் செய்த பேனாக்கள், ஜமுக்காளங்கள், நம்தாக்கள் முதலிய சில விசேஷமான சாமான்களும் அங்கு காணப்பட்டன.

திருவனந்தபுரம். Travancore. திருவனந்தபுரம் இந்தியாவில் மனோகரமான காட்சியுள்ள நாடுகளில் ஒன்று. கிழக்கில் உன்னதமான மலைகள் வானுறவோங்கி நிற்பதும், ஆறுகள் மலைகள் மத்தியில் வளைந்து செல்வதும், சமுத்திரம் உள்நாட்டிற் புகுந்து செல்வதாலேற்பட்ட நீர்நிலைகளின் காட்சியும் கரையோரமெங்கும் தென்னமரம் அடர்ந்து வளர்ந்திருப்பதும் அந்நாட்டிற்குரிய முக்கிய லக்ஷணங்கள்.

திருவனந்தபுரத்து ஜனங்களுக்குப் பெரும்பாலும் விவசாயமே தொழில். பிரதானமாய் நெல்லே அங்கு விளையும் தானியம். தேங்காய், தேயிலை, றப்பர், எண்ணெய்க்குரிய பலவகையான விதைகள், மிளகு, ஏலக்காய், இஞ்சி முதலிய வாசனைத்திரவியங்கள் திருவனந்தபுர மண்டபத்திற் காணப்பட்ட காட்சிப்பொருட்கள்.

திருவனந்தபுரத்துக் காடுகளில் சுமார் ஐந்நூறுவகையான மரங்கள் வளருகின்றன. அவற்றில் விசேஷமான நூற்றெழுபது வகையான மரங்களின் மெல்லிய பலகைகளை புஸ்தக ரூபமாக வமைத்து மண்டபத்தில் வைத்திருந்தார்கள். பலவிதமான தென்னம் நார்ப்பாய்கள், கயிறுகளும், லேஸ் என்னும் பலவிதமான பின்னல்வேலை செய்த தலையணையுறைகளும், மேசைத் துப்பட்டி, கைக்குட்டை முதலியவைகளும், தந்தத்தாற் செய்த சாமான்களும், பனைநார், தும்பு இவைகளாற்செய்த கயிறு, துடைப்பம் முதலிய சாமான்களும், வெண்கலச் சாமான்களும், மரச்சாமான்களும், தோலினாற் செய்த ஜோடு, பை முதலியவைகளும், லெமன்கிராஸ் என்னும் புல்லிலிருந்து இறக்கும் பலவிதமான வாசனை எண்ணெய்களும், சாயத்தினிசுகளும், காகிதங்களும், கூடை, பாய் முதலிய வீட்டுச்சாமான்

களும் திருவனந்தபுரத்து மண்டபத்தை நிரப்பின. வாழைநாரினுற் செய்த துணி விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது.

அம்மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த, மலையாளவாசிகளின் வீட்டைப்போன்ற மாதிரி ஒன்றும், நெசவு வேலைசெய்யும் நைத்தறியின் மாதிரி ஒன்றும், இந்துக் கோயில்களைப்போன்ற பலமாதிரிகளும், பலவிதமான படவுகளின் மாதிரிகளும், மாட்டு வண்டி, குதிரைவண்டி முதலியவற்றின் மாதிரிகளும், தென்னமரத்தின் பலவிதமான உபயோகங்களாகிய கள்ளிறக்குதல், வெல்லம் காய்ச்சுதல், தேங்காய் பறித்தல், எண்ணெய் ஆட்டுதல் முதலியவற்றைப் பூரணமாய்க் காட்டும் மாதிரிகளும் அனைவருக்கும் வியப்பை உண்டாக்கின. மிக்க விசித்திரமான வேலைசெய்து வெகு விநோதமான கடைச்சல் வேலையும் சிற்றுளிவேலைப்பாடுமமைந்து பொன்முலாமிடப்பட்டு ஜகஜ்ஜோதியாய் விளங்கின அற்புதவிமானமொன்று உவெம்பிளி பல்பொருட்காட்சியில் பிரதிதினமும் பல்லாயிரம் ஜனங்கள் பார்த்து அதிசயித்த விநோத காட்சிப்பொருளாய் விளங்கினமையால் சித்திர வேலையில் திருவனந்தபுரம் மற்றைய தேசங்களுக்குத் தாழ்ந்ததல்லவென்பது தெளிவாகிறது.

**இந்திய புகைவிதி மண்டபம்.** Indian Railway Court. இந்தியாவிலுள்ள புகைவீதிகள் பலவற்றின் அதிகாரிகள் ஒன்றுசேர்ந்து இந்திய மாளிகையின் வடமேற்கு மூலையில் மூன்று மண்டபங்களையமைத்து, தாம் நடத்திவரும் வர்த்தகம் பிரதமத்தில் எவ்வாறிருந்ததென்பதையும், தற்காலத்தில் அது எவ்வித திருத்தமடைந்திருக்கிறதென்பதையும் நன்ருய் விளக்கிக் காட்டுவதற்கேற்ற பலவிதமான வண்டிகள், வாராவதிகள் முதலியவற்றின் மாதிரிகளையும், பிரயாணிகளின் சௌகர்யத்திற்காக அமைத்துள்ள பலவிதமான உபகரணங்களையும் காட்சிப்பொருட்களாக வைத்திருந்தனர். அம்மண்டபங்களில் முதல் மண்டபத்திற்கு எ. மண்டபம் என்றும், இரண்டாவதற்கு பி. மண்டபமென்றும், மூன்ருவதற்கு ஸி. மண்டபமென்றும் பெயர். இவற்றில் எ. மண்டபம் மிகப்பெரியது. அதில் வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலுமுள்ள ஏறக்குறைய எல்லாப் புகைவீதிகளும் தத்தம் காட்சிப்பொருட்களைப் பரப்பியிருந்தன. பி. மண்டபத்தில், கிழக்குவங்காளம், சென்னை, தென்மகாராஷ்டிரம், தென் இந்தியா என்னும் பிரதேசங்களிலுள்ள புகைவீதி

களின் காட்சிப்பொருட்கள் நிறைந்திருந்தன. ஸி. மண்டபத்தில் கிழக்கிந்திய புகைவீதியின் காட்சிப்பொருட்கள் மாத்திரம் காணப்பட்டன. எ. மண்டபத்தில், எழாம் எட்வர்ட் அரசர் இளவரசராயிருந்தகாலத்தில் கி. பி. 1870-ம் வருஷம் இந்தியாவில் பிரயாணம் செய்தபோது உபயோகித்த ராஜவண்டியின் மாதிரியொன்றும், நமது அரசர் பட்டாபிஷேக வைபவத்தின்பொருட்டு கி. பி. 1911-ம் வருஷம் இந்தியாவிற்கு வந்தபோது உபயோகப்படுத்தின வண்டியின் மாதிரி யொன்றும் வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது சொல்லப்பட்ட வண்டியையே நமது இளவரசர் கி. பி. 1921-ம் வருஷம் இந்தியாவுக்கு வந்தபோதும் உபயோகித்தனர். இந்த மாதிரி வடமேற்குப் புகைவீதிச் சங்கத்தாரின் தொழிற்சாலையில் வெகு அழகாய்ச் செய்யப்பட்டு, கி. பி. 1922-ம் வருஷம் நமது இளவரசர் அத்தொழிற்சாலையைப் பார்க்கச் சென்றபோது அவருக்கு இனுமாகக் கொடுக்கப்பட்டது. இவையன்றி, சாதாரணமாகப் பிரயாணிகள் பிரயாணஞ்செய்யும் பலவிதமான வண்டிகளின் மாதிரிகளும், நதிகள் மேற் கட்டப்பட்டுள்ள பல வாராவதிகளின் மாதிரிகளும், புகைவீதிகள் செல்லும் மார்க்கங்களிலுள்ள விசேஷமான பட்டணங்கள், அவற்றிலுள்ள சிறந்த காட்சிகள் முதலியவற்றைக் காட்டும் படங்களும், புகைவீதிகளோடு தொடர்ச்சியாய்ச் செல்லும் கப்பல்களின் மாதிரிகளும் அம்மண்டபங்களில் ஏராளமாய் வைக்கப்பட்டிருந்தன.

சென்னை தென்மகராஷ்டிர புகைவீதிச் சங்கத்தார், சென்னபட்டணத்தில் தாம் புதிதாய் அமைத்துள்ள உத்தியோகசாலையின் மாதிரியொன்றையும், சில வண்டிகளின் மாதிரிகளையும் தமக்கென்று குறிப்பிட்ட மண்டபத்தில் வைத்திருந்தனர்.

நமது தென்னிந்திய புகைவீதிச் சங்கத்தார் முற்காலத்தில் ஜனங்கள் எவ்விதம் பிரயாணம் செய்தனரென்பதைக் காட்டுவதற்காக, அக்காலத்திலவர்கள் உபயோகப்படுத்தின பல்லக்கு, மாட்டு வண்டி, பொதிமாடு பொதிக்குதிரை முதலிய பிரயாணசாதனங்களையும், பின்னர் ஏற்பட்ட ரயில் வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி முதலிய சாதனங்களையும் காட்டும் பலவிதமான மாதிரிகளையும், திரிச்சிளுப்பள்ளியிலுள்ள பிரசித்திபெற்ற மலைக்கோவிலையும், அதின் முற்

புறத்தேயுள்ள வீதியையும், சமீபத்திலுள்ள கிராமங்களையும் மற்றுமுள்ள காட்சிகளையும் காட்டும் மாதிரிகளையும் காண்பித்தனர்.

**பூகர்ப்பசாஸ்திர இலாகா. Geological Department.** இந்திய ராஜாங்கத்துப் பூகர்ப்பசாஸ்திர இலாகாவைச்சேர்ந்த அதிகாரிகள் இந்தியாவில் ஆங்காங்கு காணப்படும் பற்பலவிதமான கற்களையும் பாறைகளையும் பலவிதமான மண்களையும், தாதுவர்க்கங்களையும், அங்கு வைத்துக் காண்பித்தனர். இந்தியாவில் அகப்படும் பொன், வெள்ளி முதலிய பலவகையான லோகவகைகளின் விபரங்களையும், அவை எங்கு எவ்விதமாய் அகப்படுகின்றனவென்பதையும், அவற்றின் உபயோகமென்னவென்பதையும் படங்களின் மூலமாக விளக்கிக் காட்டினர்.

**இராணுவ காட்சிப்பொருட்கள். Army Exhibits.** இந்திய ராஜாங்கத்திற்குப் பலத்தைத் தருவதும் இந்தியராகிய நாம் யாதொருவிதமான பயமுமின்றிச் சுகமாய் வாழ்வதற்குக் காரணமாயிருப்பதும் ஆங்கிலேயருடைய இராணுவ பலம். ஆகையால் இராணுவ இலாகா அதிகாரிகள் சில மாதிரிகள் மூலமாய் இந்தியாவில் இராணுவ வீரரை அமைத்திருக்கும் விதத்தைக் காட்டினர். வடமேற்கெல்லையைக் குறிப்பிக்கும் மாதிரி, சில மகம்மதிய ஜாதியார் வாசம் செய்யும் மலைப்பிரதேசங்களையும் காடடர்ந்த உயரமான மலைகளையும் அவற்றினிடையேயுள்ள ஆழமான கணவாய்களையும் பகைவர் இந்தியாவிற்குள் நுழையாதபடி ஆங்கிலேய ராஜாங்கத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகளையும் காட்டிற்று. அவ்விரிடிகள் என்னும் ஜாதியாரின் தேசமாகிய தைரூவையும், நெடுங்காலமாய் இந்தியாவுக்குள் பகைவர் நுழைவதற்குப் பெருவழியாயிருந்த கைபர் கணவாயையும், அதின் வழியாய் இக்காலத்தில் பகைவர் நுழையாதபடி ஆங்கிலேயர் செய்திருக்கும் ஏற்பாடுகளையும், ஆப்கானிய எல்லைக்குச் சமீபத்திலுள்ள லான்டிகானுவுக்கு இப்பொழுது திறக்கப்படுகிற புகைவீதியையும், கோகாட்டிலுள்ள இராணுவ ஸ்தலத்தையும் இன்னும் அங்கு சமீபத்திலுள்ள கணவாய்களையும் காட்டும் அதியற்புதமான மாதிரியொன்று ஆங்கிலேய சேனாபதிகட்கும் ராஜ்ஜிய தந்திர நிபுணருக்கும் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. மேற்கூறிய விஷயங்களைக்காட்டும் அநேக படங்கள் அங்கு எதேஷ்டமாய் வைக்கப்பட்டிருந்தன.

இந்திய நில அளவை இலாகா. Survey of India. இந்த இலாகா அதிகாரிகள், இந்தியாவிலுள்ள பற்பல நாடுகளின் படங்களையும் அவைகளின் விஸ்தீரணம், எல்லை முதலியவற்றைக் காட்டும் குறிப்புக்களையும், இந்திய மத்திய பருத்தி வர்த்தக சபையார் இந்தியாவிலுள்ள பற்பல நாடுகளில் விளையும் பருத்திப்பஞ்சுகளையும், அவை விளையும் நாடுகளைக்காட்டும் படங்களையும் காண்பித்தனர்.

இவ்விதமாய் இந்தியாவின் பற்பல பாகங்கள் தத்தம் மண்டபங்களிலுள்ள விசேஷ பொருட்களை வெகு அழகாய் ஜோடித்து வைத்து, பலவிதத்து இந்தியாவின் பெருமை உணருமாறு காட்டின. இந்தியா பல்பொருட்காட்சி விஷயத்தில் செலவுசெய்த தொகை இருபத்தைந்து லக்ஷம் வரையிலுண்டு. சென்னை ராஜதானி நம்து சொந்த ராஜதானியாகலானும் இந்தியாவின் விசேஷித்த பாகமாகலானும் அதைக்குறித்துத் தனியாய் அடுத்த அதிகாரத்திற் கூறுவோம்.

---

# ஆரும் அதிகாரம்

## சென்னை மண்டபம்

உெம்பிளி பல்பொருட்காட்சியில் நமது சென்னை ராஜதானி எவ்வாறு விளங்கிற்றென்பதை நாம் அறியவேண்டியது அவசியம். சென்னை ராஜதானி மிக்க செல்வப் பேறுடைய நாடென்றாவது கைத்தொழிலில் மிக்க சிறந்த நாடென்றாவது கூறவமையாது. அதை இருளடைந்த நாடென்று கூறுவது வழக்கம். ஆயினும் உலகம் முழுவதையும் கவர்ந்த அம்மகா காட்சியில் அது கொண்ட கோலமும் நின்ற நிலையும், சில வருஷங்களின் முன் அதற்கு அப்பெயர் தக்கதாயிருந்திருப்பினும் இக்காலத்தில் அது சிறிதும் பொருந்தாதென்பதை விளக்கிக் காட்டின.

இப்பல்பொருட் காட்சியில் சென்னை ராஜதானி ஒத்துழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கென்று சென்னை ராஜாங்கத்தார் ஒரு சிறிய கர்ம சபையை ஏற்படுத்தினர். அச்சபைக்கு, சென்னைக் கைத்தொழில் இலாகாத் தலைவராகிய ஈ. எவ். தாமஸ் துரையவர்கள் சபாநாயகராக நியமனம் பெற்றனர். ராஜ்ஜிய விஷயங்களில் ராஜாங்க அதிகாரிகளோடு ஒத்துழைக்கக் கூடாதென்னும்

கொள்கையையுடைய சிலர், சென்னை ராஜதானி பல்பொருட்காட்சியில் ஒத்துழைத்தல் கூடாதெனப் பத்திரிகைகள் மூலமாகவும், சட்ட சபைகளிலும், நாட்டின் பல பாகங்களிலும் செய்த உபந்நியாசங்கள் மூலமாகவும் தேசமெங்கும் தங்கொள்கையைப் பரவச் செய்தனர். இவ்வாதம் சிலகாலம் நடைபெற்றதேயாயினும், ஈற்றில் சென்னை ராஜதானி அதின் தற்கால அந்தஸ்திற்கும் இனிமேல் அது அடையக்கூடிய நிலைமைக்கும் தக்கவாறு இப்பெரும் பல்பொருட்காட்சியில் ஒத்துழைக்க வேண்டுமென்று சென்னைச் சட்ட நிரூபண சபையார் தீர்மானஞ் செய்தனர். அதுமுதல் பல்பொருட்காட்சிக்கு வேண்டிய காட்சிப்பொருட்களைச் சேகரிப்பதற்குரிய பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்தன. ஆரம்பத்தில், சென்னையில் ஒரு பல்பொருட்காட்சியை ஏற்படுத்தி அக்காட்சியிற் காட்டப்படும் காட்சிப்பொருட்களிற் சிறந்தவைகளை உவெம்பிளிப் பல்பொருட்காட்சிக்கு அனுப்புகிறதென்று கர்ம சபையார் அபிப்பிராயப்பட்டனர். ஆயினும் பின்னர் சில முக்கியமான காரணங்களினிமித்தம் அந்த அபிப்பிராயத்தை முற்றிலும் நீக்கி, காலதாமசமின்றி உவெம்பிளி பல்பொருட்காட்சிக்கு வேண்டிய காட்சிப்பொருட்களைச் சேகரிக்கவேண்டியதென்று கர்ம சபையார் தீர்மானித்தனர். அவ்வாறு காட்சிப்பொருட்களைச் சேகரிப்பது சுலபமன்று. முன்னர் இவ்வேலையை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் ஈவு பெற்றுச் செல்லவே, அவருடைய ஸ்தானத்தில் றவ் பகதூர் எஸ். கே. சுந்தராச்சார்லு, எம். ஏ. அவர்கள், பல்பொருட்காட்சியில் சென்னைக்குரிய விஷயங்களை ஏற்பாடு செய்வதற்கென்று முக்கியமான உத்தியோகஸ்தராக நியமனம் பெற்றார். மீந்திருந்த சொற்ப காலத்திற்குள் உவெம்பிளி பல்பொருட்காட்சியில் சென்னை மண்டபத்திற்கு வேண்டிய பலவகையான காட்சிப்பொருட்களைச் சேகரிக்கும் பாரமான வேலை அவர்மேற் பொறுத்தது. ஆகையால் அவர் சென்னையிலுள்ள கர்ம சபையாருடைய மேற்பார்வையில், காட்சிப்பொருட்களைச் சேகரிக்கும் வேலையை மிக்க விமரிசையாய் நடத்தி வந்தார். இந்தியாவில் ராஜ்ஜிய பரிபாலன முறையின் விஷயமாய் நடந்துவரும் வாக்குவாதங்களும் குழப்பங்களும் பின்னும் சில காரணங்களும் சுந்தராச்சார்லு அவர்கள் எடுத்துக்கொண்ட பெரிய வேலையை நிறைவேற்றுவதற்குத் தடைகளாயின. ஆயினும் அவர்



ரூவ் பகதூர் எஸ். கே. சுந்தராச்சார்லு

சிறிதும் தளர்வுறாது தாம் மேற்கொண்ட வேலையிற் கண்ணுங் கருத்துமுடையவராய் அதைச் செவ்வனே நடத்தி வந்தார். ஆகவே காட்சிப்பொருட்களைச் சேகரிக்கும் வேலை அடுத்த 1924-ம் வருஷம் ஜனவரி மாசமளவில் ஏறக்குறையப் பூர்த்தியாயிற்று. சென்னையிலிருந்து அவர் இங்கிலாந்திற்கனுப்பின பெட்டிகள், அக்காலத்தில் இங்கிலாந்திற்குப் போய்க்கொண்டிருந்த பல கப்பல்களிற் சென்றுகொண்டிருந்தன. இந்திய மாளிகையில் சென்னைக்கென்று குறிப்பிடப்பட்டவிடத்தில் தக்க மண்டபமொன்றை நிருமிப்பதும், அவர் சென்னையிலிருந்து அனுப்பின பெட்டிகளை லண்டன் துறைமுகத்திலேற்று அவற்றிலுள்ள காட்சிப்பொருட்களை அம்மண்டபத்திற் சேர்ப்பதும் அவற்றைத் தக்கபடி அலங்காரமாய் வைத்து ஜனங்களுக்குக் காண்பிப்பதும் அவருடைய கடமையாயிற்று. ஆகையால் அவர் இங்கிலாந்திற்கு ஜனவரி மாசம் பிரயாணமாயினர்.

பல்பொருட்காட்சிக்கு இந்திய சர்வாதிகாரியாய் நியமிக்கப்பட்ட திவான் பகதூர் டி. விஜயராகவாச்சாரியார் அவர்கள்

11,000 சதுர அடி விஸ்தீரணமுடைய பூமியைச் சென்னை மண்டபத்திற்கென்று கொடுத்தனரேயாயினும், அதின் ஒரு பாகம் கொச்சி ராஜசமஸ்தானத்தாரின் வேண்டுகோட்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகையால் கொச்சி சமஸ்தானத்துக் காட்சிப்பொருட்களும் சென்னை மண்டபத்திலேயே காட்டப்பட்டன.

ஸ்ரீ பகதூர் சுந்தராச்சாரிலு, ஜனவரி௴ 28-ம் உ லண்டன் நகரையடைந்தனர். அச்சமயத்தில் இந்திய மாளிகையும் விசேஷமாய் சென்னை மண்டபமும் முற்றுப்பெறாமல் குறைவேலையாகவே யிருந்தன. ஆகையால் பிரதிவாரமும் வந்துகொண்டிருந்த காட்சிப் பொருட்களைச் சென்னை மண்டபத்தில் வைப்பதற்கு சாத்தியப்படவில்லை. முன்னரே வேண்டிய பணத்தையனுப்பி சென்னை மண்டபத்தை இயற்றவேண்டுமென்று உத்தரவனுப்பியும் வேலைமுடிவு பெறாது அம்மண்டபம் குறைவேலையாயிருந்தமையால், சுந்தராச்சாரிலு அவர்கள் தமது மற்ற வேலைகளோடுகூட, சென்னை மண்டபத்தினுட்புறத்தை அலங்கரிப்பது, நிலத்திற்குத் தளவரிசையிடுவது, மின்சார விளக்குகள் விசிறிகளமைப்பது முதலிய பலவேலைகளையும் தாமே கவனிக்கவேண்டியதாயிற்று. அதே சமயத்தில் காட்சிப் பொருட்களடங்கிய பெட்டிகளைத் திறந்து அவற்றிலுள்ள பலவிதமான வஸ்துக்களைத் தக்கவாறு அலங்காரமாய் வைக்கவும் வேண்டியதாயிருந்தது. இவ்விதமாய் அவர் அதிக கஷ்டப்பட்டாலும், அடிக்கடி நேர்ந்த தொழிலாளர் கலகங்களினாலும், வேலையைச் செய்ய ஒப்பந்தம் பண்ணிக்கொண்டவர்களுடைய அஜாக்கிரதையினாலும் அவ்வருஷத்து அபரிமிதமான குளிரின் கொடுமையினாலும் சென்னை மண்டபவேலை பூர்த்தியாகாது தடைப்பட்டது. ஆயினும் தொழிலாளரை விசேஷமாய் உற்சாகப்படுத்தி, குறித்த காலங்களுக்கு மேல் இராக்காலங்களிலும் வேலைசெய்யும்படி அவர்களை ஏவினமையால் சென்னை மண்டப வேலை ஒருவாறு பூர்த்தியாயிற்று. எம்மன்னர்பிரான் ஜார்ஜ் மண்டலாதிபதி பல்பொருட் காட்சியைப் பல்லாயிரம் ஜனங்கள் மத்தியிற் திறந்து அனைவர்க்கும் நற்காட்சியளித்த அன்றையதினத்தில் சென்னை மண்டபமும் ஐக்கிய மாகாணத்து மண்டபமுமே காட்சிக்குத் தயாராயிருந்தன.

சென்னை மண்டபம் 10,491 சதுர அடி விஸ்தீரணமுடையது. அதற்காக இந்திய ராஜாங்கத்திற்கு சென்னை ராஜாங்கத்தார் கொடுத்த

வாடகை 7,868 பவுன் 5 ஷிலிங். அது ஐக்கிய மாகாணங்களின் மண்டபத்திற்கும், பிரிட்டிஷ் இந்தியா புகைக்கப்பற் சங்கம், பென்னின்ஸுலர் அண்டு ஓரியேன்டல் புகைக்கப்பற் சங்கம் என்னுமிரு சங்கங்களும் தங்கள் மாதிரிகளைக் காட்டுவதற்காக ஏற்படுத்திய அடைப்புக்கும் சேர்ந்ததாய் அவற்றின் பக்கத்தே அமைக்கப்பட்டது. மண்டபத்தின் வடபுறத்தில் மண்டபத்து உத்தியோகஸ்தர் இளைப்பாறுவதற்காக இரண்டு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆயினும் பின்னர் அவற்றிலொன்றில் இந்தியமாளிகை அதிகாரியின் உத்தியோகசாலையும் மற்றொன்றில் லயன்ஸ் இந்திய சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டன.

சென்னை மண்டபத்தின் மேற்குப் புறத்தின் அதிக பாகத்தில் அரங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வரங்கத்திற்கும், ஐக்கிய மாகாணங்களின் மண்டபத்துச் சுவருக்கும் இடையிலுள்ளபாகத்தில் இந்திய அலுமினிய வர்த்தக சங்கத்தார் தங்கள் காட்சிப்பொருட்களைக் காண்பிப்பதற்கேற்ற மண்டபத்தை அமைத்துக்கொண்டனர். சென்னை மண்டபத்து அரங்கத்தில் இந்தியாவிலிருந்து பல்பொருட் காட்சிக்கென்று வரவழைக்கப்பட்ட பாம்பாட்டிகளும், செப்படி வித்தைக்காரரும், நாட்டியக்காரரும் தத்தம் திறமையைக் காட்டிவந்தனர். இவ்விதமான காட்சி இங்கிலாந்தில் இல்லையாதலின் இவற்றை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கண்டு களித்தனர். பாம்பாட்டியின் படம் ஒரு புறத்தில் அச்சிடப்பட்ட தபால் கார்டுகள் ஒவ்வொன்று இரண்டு அல்லது மூன்று பென்ஸ் வீதம் ஏராளமாய் விலையாயின. அந்தப் படத்தை விற்றதினால் சேர்ந்த தொகை மொத்தம் 393 பவுன், 5 ஷிலிங், 6 பென்ஸ். இது ராஜாங்கத்தாருக்குரியதாயிற்று.


சென்னை ராஜதானி, பல்பொருட் காட்சியில் ஒத்துழைக்க வேண்டுமென்று தீர்மானமானபோது, அக்காலத்தில் சென்னை ராஜாங்கத்து மந்திரிகளில் ஒருவராயிருந்த ஸர். கே. வி. ரெட்டி, சென்னை உெம்பிளிக் காட்சியிற் பிரசித்தியடையவேண்டுமாயின் சென்னைக் காட்சிப் பொருட்களோடுகூட, தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களுடைய ஜீவியத்தை விளக்கிக் காட்டக்கூடிய வேடிக்கையான காட்சிகளும் இருக்கவேண்டியது அவசியமென்று அபிப்பிராயப்பட்டனர். சென்னை மண்டபத்திற்குரிய செலவு முழுவதையும் பொறுத்து பல்பொருட்காட்சியை நடத்தும் சென்னை ராஜாங்கத்

தாரை, வேடிக்கைக் காட்சிகளுக்கும் பணம் செலவுபண்ணும்படி செய்வது தக்கதன்றெனக்கொண்டு, கர்ம சபையார் பார்ளாக்கிமிடி ராஜாவுடைய உதவியைக் கோரினார்கள். ராஜாசாஹிப் அவர்களும் உதவிசெய்ய ஒப்புக்கொண்டு ஐம்பதினாயிரம் ரூபாய் பல்பொருட் காட்சி விஷயமான செலவுக்காகக் கொடுத்து அரும்பெருமுதவி புரிந்தனர். அந்தத் தொகையைக்கொண்டு கர்ம சபையார் சென்னை மண்டபத்தில் நாம் மேலே கூறியுள்ள அரங்கத்தை இயற்றுவதற்கும், வேடிக்கைக்காட்சிகளுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துகொள் வதற்கும் ஏதுவாயிற்று. பார்ளக்கிமிடி ராஜா செய்த இப்பேருதவி என்ஞான்றும் மறக்கற்பாலதன்று.

சென்னை மண்டபம் தென்னிந்திய திராவிட சிற்பசாஸ்திர முறையை முற்றிலுமனுசரித்துக் கட்டப்பட்டது. அதின் எப்பக்கத் தைப் பார்த்தாலும் தென்னிந்தியாவில் சாதாரணமாகத் தோன்றும் காட்சிகளே விளங்கிக்கொண்டிருந்தமையால் காட்சி பார்க்கும் பொருட்டு அம்மண்டபத்திற்குச் சென்றவர்கள் அங்கு தென்னிந்தி யாவின் வாசனையே வீசுகின்றதென்று கூறினர். அதின் மேல்மச் சிற் கட்டப்பட்டிருந்த தூணிகளிலும் உத்திரங்களிலும் இந்தியாவில் அருமையானதாக மதிக்கப்படும் அலர்ந்த தாமரைமலரின் படங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன. அம்மண்டபத்திற் காணப்பட்ட காட்சிப் பொருட்களில் பெரும்பான்மையானவை பற்பல வர்த்தகராலும், பிறராலும் அனுப்பப்பட்டவையாதலின் சென்னை மண்டபத்தைப் பிரஜைகளின் மண்டபமென்றே சொல்லத்தகும்.

அம்மண்டபத்தின் விசேஷ காட்சிப்பொருளாய் உலகம் முழு வதையும் கவர்ந்தது தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் போலும் இயற்றப்பட்ட மாதிரி. அது அம்மண்டபத்தின் மத்தியி லமைந்து அதின் உத்தியோக சாலையாக விளங்கிற்று. ஆயினும் ஜனங்கள் அதை அரியதோர் காட்சியெனக்கொண்டு பூர்வகாலத்துத் திராவிடருடைய நாகரீகத்தையும் சிற்பசாஸ்திரத் திறமையையுங் கண்டு வியந்தனர்.

சென்னை மண்டபத்தில் ஏராளமான காட்சிப்பொருட்கள் வந்து குவிந்தன. உவெம்பிளியில் தங்களுக்கு அகப்பட்டவிடத்தை நிரப்புவதற்குப் போதியளவு காட்சிப்பொருட்களை அனுப்பக்கூடிய வர்களைச் சேர்ப்பது சென்னையிலுள்ள கர்ம சபையாருக்கு, வெகு



தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்து மாதிரி.

கஷ்டமாயிருந்தது. சுந்தராச்சார்லு அவர்களுக்கு, சென்னை மண்டபத்திற்காக லண்டனுக்கு வந்த காட்சிப்பொருட்கள் அனைத்தையும் அம்மண்டபத்திலடக்குவது கஷ்டமாயிற்று. ஒரு சமயத்தில் அங்கு

வந்த காட்சிப்பொருட்களிற் சிலவற்றை நிறுத்திவிடலாமோ வென்று அபிப்பிராயமும் உண்டாயிற்று. ஆயினும் அவ்வாறு செய்யாது கூடியவரையிலும் அங்கு வந்த காட்சிப்பொருட்க ளனைத்தையும் சிறப்பாய் ஜோடித்து அழகுபெற வைத்தமையால் சென்னை மண்டபம் மிக்க விசித்திரமாகத் தோன்றியது. காட்சிப்பொருட்கள் அவற்றின் வகைக்கேற்றபடி பற்பல கடைகளாக அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு வந்த கைத்தொழிற் பொருட்களுள் தலைமைபெற்று நின்றது பலவிதமான லேஸ் என்று சொல்லப்படுகிற பின்னல் வேலைப் பாடமைந்த சரக்குகளே. இதில் நமது சென்னை ராஜாங்கத்தார் விதம் விதமான லேஸ்களையும் சித்திரத் தையல்களமைந்த பலவிதமான துணிகளையும் ஏராளமாகச் சேகரித்துக் கடையாக வைத்திருந்தனர். அவை பெரும்பாலும் மிஷன் வித்தியாசாலைகளிற் கல்விகற்கும் பெண்களாலும், இந்திய கிறிஸ்தவ ஸ்திரீகளாலும் யந்திர சகாய மின்றிக் கையினுற் செய்யப்பட்டவை. இவையன்றி கிருஷ்ணு ஜில்லாவிலுள்ள பாலக்கோல், நரசப்பூர் என்னுமிடங்களிலிருந்தும் ஆறு வர்த்தகர் பலவிதமான லேஸ் சரக்குகளைக் காட்சிப்பொருட்களாக அனுப்பிவைத்தார்கள். அவை தொழிலாளராற் செய்யப்பட்டவை. சென்னை ராஜதானியிற் செய்யப்பட்ட இந்த லேஸ் சரக்குகள் வெகு சீக்கிரத்தில் விலையாய்விட்டன. உவெம்பிளி பல்பொருட் காட்சி நடப்பதற்கு முன் இரண்டு மூன்று வருஷகாலம், சென்னையிற் செய்யப்படும் லேஸ் சரக்குகளுக்கு இங்கிலாந்தில் செலவேற்படாதிருந்தது. ஆகையால் ஏராளமான லேஸ் சரக்கு இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகாமல் சென்னையிலேயே தங்கிவிட்டன. அவ்வித சரக்குகள் யாவையும் சுந்தரராச்சாரிலு அவர்கள் தைரியமாய் ஒப்புக்கொண்டு சென்னை மண்டபத்திற் காண்பிக்கவே அவை வெகு சீக்கிரத்தில் செலவாய்விட்டன. ஆகையால் அச்சரக்குகளைத் தந்தி மூலமாய் மீண்டும் வரவழைத்தும் அவை சரியானகாலத்தில் வந்து சேராமையால் விலையாகாது நின்றுவிட்டன.

சென்னையிலிருந்து சென்னை மண்டபத்திற்கு அனுப்பப்பட்ட சித்திரத் தையல்வேலை யொன்றைப்பற்றிய சரித்திரம் அநேகருக்குப் பிரீதியைத் தரக்கூடும். அது படத்தின் சட்டம்போல பல வர்ணமான பட்டு நூல்களினுலும் சரிகை நூல்களினுலும் வெல்வெட் பட்டின்மேல் செய்யப்பட்ட அதியற்புதமான சித்திரத் தையல்வேலை.




சென்னை லேஸ் தினிசுகள்..

அதை, மீஸ் தர்ராபோர் என்னும் பார்ஸி பெண்மணி தன் கையினாற் செய்து சென்னை மண்டபத்திற்கனுப்பி, பல்பொருட்காட்சி முடிவடைந்தவுடன் அதை நமது இளவரசருக்கு இனாமாகக் கொடுத்துவிடும்படி கடிதமெழுதி அனுப்பினாள். இளவரசர் சென்னை மண்டபத்திற்குச் சென்றபோது அதினழகையும் வேலைப்பாட்டையுங் கண்டு வியந்தனர். பின்னர் அப்பெண்ணுடைய இஷ்டப்பிரகாரம்

அது இளவரசருக்கனுப்பப்படவே அவரும் அதை அன்புடன் அங்கீகரித்ததுமன்றி, சுந்தராச்சார்லுவுக்குக் கடிதமொன்றெழுதி நன்றியுங் கூறினாராம்.

நமது அரசரேனும், மற்றைய ராஜ குடும்பத்தவரேனும் பல்பொருட்காட்சிக்குச் செல்லுங்கால், முன்னதாகவே கால அட்டவணையொன் றேற்படுத்தி, இன்னின்ன மண்டபத்திற்குமாத்திரமே செல்வதென்றும், இன்னவிடத்தில் இத்தனை நிமிஷ நேரமே தங்குவதென்றும் வரையறுத்து, அது அவர்கள் அங்கீகாரம் பெற்ற பின்னர் அதேபிரகாரம் அவர்கள் சென்று பார்த்துக்கொண்டு திரும்புவது வழக்கம். அப்படியே நமது இளவரசருக்கும் காலவட்டவணை ஏற்படுத்தப்பட்டிருந்தும் அதைப்பற்றி அவர் சிறிதும் கவனியாது, பல்பொருட்காட்சிச் சாலையில் கால் வைத்தவுடனே தமக்கு இஷ்டமான மண்டபங்களுக்குச் சென்று தமக்கிஷ்டமானவரையில் அங்கிருந்த காட்சிகளைப் பார்த்துக்கொண்டு திரும்பினார். இந்திய மாளிகைக்குச் சென்றபோது முதலில் ஐக்கிய மாகாணத்து மண்டபத்தைப் பார்த்துவிட்டு நேரே சென்னை மண்டபத்திற்குச் சென்று நமது ராஜதானியைக் கண்ணியப்படுத்தினர். பின்னர் அங்கு வைத்திருந்த மதுரை மீனாட்சியம்மன் கோயிலைப்போலும் மாதிரியொன்றைப் பார்த்து, சுந்தராச்சார்லு அவர்களை நோக்கி, 'இது நூக்கமரத்தாற் செய்யப்பட்ட மாதிரியன்றோ!' என்று வினவ, அவரும் 'ஆம்' என்று பதில் சொல்லவே, இளவரசர் மீண்டும், 'எனக்குத் தெரியும், இவ்விதமான மரத்தை நான் இந்தியாவில் பார்த்திருக்கிறேன்' என்றனராம்.

காட்டிலகப்படும் பலவிதமான வஸ்துக்களைக் காட்டும் கடையில், கோயம்புத்தூரிலுள்ள நூதன சாலையிலிருந்த மாதிரிகளுள் முக்கியமானவை வைக்கப்பட்டிருந்தன. அவையாவும் காட்டிலகப்படும் பலவிதமான வஸ்துக்களின் மாதிரிகள். சென்னை ராஜதானியில் எந்தெந்த மரங்கள் எவ்வெவ்விடத்தில் உற்பத்தியாகின்றன வென்பதைக் காட்டும் படமொன்றும், 456 வயதுடைய தேக்கமரத் துண்டொன்றும், 410 வயதுடைய நூக்கமரத்துண்டொன்றும் மிகவு மருமையான காட்சிப் பொருட்களாய் மதிக்கப்பட்டன. தென்னிந்தியாவில் யானைகளைப் பிடிக்கும் விதத்தைக் காட்டும் மாதிரிகளையும், படங்களையும் ஜனங்கள் பிரீதியாய்ப் பார்த்தார்கள். இந்தக்




சென்னை, விவசாய இலாகா

கடையில் வைக்கப்பட்டிருந்த காட்சிப்பொருட்களனைத்தும் பழைய படி கோயம்புத்தூருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

சென்னை ராஜதானியில் அகப்படும் பலவிதமான மரங்களை இந்திய மாளிகையில் ஹௌவார்ட் பிரதர்ஸ் என்னும் வர்த்தகர்கள் வைத்திருந்தனர். அம்மரங்களால் அவர்கள் அங்கு செய்துவைத் திருந்த சாமான்கள் அம்மரங்களை எவ்விதமாய் உபயோகப்படுத்தலா மென்று காட்டின.

விவசாய சம்பந்தமான காட்சிப்பொருட்கள் வேறொரு கடையாய் அமைக்கப்பட்டன. திருத்தமும் சாஸ்திரோக்தமுமான முறையைக் கைக்கொண்டு பயிரிடப்பட்ட விவசாயப் பொருட்களும், தேசத்தில் சாதாரணமாய் வழங்கும் முறையை அனுசரித்துப் பயிரிடப்பட்ட விவசாயப் பொருட்களும், அவற்றை விளக்கும் படங்கள், சக்கரங்கள் முதலியனவும் அங்கு ராஜாங்கத்தாரால் காட்டப்பட்டன. பலவித மான நெல்லுகள், அரிசிவகைகள், மஞ்சள், மிளகாய், கேழ்வரகு, சோளம், நிலக்கடலை, எள்ளு, சாமை, தினை, கொள்ளு, பயறு, பருத்திப்பஞ்சு, சணல், மிளகு, தேங்காய், பருப்பு தினிசுகள், தேயிலை, காப்பி, கரும்பு முதலிய எண்ணிறந்த விளைபொருட்களும், பயிரிடுவதற்குவேண்டிய ஏர், மண்வெட்டி, கட்டப்பாரை, சால் முதலிய உபகரணங்களும் நப்பர் தினிசுகளும் அவற்றாற் செய்யப் பட்ட பாய், ஜோடு முதலிய சாமான்களும், ராஜாங்கத்தாரால் விசே ஷமாகக் காட்டப்பட்ட காட்சிப்பொருட்கள். சென்னை ராஜதானி யில் ஆக்கப்படும் எண்ணிறந்த ஆகார வகைகளும், பழத்தினிசுகளும் அப்பழங்களினாற் செய்யப்படும் ஜாம், ஜெல்லி, ஷர்பத்து முதலிய வைகளும் கடையெங்கும் நிரம்பியிருந்தன. பனைமரத்திலிருந்தும் தென்னமரத்திலிருந்தும் செய்யப்படும் பலவிதமான வெல்லங்களும், பனையோலையாற் செய்யப்படும் கூடை, முறம், பாய் முதலிய சாமான் களும் தென்னிந்தியாவில் இந்த மரங்கள் எவ்விதமாய் உபயோகப்படு கின்றனவென்பதைக் காட்டின. இவையன்றி, அங்கு சில ஏற்றங் களின் மாதிரிகளும், ஏற்ற மிறைப்பதற்கு வேண்டிய பல உபகரணங் களின் மாதிரிகளும், சில உபகரணங்களும் வைக்கப்பட்டிருந்தன. இவையனைத்தும் காட்சிப்பொருட்களாய் மாத்திரம் இருந்தனவே யன்றி ஒன்றையும் ராஜாங்கத்தார் விற்கவில்லை.




மச்சவகைகள் சம்பந்தமான காட்சிப்பொருட்கள்

மச்ச இலாகாவாரால் அங்கு ஏற்படுத்தப்பட்ட கடையில், மீன் பிடிக்கும் பொறிகள், வலைகள், படவுகள் முதலியவற்றை விளக்கும் மாதிரிகளும், மீன்களைக் கருவாடாகச் செய்யும் சாலையின் விபரங்களைக் காண்பிக்கும் மாதிரியும், மீன்களைக் கொண்டுபோவதற்கேற்ற கூடைகளும், நண்டுகளைக்கொண்டு செல்வதற்கேற்ற குடங்

களும், சாராயத்திலிட்டுப் பத்திரப்படுத்தப்பட்ட பலவகையான மீன்களும், மீன் முட்டைகளும், மீன்களின் ஆகார தினிசுகளும் விசேஷமாய் காட்டப்பட்டன. கடலில் வளரும் பலவகையான புல் பூண்டுகளும், சங்கு வகைகளும், சங்கினுற் செய்யப்பட்ட காப்புகள், வளையல்கள், மோதிரங்கள், சங்கிலிகள் முதலியனவும், சுண்ணும்பாகச் செய்யப்படும் கிளிஞ்சல்கள், சிப்பிகள், சுண்ணும்புக் கற்கள் முதலியனவும் கடையில் ஏராளமாய் வைக்கப்பட்டிருந்தன. தகர டப்பிகளிலடைத்துப் பத்திரஞ் செய்யப்பட்ட பலவிதமான மீன்கள் ஏராளமாய் விலையாயின. மலையாளத்திலுள்ள சாலியம் என்னுமிடத்தில் ராஜாங்கத்தார் ஸ்தாபித்திருக்கும் தொழிற்சாலையில் பத்திரப்படுத்தி யனுப்பின ஸார்டின் மீன் டப்பிகளை ஜனங்கள் பிரியமாய் வாங்கினுர்கள். அவை மாத்திரம் சுமார் நூறு பவுனுக்கு விலைப்பட்டன. அங்கு வந்திருந்த இறால் தினிசுகள் முழுவதும் விலையானபின் திரும்பியும் சென்னையிலிருந்து இறால் தருவிக்கப்பட்டது. இந்தக் கடை எல்லா விஷயங்களிலும் இந்தியா தேசத்துக் கடையாகவே தோற்றிற்று. அங்கு உதவிசெய்த ஆங்கிலேய ஸ்திரீகளும் உயர்ந்த பட்டுப் பிடவைகளைக் கட்டிக்கொண்டமையால் இந்திய ஸ்திரீகளைப்போலவே காணப்பட்டனர்.

இந்தக் கடையில், முத்துக் குளிப்பவர்களின் உபகரணங்கள், பலவிதமான கட்டுமரங்கள், மீன் பிடிக்கும் படவுகள் முதலியவற்றின் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. அவை ஜனங்களுக்கு வெகு விநோதமாயிருந்தன.

இந்திய அலுமினிய வர்த்தக சங்கத்தாருடைய கடையில் அலுமினியத்தாற் செய்யப்பட்ட பலவிதமான சாமான்கள் ஏராளமாய் வைக்கப்பட்டிருந்தன. அதற்குரிய ஏற்பாடுகள் யாவும் அச்சங்கத்தாருடைய விசாரணைத் தலைவரான ஹாரிஸ் துரையவர்களால் நேரிற் செய்யப்பட்டன. நமது தேசத்தவர்கள் உபயோகப்படுத்துகிற சகலவிதமான சாமான்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. ஜனங்கள் அவற்றை வாங்கிக்கொள்ள விரும்பினுர்கள். ஆயினும், பல்பொருட்காட்சி முடிவு பெறுகிறவரையில் அவற்றை விற்பதில்லையென்று முன்னரே தீர்மானித்திருந்தமையால், அலுமினிய சாமான்கள் விஷயத்தில் அதிக வியாபாரம் நடக்கவில்லை. பல்பொருட்காட்சி முடிவடைந்தபின் அவற்றை நல்ல விலைக்கு விற்க சாத்தியப்



அலுமினிய சாமான் கடை.

படவில்லை. ஆகையால் அவற்றை வந்த விலைக்கு விற்கவேண்டிய தாயிற்று.

சென்னையிலிருந்து கொண்டுபோன ஜமுக்காள தினிசுகள் ஒரு கடையில் பிரத்தியேகமாய் வைக்கப்பட்டன. ஜமுக்காளம், கம்பளி முதலியவற்றில் மேலைத் தேசவாசிகளுக்கு மிகப் பிரீதி. ஆகையால் அநேகமாய் இந்தக் கடையிலிருந்த சாமான்கள் முழுவதும் வெகு



கொத்துவேலைசெய்த மரச்சாமான்கள் முதலியன

சீக்கிரத்தில் விலையாயின. ஜமுக்காளங்களிலுள்ள பல வர்ணங்களையும் வேலைப்பாடு முதலியவற்றையுங் கண்டு, கைத்தொழிலில் இந்தியா தேசத்தவர்களுக்குள்ள சாமர்த்தியத்தை வியக்காதார் யாருமில்லை. சென்னைச் சித்திரவேலை வித்தியாசாலையார் அனுப்பின பலவிதமான கொத்துவேலை செய்த மரச்சாமான்களும், பிசின்வேலை செய்த பொன்னிறமான தட்டுகள், பெட்டிகள் முதலியனவும் மற்றைய

நூதனமான சாமான்களும் ஒரு கடையாக அமைக்கப்பட்டன. இவ்விதமான சாமான்கள் வேறு பல தொழிலாளரிடத்திலிருந்தும் வர்த்தகரிடத்திலிருந்தும் வந்தன. சென்னைச் சித்திரவேலை வித்தியா சாலையார் அனுப்பின யானைத் தந்தத்தாற் செய்து வெள்ளி கட்டின முகம் பார்க்கும் கண்ணுடியும், சிற்றுளிவேலை செய்த நூக்கமரத்து மேசை நாற்காலிகளும், அற்புத வேலைப்பாடுடைய பன்னீர்ச் செம்பு, சந்தனக்கிண்ணம், தேய்க் கெண்டிப் பாத்திரம், பாற்கலசம் முதலியவைகளும் பற்பல தேசத்தவர்களாற் புகழ்ந்து கொண்டாடப்பட்டன. இவற்றுள் முதலிற் சொல்லப்பட்ட முகம் பார்க்கும் கண்ணுடி கொல்லங்கோட்டு ராஜாவால் சித்திரவேலை வித்தியா சாலைக்கு இரவலாகக் கொடுக்கப்பட்டது. நூக்கமரச் சாமான்களுள், டச்சு தேசத்து மாதிரியாய் வெகு விசித்திர வேலைப்பாடமைந்த அழகிய நாற்காலியொன்று ஸர் உவில்லியம் பியர்ட் ஸெல் துரை அவர்களால் அனுப்பப்பட்டது.

பக்கிங்ஹாம் அண்டு கார்னுட்டிக் நெசவு தொழிற் சங்கத்தாருடைய (Buckingham and Carnatic Mills) விசாலமான கடையில் அவர்களுடைய யந்திரசாலைகளில் நெசவு செய்யப்பட்ட பலவிதமான துணிகள் காட்சியின்பொருட்டு வெகு அழகாய் ஜோடித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அழகுபெறக் காட்டுவதற்கு வேண்டிய மேசைகள், பீரோக்கள், கண்ணுடிப் பெட்டிகள் முதலிய மரச் சாமான்கள் யாவும் சென்னையிலுள்ள அச்சங்கத்தவர்களுடைய தொழிற்சாலைகளிலேயே செய்யப்பட்டு, பின்னர் உவெம்பிளிக்கு அனுப்பப்பட்டன. உறுதியிலும், வேலைப்பாட்டிலும், பளபளப்பிலும், அந்தச் சாமான்கள் யாவும் நிகரற்றவையாய் விளங்கின. அவர்களுடைய கடை சென்னை மண்டபத்தில், காட்சிக்கு நயந்த விசேஷமான விடத்தில் அமைக்கப்பட்டிருந்தமையால் உலகத்தின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த வர்த்தகரும் பிறரும் அவர்களுடைய சரக்குகளை நன்றாய்க் காணக்கூடியதாயிருந்தது. அவர்களுடைய காட்சிப் பொருட்களுள், அவர்கள் தொழிற்சாலையிலேயே செய்யப்பட்ட 1,300 குதிரை பலங்கொண்ட நீராவியந்திர மொன்றும், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் அபிவிர்த்தி சாலையின் மாதிரியும் தொழிலாளருக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள வாசஸ்தலங்கள் பள்ளிக் கூடங்கள் முதலியவற்றைக் காட்டும் படங்களும் விசேஷமாய் மதிக்

கப்பட்டன. மேற்கூறிய நெசவு தொழிற் சங்கத்தார் தொழிலாள ருடைய சௌகர்யத்திற்காகக் கட்டியுள்ள சிறு வீடுகள், அபிவிர்த்தி சாலை, பள்ளிக்கூடம் முதலியவை தென்னிந்தியாவில் கைத்தொழி லடைந்திருக்கும் உயர்ந்த நிலைமை மாத்திரமல்ல, தொழிலாளரு டைய நன்மைக்காக நெசவுயந்திர சங்கங்கள் என்னென்ன சௌகர் யங்களைச் செய்யக்கூடுமென்றும் தெரிவிக்கின்றன. சென்னையில் பக்கிங்ஹாம் அண்டு கார்னாட்டிக் நெசவு தொழிற் சங்கத்தார் செய்து வரும் வேலை வெகு விமரிசையானது. அவர்களுடைய பிரமாண்ட மான தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ள விடம் சென்னை நகரின் ஒருபுறத்தே வெகு அலங்காரமாக அமைந்துள்ளது. திறந்த வெளியா யும் நல்ல காற்றோட்டமுடையதாயுமுள்ள மிக்க விசாலமான ஸ்தா னத்தில் அத்தொழிற்சாலைகளும், தொழிற்சாலை உத்தியோகஸ்தர் வசிக்கும் வாசஸ்தலங்களும், தொழிலாளர் உறையுட்களும் கட்டப்பட் டிருப்பதால், அந்த ஸ்தானம் சுகாதாரத்திற்கேற்றதா யிருக்கின்றது. நாற்புறமும் தயங்கும் உயர்ந்த மதில்களும் அவற்றின் மத்தியில் அணியணியாகக் காணப்படும் தொழிற்சாலைகளும், வானோங்கி நிற்கும் புகைப் போக்கிகளும், எண்ணிறந்தனவாய யந்திரங்களும் அங்கு பிரதிதினமும் வேலை செய்யும் பல்லாயிரம் தொழிலாளரும், வர்த்தகாபிமானிகட்கு அக்களிப்பைத் தருவனவாம். தொழிலாளர் நன்மையைக் கருதி அவர்களுக்கு வேண்டிய பலவிதமான சௌ கர்யங்களை இந்தியாவில் முதல்முதல் ஏற்படுத்தினவர்கள் இவர்களே யாவர். இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றி அநேக நெசவு தொழிற் சங்கத்தார் தங்கள் தொழிலாளரின் நன்மைக்காக அவ்வித சௌகர்யங்களை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றனர்.

பக்கிங்ஹாம் அண்டு கார்னாட்டிக் நெசவு தொழிற்சாலைகளின் உட்புறத்தே சென்று அங்கு காணப்படும் கட்டடங்களினழகையும், வீதிகள், மின்சார தீபங்கள், ஜலதாரைகள் முதலியவற்றினழகை யும், தொழிலாளருக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளிக்கூடம், புஸ்தகசாலை, உண்டிச் சாலைகள், சிலம்ப மண்டபம், நாடக அரங்கம், மளிகைக் கடை முதலியவற்றினழகையும் நோக்குமிடத்து, அந்த ஸ்தானத்தை ஒரு சிறிய நகரமென்று நிச்சயிக்கத்தக்கதாயிருக்கின் றது. புல் பூண்டுகளும் செடிகளுமடர்ந்தும், சிற்சிலவிடங்கள் பள் ளமான நிலமாய் ஜலம் தேங்கியும் சிறிதும் பிரயோஜனமற்றிருந்த



காப்பி, தேயிலை, பட்டுத்துணிக் கடைகள்.

அந்த ஸ்தானத்தை மனோரம்மியமான சிறந்த சிறு நகரம்போற் செய்த பெருஞ்சிறப்பு இச்சங்கத்தவர்களுக்கே உரியது.

தொழிலாளர் வேலை செய்யும் காலம் போக மற்றைய காலங்களை அவர்கள் சந்தோஷமாய்க் கழிப்பதற்கு நெசவு தொழிற் சங்கத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகளும், ஸ்தாபித்திருக்கும் சகாய நிதியும் வியக்கத்தக்கவை.

கோயம்புத்தூரிலுள்ள பிரபல வர்த்தகர்களாகிய ஸ்டேயின்ஸ் வர்த்தக சங்கத்தார் (Messrs. Stanes & Co) தங்களுடைய பிரதிநிதியொருவனை அனுப்பி காப்பி, தேயிலை முதலிய சரக்குகளையும், சென்னையிலுள்ள ஸ்பென்ஸர் வர்த்தக சங்கத்தார் (Messrs. Spencer & Co) பலவகையான சுருட்டுக்களையும், பற்பல இந்திய வர்த்தகர் நூற்றுக்கணக்கான பட்டுத்தினிசுகளையும், அங்கு கடைகளையமைத்துப் பரப்பி வைத்திருந்தனர். அவை யாவும் நேத்திரானந்தத்தை விளைத்ததுமன்றி, அச்சரக்குகளைப்பற்றிப் பல தேசத்தவர்கள் அறிவதற்கும் ஏதுவாயின.

கொச்சியிலுள்ள (Messrs. Pierce Leslie & Co) பியர்ஸ் லெஸ்லி வர்த்தக சங்கத்தார் தென்னம் நாரினாற்செய்த பாய் முதலியவைகளையும் பல்லாவரத்திலுள்ள தோல்வர்த்தக சங்கத்தார் பலவிதமான தோல்களையும் தோற்சாமான்களையும் தத்தம் கடைகளில் விசேஷமாய்க் காண்பித்தனர்.

சென்னை ராஜதானியின் மேற்குக்கரையிலுள்ள கொச்சி சமஸ்தானம் சென்னை மண்டபத்தில் தனக்கென்று ஒரு இடத்தை அமைத்துக்கொண்டு பற்பலவிதமான காட்சிப்பொருட்களைக் காட்டிற்று. அந்த ராஜ்ஜியத்தின் குடி ஜனத்தொகை சுமார் பத்துலக்ஷம். கொச்சி மகாராஜா ஜனங்களால் அதிகமாய் மதிக்கப்படுபவர். கொச்சி ராஜ்ஜியத்துக் காட்சிப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்த விடத்திற்குச் செல்லும் வில்வளைவாயமைந்த வாசலின்மேல் 'கௌரவமே எங்கள் குடும்பத்திற்குரிய செல்வம்' என்னும் சிறந்த வாசகம் எழுதப்பட்டிருந்தது. வெண்கலச்சாமான்கள், யானைத் தந்தத்தாற்செய்த பலவிதமான சாமான்கள், பாய்கள், தென்னந்தும்பு, தென்னம் நார்க்கயிறு, நூக்கமரச் சாமான்கள் மலையாளிகள் வசிக்கும் வீட்டைப்போலும் மாதிரி, கொச்சியிலுள்ள கோயில் மாதிரி முதலியவைகளே கொச்சி சமஸ்தானத்தின் விசேஷ காட்சிப்பொருட்கள். கொச்சியிலுள்ள புதிய துறைமுகத்தைப்போலும் மாதிரியொன்று, கொச்சியில் கப்பல்கள் போக்கு வரவு செய்வதற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை விளக்கிக் காட்டின.

கொச்சியைத்தவிர, பங்கனப்பள்ளி, சாந்தூர், ஜேப்பூர் என்னும் மூன்று சிறிய சமஸ்தானங்களும் சென்னை மண்டபத்தில் தங்கள் காட்சிப்பொருட்களைக் காட்டின. இவையன்றி அநேக ஜெமின்தார்கள் தங்கள் குடும்ப சுதந்தரமான சில அருமையான பொருட்களையும், குடியானவர்கள் கைத்தொழிற் பொருட்கள் பலவற்றையும் அனுப்பி பல்பொருட்காட்சி விஷயத்தில் தங்களுக்குள்ள உண்மையான அனுதாபத்தைக் காண்பித்தனர். காளாஸ்திரி ராஜா, பொற்பிடியிட்ட தன்னுடைய வாளையும், ஸ்ரீ இராமருடைய பட்டாபிஷேகத்தைக்குறிக்கும் சாசனமொன்றையும் அனுப்பினர். சிவகங்கை சமஸ்தானம், தென்னம் தும்பினாற்செய்த பலவகையான சாமான்களையும் பித்தளையாற்செய்த குற்றுவாளொன்றையும் அனுப்பியது. வெங்கட்டகிரி ராஜா பெண்களுடுத்துக்கொள்ளும் பலவிதமான பிடவைகளையும், தம்முடைய சமஸ்தானத்தில் விசேஷமாயகப்படும் அப்பிரகம் (Mica) சிலேட்டு முதலியவைகளையும் அனுப்பினார். விஜயநகரத்து மகாராஜா, வெள்ளியினாற் செய்யப்பட்ட இராமர், இலக்ஷ்மணர், சீதை இவர்களின் விக்கிரகங்களையும், வெள்ளி விருக்ஷமொன்றையும், அரண்மனையில் தாம் பூஜிக்கும் இஷ்டதேவதைக்கென்று செய்யப்பட்ட வெள்ளிப்பீடமொன்றையும் அனுப்பினார்.

சென்னை ராஜதானியின் சில ஜில்லாக்களிலுள்ள பலர் கர்மசபைகளாகச் சேர்ந்து காட்சிப்பொருட்களைச் சேகரித்துக்கொடுத்து பல்பொருட்காட்சிக்காக வெகு சிரத்தை யெடுத்துக்கொண்டனர். அவற்றுள் பல்லாரி, திருச்சினப்பள்ளி, இராமநாதபுரம் என்னும் மூன்றும் முக்கியமானவை. வடஆறுகாட்டிலும், மலையாளத்திலும் அவ்விதமான கர்மசபைகளேற்பட்டு அதிக உதவிசெய்தன. ஆயினும் கிருஷ்ணா ஜில்லா கலெக்டராயிருந்த ஜி. எச். ஜர்க்ஸன் துரை அவர்களும், இராமநாதபுரம் ஜில்லா கலெக்டராகிய றவ் பகதூர் வி. டீ. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி வியக்கற்பாலது.

மிக்க பிரசித்திபெற்ற கொண்டப்பள்ளி விளையாட்டுச்சாமான்கள் கிருஷ்ணா ஜில்லாவிலிருந்து வந்தன. அவைகளின் மூலமாய்த் தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களுடைய ஜீவியம், தொழில், நடை, உடை, பாவனை முதலியவற்றை அறியக்கூடியதாயிருந்தது.

சென்னை மண்டபம் தென்னிந்தியாவிலுள்ள திரவியமனைத்தையும் தன்னகத்தே அடக்கியிருந்தமையால், அம்மண்டபத்திற்கு வந்து அங்குள்ள அருமையான காட்சிப்பொருட்களைக் கண்டு களியாத பிரபுக்கள் இல்லை. எமது மன்னரும், அவர் பத்தினியும், உவேல்ஸ் இளவரசரும், மற்றை ராஜகுடும்பத்தவரும் அம்மண்டபத்திற்குச் சென்று அதைக் கண்ணியப்படுத்தியுள்ளார். ரூமானிய தேசத்து அரசர், அரசி, ஸ்பெயின் தேசத்து அரசி, பிரான்ஸ் தேசத்துப் பிரதம மந்திரி, பிக்கானீர் சமஸ்தானத்து அரசர், பரோடா அரசர், முன் சென்னைத் தேசாதிபதியாயிருந்த பெண்ட்லண்ட் பிரபு, அவர் பத்தினி முதலிய பல ஆங்கிலேய இந்திய சீமான்கள் அம்மண்டபத்திலுள்ள பல காட்சிகளைக்கண்டு களித்தனர். சென்னையில் முன் நீதியதிபதிகளாயிருந்த உவாலிஸ், ஐலிங், ஓல்ட்வீல்ட் முதலிய பிரபுக்களும், இப்பொழுது நீதியதிபதிகளாயிருக்கும் ஓட்ஜேர்வ்ஷ், மாதவன் நாயர், கிருஷ்ணன் முதலிய பிரபுக்களும், தென்னிந்தியாவில் உயர்ந்த உத்தியோகம் வகித்திருந்த பிரபுக்கள் பலரும் அம்மண்டபத்திற்குச் சென்று சென்னையைக் கௌரவப்படுத்தினர். அம்மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த புஸ்தகமொன்றில் அங்கு வந்தவர்கள் தங்கள் பெயரையும் சென்னை மண்டபத்தைப்பற்றித் தாம் கொண்ட அபிப்பிராயத்தையும் எழுதியுள்ளார்.

சென்னை மண்டபத்தில் பரப்பியிருந்த சாமான்கள் நன்றாய் விலையாயினவோ வென்னும் விஷயத்தைக் கவனிக்கும்போது, அவை கண் காட்சிக்காக அங்கு வைக்கப்பட்டனவே யன்றி விற்பனைக்காகவல்ல வென்பதை நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும். ஆயினும் அங்கு வந்தவர்களிற் பலர் சில சாமான்களை வாங்கவேண்டுமென்று விரும்பினமையாலும், சில தினிசுகளில் பல இருந்தமையாலும், சிற்சில சாமான்களைப் பல்பொருட்காட்சி குறையுறுவண்ணம் விற்கக்கூடியதாயிருந்தது. ஜனங்கள் விசேஷமாய் விரும்பி வாங்கின சாமான்கள் லேஸ், சித்திரத்தையல் வேலைசெய்த துணிகள், மசாலைச்சாமான்கள், ஜமுக்காளங்கள், கம்பளிகள், சிற்றுளி வேலைசெய்த நூக்கமரச்சாமான்கள், ஊதுவர்த்திகள், சுருட்டுகள், கொண்டப்பள்ளி விளையாட்டுச் சாமான்கள் முதலியவைகளே. சென்னை லேஸ் கடையை வைத்து நடத்தின மாதுசிரோன்மணி, மிஸ்ஸிரிஸ் ரிச்சாரிட்ஸ் அம்மாள் எழுதிவைத்திருக்கும் குறிப்

பினால், சென்னை லேஸுக்கு இங்கிலாந்தில் அதிக செலவுண்டென்று தெரிகிறது. ஊதுவர்த்திகளும் நன்றாய் விலையாயின. படங்கள் அச்சிட்ட கார்ட்டுகளை அநேகர் விரும்பி வாங்கினார்கள். இவ்விதமாய் லேஸ், ஊதுவர்த்தி, படங்கள் அச்சிட்ட கார்ட்டுகள், சுருட்டு என்னுமிவற்றை மாத்திரம் விற்று 1,600 பவுன் லாபமுண்டாயிற்று. இந்தியாவிலுள்ள சிறைச்சாலைகளிற் செய்யப்படும் ஜமுக்காளங்களும், கம்பளிகளும் நன்றாய் விலையாயின. சொற்ப விலையுள்ள கொத்துவேலைசெய்த மரச்சாமான்களைச் சுலபமாய் விற்கக்கூடியதாயிருந்தது. அவற்றுள் அதிக விலையுள்ள சாமான்களை விற்பது வெகு கஷ்டமாயிருந்தது. பட்டுப்பிடவைகள் ஆங்கிலேயர் அபிமானிக்கக்கூடிய வேலைபாடுடையவையா யிருந்தும் அவற்றை உடுத்துக்கொள்பவர்கள் அங்கில்லாமையால் நன்றாய் விலையாகவில்லை. சிறிய பட்டுக்குட்டைகளும், சட்டைகளுக்குபயோகமான பட்டுதினிசுகளும் நன்றாய் விலையாயின. பல்பொருட்காட்சி நடந்தகாலத்தில் சென்னை மண்டபத்தில் விலையான சாமான்களின் கணக்கு விபரம் இது :—

| சாமான்கள் | டவுண் | ஷி. | பெ. |
|---|---|---|---|
| லேஸ், பின்னல் வேலை முதலியன | 2, 853 | 6 | 0 |
| சுவைதரும் பதார்த்தங்கள் | 790 | 19 | 8 |
| ஜமுக்காளம், கம்பளி | 538 | 17 | 2 |
| பருத்திநூல் துணிகள் | 184 | 10 | 8 |
| சித்திரவேலை செய்த மரச்சாமான்கள் | 648 | 6 | 6 |
| ஊது வர்த்திகள் | 370 | 3 | 9 |
| சுருட்டு தினிசுகள் | 776 | 15 | 8½ |
| படங்கள் அச்சிட்ட கார்ட்டுகள் | 393 | 5 | 6½ |

ஆகையால் சென்னை மண்டபப் பல்பொருட்காட்சியி லடைந்த பெரிய சித்தியை வர்த்தக முறையாய் நோக்குமிடத்தும் வியக்கத்தக்கதாகவே இருக்கின்றது. சென்னையிலுள்ள பிரபலமான ஆங்கிலேய வர்த்தகரிற் பலர் உவெம்பிளியில் தாங்கள் வைத்திருந்த கடைகளின் வர்த்தக விஷயமான காரியங்களை சுந்தராச்சார்லு பொறுப்

பிலேயே விடுத்தனர். ஆகையால் பலர் பற்பலவிதமான சரக்குகளின் விலை, தன்மை முதலியவற்றை அவரிடத்தில் விசாரிக்கவும், வேண்டும் சரக்குகளுக்கு அவர் மூலமாய் உத்தரவனுப்பவும் வேண்டியதாயிற்று. விசேஷமாய் மரவள்ளிக்கிழங்கு மா, எண்ணெய் தரும் விதைகள், பனந்தும்பு, சணல், தேயிலை, காப்பி, வாசனைத் திரவியங்கள், பருத்தி, பட்டு, முதலைத்தோல், ஊதுவர்த்தி, லேஸ் முதலிய சரக்குகளைப்பற்றிப் பல வர்த்தகர் விசாரணை செய்தனர். இது அச்சரக்குகளின் வர்த்தக விருத்திக்கு அனுகூலமென்று எண்ணக்கூடியதாயிருக்கிறது.

சென்னை மண்டபத்தின் செலவுக்காக ராஜாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட தொகை 3,70,500 ரூபாய். இதில் செலவான தொகையின் மொத்தம் ரூபாய் 2,23,378-0-10. ஆகையால் செலவாகாது மீந்து கையிருப்பாய் நின்ற தொகை ரூபாய் 1,47,121-15-2.

உவெம்பிளி பல்பொருட்காட்சியில் சென்னை ராஜதானி காட்டிய திறமை மிகவும் வியக்கத்தகுந்தது. சென்னைப் பல்பொருட்காட்சி நிர்வாக சபையார் சென்னைச் சட்ட நிரூபண சபையின் அதிகாரம்பெற்று அவ்விஷயத்தில் பிரவேசித்தபோது, பல்பொருட்காட்சி நடைபெறுவண்ணம் அநேக இடையூறுகள் நேரிட்டனவாயினும், அவையொன்றும் பயன்பட்டில. சென்னையின் பல்பொருட்காட்சி இவ்விதமாய் மிக்க அனுகூலத்தோடு முடிவடைந்தது மிக்க சந்தோஷத்திற்குரிய விஷயம்.

சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்கள், முன் ஒருபோதும் இப்படிப்பட்டதோர் பல்பொருட்காட்சியைத் தங்கள் ராஜதானிக்கு வெகு தூரத்திலுள்ள இங்கிலாந்தைப்போலும் புறநாட்டில் நடத்தினதேயில்லை. அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தை நன்றாய் நடத்தினார்களென்பது சென்னை மண்டபத்திற்குச் சென்று அங்குள்ள காட்சிப்பொருட்களையும், அவைக்காக அமைக்கப்பட்ட மண்டபத்தையும் நேரிற் கண்டபின் அவர்கள் கொடுத்திருக்கும் நற்சாட்சிகளால் இனிது விளங்கும். அதற்குக் காரணம் ராவ் பகதூர் சுந்தராச்சாரியார் அவர்களுடைய பெரு முயற்சியேயென்று ராஜாங்கத்தாரும் தங்கள் அறிக்கைப்பத்திரத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். சென்னை மண்டபத்தில் சென்னை ராஜதானியின் பரிமளம் வீசநின்றதென்று ஒருவரல்ல, சென்னை ராஜதானியை

நன்கறிந்த பலர் கூறியது வீண் வாக்கியமல்ல. ஆங்கிலேய ராஜ்ஜியத்திலிருந்து மாத்திரமல்ல, உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அங்கு வந்த லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு சென்னை ராஜதானி தானடைந்திருக்கும் நாகரீகம் இத்தன்மையதென்றும், இனிமேல் உலக நன்மையின்பொருட்டு தான் செய்யக்கூடியது இன்னதென்றும் கூறியது சர்மானியமான விஷயமன்று. இந்தப் பல்பொருட்காட்சியாலுண்டான நன்மைகளைக் கைக்கொண்டு அதனாலேற்பட்ட வர்த்தக மார்க்கங்களின் வழியே சென்று, பெரிய வர்த்தகங்களை நடத்தித் தமது தேசம் சிறந்து விளங்குமாறு செய்வதே இத்தேசத்தவர் கடனாகும்.

---

## ஏழாம் அதிகாரம்

## பல்பொருட்காட்சியை அரசர் திறந்ததும் அக்காட்சியால் ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்கு விளையும் பயனும்

முன்னதிகாரங்களிற் கூறப்பட்ட வண்ணம் உவெம்பிளி சிங்கார வனத்தின்கண்ணே அநேக மாளிகைகளும் சிறந்த கட்டடங்களுமெழுந்து அவ்வனத்தை அழகியதோர் நகரம்போற் றோன்றுமாறு செய்தன. எண்ணிறந்த சிற்றுண்டிச்சாலைகளும், கடைகளும், நாடக சாலைகளும், சங்கீத சாலைகளும், தபாற்சாலைகளும், படக்காட்சி சாலைகளும், வினோதமாய்ப் பொழுது போக்குவதற்கேற்ற பூஞ்சோலைகளும், காட்சிப்பொருட்களுக்கென் றமைக்கப்பட்ட பல் திறத்தவாகிய மாளிகைகளும், மண்டபங்களும், விசித்திர சாலைகளும் வனமெங்ஙனும் பொலிந்து விளங்கின. பல்பொருட்காட்சி ஆரம்பிப்பதற்குப் பல தினங்களின் முன்னரே உவெம்பிளி சிங்காரவனம் மங்களகரமாய் விளங்கியது. அங்கு கட்டடங்கள் கட்டப்படாது வெறுமையாயிருந்த நிலமெல்லாம் பச்சையாடைபூண்டு, புல் பூண்டு, செடி கொடி முதலியவற்றால் நிறைந்து, அவற்றில் பலவர்ணமுடைய புஷ்பங்கள் புஷ்பித்திருந்தமையால் அவ்வனம் புஷ்பவனமாகவே தோன்றிற்று. மிக்க விசித்திரமாயமைக்கப்பெற்ற மாளிகைகளில்

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துச் சமஸ்த செல்வங்களும் வந்து நிரம்பின மையால் அம்மாளிகைகள் நிதியச்சாலைகளே போன்றன. ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் சம்பத்துக்களனைத்தும் அங்கு காணப்பட்டன. மிக்கவழகாயமைத்துச் செப்பனிடப்பட்ட அச்சிங்காரவனத்திலுள்ள வீதிகளில் குதிரைவண்டி, மோட்டார் வண்டி, துவிச்சக்கரவண்டி முதலிய பலவகையான வண்டிகள் இரைந்து செல்லுமோசையும், இங்கிலாந்தின் பற்பல பாகத்திலிருந்து வரும் புகைவண்டிகளின் பேரிரைச்சலும், காதுகளைச் செவிடுபடச் செய்யும். இவையனைத்தும் இங்கிலாந்தின் ஏகாதிபத்திய மகோற்சவமொன்று நடைபெறப் போகின்றதென்பதை முன்னுணர்த்துவனவாயின. உவெம்பிளி சிங்காரவனத்துப் பிரதம சங்கீதமேடையில் பலவிதமான வாத்தியங்கள் சாயங்கால வேளைகளிற் கோஷிப்பதும், விசித்திர வாடை பூண்ட ஆங்கிலேய அரிவையர் ஆடவர் குழாம் மிக்க உற்சாகத்தோடும் அக்களிப்போடும் ஆரவாரத்தோடும் சென்று சங்கீத விநோதத்தைக் கேட்டுச் சந்தோஷிப்பதும், பேரானந்தத்தை விளைவிக்கும். உவெம்பிளியிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் காட்சி பார்க்க வந்த ஜனங்கள் நிறைந்து பல்பொருட்காட்சியைக் கண்டு களிக்குமாறு அதின் ஆரம்பத்தை எதிர்பார்த்திருந்தனர். பல்பொருட் காட்சிக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்து முடிந்தன. மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியும் ஆங்கிலேய நாட்டரசரும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் சிரோ ரத்தினமுமாக விளங்கும் ஜார்ஜ் மன்னர் இப்பெரும் ஏகாதிபத்திய மகோற்சவத்தை கி. பி. 1924-ம் ௵ ஏப்ரல்௴ 23-ம் ௳ உவெம்பிளி சிங்காரவனத்தில் நவீனமாய் இயற்றப்பட்டுள்ள ஸ்டேடியம் என்னும் மகா அரங்கத்தில் பல்லாயிரம் பிரஜைகளும், புறதேசவாசிகளும் கூடிய மகா சபையில் பலருமறியுமாறு திறந்து, அனைவருக்கும் நற்காட்சியளிப்பாரென்று நிர்வாக சபையார் அரசருடையவனுமதியோடு தேசமெங்கும் பிரசித்தப்படுத்தியிருந்தனர்.

அம்மகோற்சவ தினத்தன்று, நகரமாய் மாறின உவெம்பிளி சிங்காரவனத்துக் காட்சியையும் அது கொண்ட கோலத்தையும் யாதென்றெடுத்துரைப்பது? பல வாரங்களாக, உவெம்பிளிக் காட்சியின் பொருட்டுப் பற்பல மாளிகைகளையும் மண்டபங்களையு மியற்றிய வதிகாரிகள் தத்தம் விசித்திர கட்டடங்களையும் அவற்றின் பக்கத்தே

யுள்ள வீதிகளையும் அலங்கரிப்பதே தொழிலாய்க் கொண்டனர். பச்சிலைகளும், மகா தோரணங்களும், புஷ்பமாலைகளும், பற்பல வர்ணத் துணிகளும், மாளிகை கோபுரம், மரம் செடி என்ற பேத மின்றி எங்கும் தொங்கி இளந்தென்றற் காற்றில் இன்பமாய் அசைந்து கொண்டிருந்தன. பல வர்ணந்தீட்டிய கொடிகள் வானுறவோங்கிய கொடி ஸ்தம்பங்களிலும், கோபுரங்களிலு மசைந்துகொண்டிருப்பது எம் மன்னர்பிரான், ஆங்கிலேய பல்பொருட்காட்சியைத் திறக்கும் மகோற்சவத்தை சமஸ்த ஜனங்களும் கண்ணாரக் கண்டு களிகூர வாருங்கள்' என்று கைகாட்டி யழைப்பதே போன்றது. மகோற்சவ தினத்திற்கு முற்பட்ட இரவில் உெம்பிளி சிங்காரவனத்தின் அதி யற்புத காட்சியை யாரோ எடுத்துரைக்க வல்லார்? மணக்கோலங் கொண்டு நின்ற மாடமாளிகைகள் மண்டபங்கள் முதலியவற்றின் சிறப்பும், மிக்க விசித்திரமா யியற்றிய தீபங்களைத் தாங்கிநிற்கும் கணக்கில்லாத தீபஸ்தம்பங்களின் சிறப்பும், அத்தீபங்கள் ஆகாயத்தி னின்றும் படிகமாலைகள் அணியணியாய்த் தொங்குவனபோலவும், வானத்திலுள்ள நட்சத்திரங்கள் யாவும் அங்கு இறங்கி வந்தாற்போல வும், இரவைப் பகலாக்குஞ் சிறப்பும், அவற்றினொளி சிங்காரவனத் தின் மத்தியிலுள்ள பொய்கை நீரிற் றுக்கலால், ஆங்கும் பிறிதோர் மகோற்சவம் நடைபெறுவதுபோலத் தோன்றும் சிறப்பும், ஆங்கு விளங்கும் அதிமனோகர வலங்காரங்களைக் கண்டு களிக்குமாறு ஜனங் கள் கும்புகும்பாய்ச் செல்லும் சிறப்பும், சிங்காரவனத்தில் ஆங்காங் கமைக்கப்பட்டுள்ள அரங்கங்களில் நடக்கும் நடன சங்கீத கேளிகா விநோதங்களின் சிறப்பும், சிற்றுண்டிச் சாலைகளில் ஜனங்கள் கூடி, ஆரவாரத்தோடு உண்டு களிக்கும் சிறப்பும், ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் முன்னொருபோதும் நிகழாத காட்சிகளாம். அச்சிங்கார வனத்தில் எங்குச் சென்றாலும் எப்பக்கம் நோக்கினாலும் அது கொடிகளடர்ந்த தோர் காடுபோலவும், மன்னர்மன்னன் பல்பொருட்காட்சியைத் திறப்பதற்கென்று இயற்றப்பட்டதோர் அலங்கார மண்டபம்போலவும் தோன்றிற்று.

ஏப்பிரல்மீ 23-ம் தேதி, பொழுது புலரு முன்னரே பீரங்கிகள் முழக்கி அந்நாள் எம்மரசர் பல்பொருட் காட்சியைத் திறந்து சமஸ்த ஜனங்களையும் களிக்கச்செய்யும் மங்கள நாளெனக் குறிப்பித்தன. இச்சுபசோபன காட்சியைக் கண்டுகளிக்க வருவான்போலச் சூரிய

னும் கீழ்த்திசையின்கண்ணே உதயமாயினன். எள்ளிட விடமொன் றின்றி அச்சிங்காரவனத்திலுள்ள வீதிகள் யாவும் ஜனக்கூட்டத்தால் நிறைந்தன. உவெம்பிளியின் சுற்றுப்புறங்களிலும், லண்டன் நகரத் திலும், இங்கிலாந்தின் பற்பல பாகத்திலுமிருந்து ஜனங்கள் வெள்ளம் புரண்டுவந்தாற்போல உவெம்பிளி சிங்காரவனத்தில் வந்து கூடினர். அரசனும் அரசியும் ஸ்டேடியம் என்னும் மகா அரங்கத்திற்குச் செல்லுமாறு பவனி வரும் மார்க்கத்தினிருபுறத்தையும் பிரித்தானிய சேனாவீரர் நிறைத்தனர். ஜனங்கள் நெருங்கிநின்ற விடங்களிற் குதிரைப்பட்டாளங்கள் நிறுத்தப்பட்டன. ஆங்கிலேய இராணுவத் தலைவரும், அவருடைய சைனியங்களும் ஆயிரக்கணக்கான போலீஸ் வீரரும் ஜனங்களுக்கு யாதொரு இடையூறும் நேரிடாவண்ணம் தக்க விடங்களில் நின்று காவல் செய்தனர். உவெம்பிளி சிங்கார வனம் அன்று ஓர் கடல்போல் தோன்றிற்று.

ஸ்டேடியம் என்னும் மகா அரங்கத்தில் ராஜாராஜாக்கள், மகுட வர்த்தனர், பட்டவர்த்தனர், ராஜப்பிரதிநிதிகள், ஸ்தானாபதிகள் சேனாபதிகள், அத்தியக்ஷகுருமார், மந்திரிமார், ஆங்கிலேய மகாமந் திராலோசனைச் சபையினங்கத்தவர், நீதியதிபர், நியாயதுரந்தரர், பண்டிதர், பாவலர், சாதாரண பிரபுக்கள், துரைமார், துரைபன்னி யர் முதலிய பல்திறத்தவர் தத்தம் பதவிக்கும் அந்தஸ்திற்கும் தக்க உடை தரித்தவராய் வந்துகூடி மன்னர்மன்னன் வரவை எதிர்பார்த் திருந்தனர். காட்சி பார்க்க வந்த ஜனங்கள் சுமார் லக்ஷம்பேர் வரை யில் அரங்கத்து மேடைகளில் வந்து கூடியிருந்தனர்.

பல்பொருட் காட்சியைத் திறப்பதற்கென்று குறிப்பிடப்பட்ட காலம் சமீபித்தவுடன் அரசனும் அரசியும் தமது மாளிகையினின்றும் புறப்பட்டு, அஷ்டதிக்கும் கிடுகிடுக்குமாறு பீரங்கிகள் வெடிதீர, பொன்மயமாய் விளங்கும் உடைதரித்த இராணுவவீரர் வாத்திய கோஷம் செய்துகொண்டு முன்செல்ல, எக்காளம் எத்திசையும் தொனிசெய்ய, ஜயபேரிகை முழங்க, குதிரைவீரர் வாளும் வேலும் கொடியும் பிடித்து முன்னும் பின்னும் நெருங்க, பீரங்கிப்பட்டாளம் காலாட்படை முதலிய சைனியங்கள் எப்புறமும் சூழ்ந்துவர, பொற் கொடி, குடை, கட்டியக்கோல் முதலிய ராஜ சின்னங்கள் எப்புற மும் துலங்க, மெய்க்காப்பாளர் கட்கதாரிகளாய்ச் சூழ்ந்து வர, பற்பல பொற்பணியமைத்த உடுப்புக்களிட்டு அலங்கரிக்கப்பட்ட ஆறு

குதிரைகள் பூட்டிய ராஜரதத்திலமர்ந்து சூரியனும் சந்திரனும் பல்லாயிரம் நட்சத்திரங்கள் மத்தியில் ஒருங்கே தோன்றினாற்போல அங்கெழுந்தருளிய சிறப்பு அங்கு கூடிய ஜனங்களுக்குக் காண்டற்கரிய காட்சியாயிற்று. வீதியினிருமருங்கிலும் தேங்கி நின்ற ஜனங்களில் சிலர் 'இதோ, எம் அரசர்! அதோ எம் ராணி! என்று ஆர்ப்பரிக்க வேறு சிலர் கைக்குட்டைகளையும் தொப்பிகளையும் அசைத்துக் கொண்டு 'ஜார்ஜ் அரசரும் மேரி ராணியும் நீடூழி வாழ்க'! என்றுசிகூற, சாளரவாயில்களினின்றும் ஆங்கில மாதர் பூமாரிபொழிய, அரசரும் அரசியும் புன்சிரிப்போடு இருபுறமும் திரும்பித் திரும்பித் தலையை யசைத்து, ஜனங்களுடைய ஆசீர்வாதத்தை அங்கீகரித்த வண்ணமாகவே மகா அரங்கத்தையடைந்தனர்.

அரசனும் அரசியும் அதியுன்னத கோலாகல வைபவத்துடன் பவனி சென்று மகா அரங்கத்துட் புகுந்தவுடன் அங்கு கூடியிருந்த வனைவரும் எழுந்து அரசனுக்கும் அரசிக்கும் மரியாதை செய்தனர். அரசனும் அரசியும் தமக்கென்றிடப்பட்ட இரத்தின கசிதமான ஆசனங்களின்மீது அமர்ந்தபின், உவெம்பிளி பல்பொருட்காட்சி நிர்வாக சபையின் சபாநாயகராகிய உவேல்ஸ் இளவரசர் எழுந்து, அரசர் இப்பல்பொருட் காட்சியைத் திறக்க ஒப்புக்கொண்டதற்காக நன்றிகூறி, பல்பொருட்காட்சியின் நோக்கங்களிவையெனச் சுருக்கமாய் எடுத்துரைத்த பின்னர், இப்பல்பொருட் காட்சியின்பொருட்டு ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பற்பல பாகங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் பிரபுக்களுக்கும் நிர்வாக சபையார் பொருட்டு நன்றிகூறி, இப்பல்பொருட் காட்சியைக் கிருபைகூர்ந்து திறந்தருள வேண்டுமென்று நம்மரசரை வேண்டினர். அவ்வண்ணமே அரசபிரானும் எழுந்து,

'நான் ஆங்கிலேய பல்பொருட் காட்சியைத் திறந்து வைப்பதற்காக அரசியோடு இங்கு வந்தது எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும் திருப்தியையும் தருகின்றது. இப்பல்பொருட்காட்சி இத்தகைய ஜயமான முடிவுக்கு வருவதற்குக் காரணமாயுள்ள ஆச்சரியமான ஸ்தாபன சக்திக்காகவும் பெருமுயற்சிக்காகவும் நாம் பல்பொருட் காட்சி சபையாருக்கும், நிர்வாக சபையாருக்கும், அவர்களுக்குக் கீழ் பாடுபட்டுழைத்த மற்றவர்களுக்கும் மனப்பூர்வமாய் மங்கல வாழ்த்துக் கூறவேண்டியவர்களாயிருக்கின்றோம். இப்பல்பொருட்

காட்சிக் கிடையூறாயிருந்த பற்பல விஷயங்களைப்பற்றியும் என்றுமில்லாத பிரதிகூலமான கால நிலைமையைப்பற்றியும் நான் நன்றாயறிவேன். நிர்ணயத்தோடும் காருண்ய சிந்தையோடும் செய்யப்பட்ட கடுமுழியங்களே அவற்றை முற்றிலும் மேற்கொண்டன. இது விஷயமாய்ப் பிரதமத்தில் நடந்த வேலைகளை அரசியையும் என்னையும்போல் நேரிற் கண்ட பலர், பல்பொருட்காட்சியைப்பற்றி மனதில் நாம் கொண்ட மகத்துவமான எண்ணத்தை நமக்கு முன்னே இப்பொழுது நிற்கும் இவ்வித அலங்காரமான நிஜரூபமாகச் செய்த பெருமுழைப்பையும் சாமர்த்தியத்தையும் நன்கு மதிக்கக்கூடும். சமுத்திரத்திற்கப்பாலுள்ள, என்னதிகாரத்திற்குட்பட்ட நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாக இங்கு வந்திருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், உத்தியோகஸ்தரல்லாத மற்றவர்களுக்கும் நல்வரவு கூறி, அவர்கள் இன்றையதினம் இங்கு வந்திருப்பதில் நமக்குள்ள மகிழ்ச்சியை வெளியிடுவது எனக்கு மிக்க சந்தோஷத்தைத் தருகின்றது. பற்பல ஜாதியாருடைய பொது அரசாட்சியின் நிஜமான ரூபம் எத்தன்மையதென்பதைக் காண்பிப்பதே இப்பெருங்காட்சியின் நோக்கமென்று நீங்கள் குறிப்பித்திருக்கின்றீர்கள். அந்நோக்கம் முற்றிலும் பூர்த்தியாய்விட்ட தென்பதை யாரும் சந்தேகிக்கமாட்டார்கள். இந்தப் பல்பொருட்காட்சி, இருநூற்றிருபது ஏக்கர் விஸ்தீரணமுடைய பூமிக்குள், ஆங்கிலேய கொடியின்கீழ் வாழும் சமஸ்த ஜாதியாருடைய சிற்பசாஸ்திர வுணர்ச்சியையும், கலாவல்லமையையும், கைத்தொழிற்றிறனையும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் முழுவதற்கும் விளக்கிக் காட்டும் மாதிரியென்று கூறத்தக்கது. இது, வித்தியாசமான குலங்களையும் சமயகோட்பாடுகளையும், ஸ்தாபனங்களையும் கொள்கைகளையுமுடைய ஜனங்களை ஒரே ஏகாதிபத்தியத்திற்குள் ஒன்று சேரும்படி செய்து, ஒரே பெரிய காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு தங்களுக்குள்ள விவேகமனைத்தையும் உபயோகிக்கும்படி அவர்களை ஏவின சுயேச்சையையும் பொறுமையையும் ஒத்துழைக்கும் தன்மையையும் உலகம் முழுவதற்கும் விளக்கிக் காட்டுகிற சிறந்த உதாரணமாக விளங்குகின்றது. ராஜ்ஜியம் முழுவதிலும் இயல்பாயுள்ளனவும் செய்துகொள்ளக் கூடியனவுமான சாதனங்கள் எவ்வளவினவென்று கணக்கிட்டறியவும், அவை எங்கிருக்கின்றனவென்றும், அவற்றை எவ்வாறு விருத்திசெய்து உபயோகிக்கலா

மென்றும் சிந்திக்கவும், ஜனங்கள் ஒருவருக்கு வேண்டியதை யொருவர் கொடுத்து உதவிசெய்யும்பொருட்டு எவ்விதமாய் ஒத்துழைக்கலாமென்பதை ஆலோசிக்கவும் இப்பல்பொருட்காட்சி நமக்கு உதவிசெய்கின்றது.

சாஸ்திரங்களைக் கற்பதினுலேற்பட்ட கல்வி யறிவையும், நோய்களைத் தடுப்பதற்கேற்ற சாதாரண பிரயத்தனங்களையும் சமாசப்படுத்துவதற்கும், ராஜ்ஜியத்தின் பல பாகங்களில் இன்னும் சுக ஜீவனத்திற்குப் பிரதிகூலமாயுள்ள கஷ்ட நிலைகளைச் சீர்ப்படுத்துவதற்கும் இப்பொருட்காட்சி ஏற்பட்டது. உதாரணமாக, உஷ்ணதேசத்து வியாதிகளைத் தடுப்பதற்காகச் சென்ற சில வருஷங்களிற் செய்த பிரயத்தனங்களை யோசித்துப் பார்ப்பீர்களாயின் உஷ்ண தேசங்களை நல்வழிப்படுத்தவும், ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் இன்னும் கண்டறியப்படாத சக்திகளை விருத்தி செய்யவும் இப்பல்பொருட்காட்சி எவ்வளவாய் உதவிசெய்யுமென்று நீங்கள் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். இச்சமயத்தில், மகாராணி விக்டோரியா பெருமாட்டி, அம்மாதரசியின் காயகராம் இளவரசர் என்னுமிவர்களிருவருடைய சரித்திரக் குறிப்போடும் சம்பந்தப்பட்டு, கி. பி. 1851-ம் வருஷம் நடந்த பிரசித்தி பெற்ற பல்பொருட்காட்சியும், அதைப் பிரதிஷ்டை செய்தகாலத்தில் சர்வ தேச சமாதானம் வளர்ந்தோங்கவேண்டுமென்று அவர்கள் கொண்ட விருப்பமும் நமது ஞாபகத்திற்கு வருகின்றன. நமது நோக்கம் அத்தனை பெரிதல்ல; அந்த ஒரே காரணத்தினுல் நாம் ஒரு வேளை தக்கவாறு பயனடையலாம்.

இந்தப் பல்பொருட்காட்சி, ராஜ்ஜியத்திலுள்ள சகல ஜனங்களும் ஒருவரிடத்திலிருந்தொருவர் அறியவேண்டியவற்றையும் தத்தமக்குள்ள விருப்பங்களையும் முன்னிலும் நன்ருய்த் தெரிந்துகொள்ளச் செய்யுமென்றும், சகோதர ஐக்கியமும், ஒத்துழைக்கும் குணமும் முன்னமே எங்கே யிருக்கின்றனவோ, அங்கே ராஜ்ஜியங்களுக்குள் நடக்கும் வர்த்தகத்தினுல் முன்னுள்ள ஐக்கியம் மென்மேலும் விர்த்தியாகுமென்றும் நாம் நம்புகின்ரேம். அந்நியருக்கிடையில் ஏற்படும் வர்த்தக சம்பந்தம் சிநேகிதத்தை உண்டாக்குவது சந்தேகம். ஒரு குடும்பத்தை விருத்தியாக்கும்பொருட்டு சகோதரர் ஒத்துழைப்பது குடும்ப அன்பை யுண்டாக்காமற் போகாது. ஆகையால் இந்தப் பல்பொருட்காட்சி ராஜ்ஜியத்திற்குமாத்திரமல்ல, பொதுவாய் மனுஷ

ஜாதியாரனைவருக்கும் நிலையான பலனைத் தருமென்று நாம் நம்புகின்றோம். ஒரு ஜாதியாராவது பல ஜாதியார் ஒன்றுசேர்ந்தாவது தற்காலத்து முக்கிய வர்த்தக முயற்சிகளோடு சம்பந்தப்படாதிருத்தல் கூடாது; இந்தப் பல்பொருட்காட்சி ராஜ்ஜியத்திற்காதாரமான சாதனங்களை விருத்தி செய்யவும் வர்த்தகத்தை அதிகமாக்கவும் கூடுமாயின் மகா யுத்தத்தினுலேற்பட்ட சிர்க்கேட்டை நீக்கி உலகத்தைச் சமநிலைக்குக் கொண்டுவருமென்பதிற் சந்தேகமில்லை.

ஆங்கிலேய பல்பொருட்காட்சி இப்பொழுது திறக்கப்பட்டிருக்கிறதென்று நான் கூறுகின்றேன்; தேவனுடைய ஆசிர்வாதத்தினுல் என் சமஸ்த ஜனங்களுடைய ஐக்கியத்திற்கும் செல்வாக்கிற்கும், உலக சமாதானத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அது வழிகாட்ட வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.'

இவ்வாறு எம்மரசர் அம்மகா சபையிற் செய்த உபந்நியாசம் சுருக்கமானதாயினும் அங்கு வந்திருந்த பற்பல தேசத்து வர்த்தகருடைய மனதிற் பதிந்தது. நமது அரசர் தெளிவாயும் உறுதியாயும் மொழிந்த ஒவ்வொரு வார்த்தையும் அம்மகா அரங்கம் முழுவதும் கேட்டது; உவெம்பிளி சிங்காரவனத்தின் மற்ற மாளிகைகளிலும் கேட்டது; லண்டன் நகரிலும் கேட்டது; இங்கிலாந்து முழுவதும் கேட்டது; அம்மட்டோ! உலகமெங்கும் கேட்டதென்றால் உவையர்லெஸ் என்கிற கம்பியில்லாத் தந்தியின் விந்தையை யாதென்றுரைப்பது? அரசர் உபந்நியாசத்தை முடித்து, ஐந்து நிமிஷங்களாவதற்குமுன், அமெரிக்காவிலிருந்து வந்த தந்தியொன்று அவருக்கு அவ்வரங்கத்திலேயே கிடைத்தது. அது, அரசர் செய்த உபந்நியாசத்தைக் கேட்டு, அதில் அவர் மொழிந்த வார்த்தைகளைப் பெரிதும் மெச்சி அமெரிக்காவிலுள்ள நண்பரொருவரால் அவருக்கனுப்பப்பட்ட மங்கல வாழ்த்து.

நமது அரசர் பல்பொருட் காட்சியைத் திறந்த அந்த மங்களகரமான நாளை ஞாபகப்படுத்தும்பொருட்டு இங்கிலாந்திலுள்ள பொன் வெள்ளித் தொழிலாளர் சங்கத்தவர் அவருக்கு பொன்னுற் செய்யப்பட்ட அதியற்புதமானதோர் பணிச்செப்பை இனமாகக் கொடுத்தனர். பூலோகத்தை நான்கு சிங்கங்கள் முதுகின்மீது தாங்கிக்கொண்டிருப்பதுபோலச் செய்யப்பட்ட அப்பணிச் செப்பு உலக சரித்திரத்தில் ஆங்கிலேய ராஜ்ஜியம் எவ்வளவு முக்கியமானதாயிருக்

கின்றதென்பதைக் காட்டுகின்றது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் விஸ்தீரணமும் அதற்குட்பட்ட நாடுகளும் வித்தியாசமான வர்ண மிடப்பட்ட பொன்னினால் வெவ்வேறாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. அரசரும் அதை அன்புடன் அங்கீகரித்துப் பின்னர் பல்பொருட்காட்சி மிகவும் முக்கியமான பெரிய விஷயமென்பதை உத்தேசித்து, அப்பணிச் செப்பையும் காட்சிப் பொருளாக வைத்துக் காட்டுமாறு அதைக் கர்ம சபையாரிடத்தில் கிருபைகூர்ந்து ஒப்புவித்தனர். பல்பொருட்காட்சி முடிவெய்திய பின்னர் அது பழைய படியும் அரசருக்கு அனுப்பப்பட்டது. பல்பொருட்காட்சி நடந்த காலத்தில் பற்பல தேசத்தரசரும் பிரபுக்களும் அதைப்பார்த்து அதின் அழகையும் வேலைப்பாட்டையும் வெகுவாய்ப் புகழ்ந்தனர்.

அரசர் செய்த உபந்நியாசம் முடிந்தபின் கர்ம சபையார் அன்றையதினத்தில் அங்கு அப்பெரும் பல்பொருட்காட்சியைத் திறந்து தாங்கள் செய்த முயற்சியை ஆதரித்ததற்காக அரசருக்கு நன்றி கூறினர். அப்பால் ராஜவாழ்த்துப் பாடல்கள் பாடப்பட்டபின் அன்றைய சபை கலைந்தது.

அரசர் பல்பொருட்காட்சியைத் திறந்தவுடனே ஜனங்கள் பற்பல மாளிகையிலுள்ள எண்ணிறந்த அதிசயமான காட்சிப் பொருட்களைக் கண்டு களிக்குமாறு விரைந்தோடினர். அன்றையதினம் உெம்பிளி சிங்காரவனத்திற் கூடியிருந்த ஜனத்தொகை இரண்டு லக்ஷம் வரையிலிருக்கலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இப்பெரும் பல்பொருட்காட்சியில் ஒத்துழைத்த நாடுகளெவை யென்றும் அவற்றின் பிரதானமான காட்சிப்பொருட்கள் யாவை யென்றும் முன்னர் கூறியுள்ளோம். அந்நாடுகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்ப்பது நன்றன்றாயினும், பல்பொருட்காட்சியில் ஒத்துழைத்த பற்பல நாடுகளில் இந்தியாவே தலைமை ஸ்தானத்தை வகித்ததென்பது கூறாமலே அமையும். அதின் செல்வமும், தாதுவர்க்கங்கள், இரத்தினங்கள் கைத்தொழில்கள் முதலியவற்றின் சிறப்பும், பூர்வீக நாகரீகமும் வேறெந்த நாட்டிற்குமமையாது. பல்பொருட்காட்சி நடந்தகாலத்தில் ஜனங்கள் இந்தியா மண்டபத்தையே பெரிதும் விரும்பிப் பார்த்து ஆனந்தித்தனர்.

பல்பொருட்காட்சி ஏறக்குறைய ஆறுமாசம் வரையில் நடைபெற்றது. அக்காலத்தில் சராசரி தினமொன்றுக்கு ஐம்பதினாயிரம் ஜனங்கள் அக்காட்சியைக் கண்டு களித்தனர்.

---

## பல்பொருட்காட்சியால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு விளையும் பயன் யாது?

உவெம்பிளி பல்பொருட் காட்சியாலுண்டான பயன் எவ்வளவின்றென்று தீர்மானித்தல் சுலபமான விஷயமன்று. அதை விசாரிப்பதற்கு முன் அப்பல்பொருட்காட்சி எவ்விதமான நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதென்பதை முன்னர் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவ்வித நோக்கங்கள் மூன்று பிரிவுகளிலடங்கும் :—

முதலாவது, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட நாடுகளிலகப்படும் கைத்தொழிலிலமையாத பொருட்களை விருத்திசெய்து அவற்றை உபயோகப்படுத்தி ராஜ்ஜியத்திற்கு அதிக செல்வமுண்டாவதற்கேற்ற புதிய வழிகளைக் கண்டுபிடித்தல்.

இரண்டாவது, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட ராஜ்ஜியங்களுக்கிடையில் வர்த்தக சம்பந்தத்தை ஏற்படுத்தி வளரச்செய்து இங்கிலாந்திலும் அதின் ஆஞ்ஞைக்குட்பட்ட புறதேசங்களிலும் செய்யப்படும் பலவிதமான சாமான்களை உலகமெங்கும் விலையாகும்படி செய்தல்.

மூன்றாவது, ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்குட்பட்ட சமஸ்த ஜனங்களும் ஒருவரையொருவர் முன்னிலும் நன்றாயறியும்படி செய்தலும், ஆங்கிலேயர் அதிகாரத்திற்குட்பட்டு அரசுசெலுத்தும் தேசங்களிலும், குடியேற்றநாடுகளிலும் ஆங்கிலேயர் உதவியை எதிர்பார்க்கும் தேசங்களிலுமுள்ள விளைபொருட்கள் தாதுவர்க்கங்கள் எவையென்றும் அந்நாடுகளின் கைத்தொழிற்றிறமை எத்தன்மையதென்றும் ஆங்கிலேயருக்கு அத்தாட்சிப்படுத்திக் காட்டுதலும்.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட நாடுகளில் நமது தற்கால நாகரீகத்திற்கேற்ற உபகரணங்களைச் செய்துகொள்ள வேண்

டிய, ஏறக்குறைய, எல்லா மூலபொருட்களும் ஏராளமாய் அகப்படுகின்றனவென்பது வாஸ்தவமே. அந்தப் பொருட்களை விருத்தி செய்யவும் உபயோகப்படுத்தவும் தெரிந்த ஜனங்கள் அவற்றைப்பற்றி நன்றாயறிதல் அவசியம். உவெம்பிளியில் நடந்த பல்பொருட்காட்சி ஜனங்கள் அவற்றைக்குறித்துப் பூரணமாயறிவதற்கு போதியளவு சாதனமாயிற்றென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். அங்கு விளங்கின காட்சிகள், சமுத்திரத்திற்கப்பாலுள்ள ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்குட்பட்ட நாடுகளில் தொழிலாளருக்கும், வர்த்தகருக்கும், தனவந்தருக்கும் மிக்க லாபத்தைத் தரக்கூடிய எண்ணிறந்த பொருட்களிருக்கின்றனவென்பதை உணர்த்துகின்றன. இவ்விதமான விஷயங்களில் நாம் நேரிற் சிறிதளவாயேனும் காண்பது, ஏராளமாய்க் கேள்விப்படுவதினும் மேலென்பதை நாம் நன்றாயறியவேண்டும். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட தேசங்களில் விளைபொருட்கள், தாதுவர்க்கங்கள், கைத்தொழிற் பொருட்கள் முதலியவைகளைப்பற்றி ஆங்கிலேயர் ஏராளமாய்க் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் அவற்றைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டறியக்கூடியதாயிற்று. இவ்விதமாய் அறிவதினால் சர்வதேச வியாபாரம் விருத்தியாகிறதற்கு ஏதுவாகிறது. ஆறுமாசம் நடந்த இந்தப் பல்பொருட்காட்சியால் சர்வதேச வர்த்தகம் விர்த்தியாயிருக்கின்றது. பல்பொருட்காட்சி ஆரம்பமாகிச் சில வாரங்களாவதற்குள் இங்கிலாந்திலுள்ள பிரபல வர்த்தகரிற் பலர் காட்சி மாளிகைகளுக்குத் தமது பிரதிநிதிகளை யனுப்பி அங்குள்ள பலவிதமான சரக்குகளில் எவைகளை இங்கிலாந்தில் விற்கலாமென்று ஆராய்வாராயினர். சில வர்த்தகர்கள் ஏராளமான சரக்குகளை வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தனர். இவைகளை நோக்குமிடத்து இப்பல்பொருட் காட்சியால் வர்த்தகம் அதிக விருத்தியடைந்ததென்று உறுதியாய்க் கூறலாம். புறதேச வர்த்தகர்களும் தாம் உவெம்பிளிக்கனுப்பிய காரியஸ்தர் மூலமாய் முன் வாங்காத ஆங்கிலேய சரக்குகளை ஏராளமாய் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தனர்.

இப்பல்பொருட்காட்சி காரணமாகப் புறதேசவாசிகள் உவெம்பிளிக்கு வர ஏதுவாயிற்று. ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா முதலிய கண்டங்களிலுள்ள பற்பல தேசங்களிலிருந்து வர்த்தகரும், ஸ்தானாபதிகளும், பத்திராதிபர்களும், ராஜ்ய தந்திர நிபுணரும் ஆங்கிலேய

ராஜ்ஜியத்தின் சிறப்பை நேரிற் கண்டறியும்வண்ணம் உவெம் பிளிக்கு வந்தார்கள். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் கைத்தொழிற் றிறமை எப்படிப்பட்டதென்பதையும் ஆங்கிலேயரிடத்திலிருந்து தாம் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்கள் எவை யென்பதையும் அறிய வேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். இவ்விதமாய் உலகத்தின் பற்பல பாகத்திலுள்ள ஜனங்கள் ஒருவரையொருவர் உவெம்பிளியில் அறிந்துகொள்ளவும், அப்பொழுது ஏற்பட்டுப் பின்னர் காலக்கிர மத்தில் விருத்தியாகக்கூடிய வர்த்தக சம்பந்தத்தால் அவர்களுக்குள் உண்டான ஐக்கியம் உறுதியடையவும் இப்பல்பொருட்காட்சி கார ணமாயிற்று.

உவெம்பிளிக் காட்சிக்கு முன்னர் ஆங்கிலேயரிற் பலருக்கு சமுத்திரத்திற்கப்பாலுள்ள நாடுகளைப்பற்றியும் அவைகளுடைய திறமையைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. இப்பொழுது அவர்கள் சிறிதளவாயாவது அறிந்திருக்கிறார்கள்.

உவெம்பிளி பல்பொருட்காட்சியின் விசேஷம் அதை விட்டு நீங்கியவுடன் ஒழிந்துபோகிறதில்லை. இங்கிலாந்து முழுவதிலும், அதினாலுண்டான பலன் தெரிகிறது. உலகத்தின் பற்பல பாகங்களி லிருந்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் இங்கிலாந்திற்குச் சென்றதற்கு உவெம்பிளியே காரணம். முன்னொருபோதும் அத்தனை ஜனம் அங்கு சேர்ந்ததேயில்லை. இங்கிலாந்திலிருந்து வெளித் தேசங்களுக் குச் சென்று நெடுநாள் திரும்பிவராத ஸ்திரீகளும் புருஷர்களும் உவெம்பிளிக் காட்சியைக் கருதியே இங்கிலாந்திற்குத் திரும்பினர். ஆகையால் இந்தப் பல்பொருட்காட்சி பழைய பாச பந்தங்களையும் பந்துத்துவங்களையும் புதுப்பிப்பதாயிற்று. வாஸ்தவத்தில், இங்கி லாந்தை, விருந்தினரை யுபசரிக்குமோர் விருந்துடைத் தலைவனாக வும், காட்சியின்பொருட்டும் வர்த்தகத்தின்பொருட்டும் அங்குச் சென்ற பல தேசவாசிகளை விருந்தாளிகள்போலவும் வர்ணிக்கலாம். இக்காலத்தில் லண்டன் நகரில் நடந்த விருந்துகளும், கச்சேரிகளும் எத்தனை? நடன சங்கீத விநோதங்கள் எத்தனை? களியாட்டுக்கள் எத்தனை? ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்கும் அதற்குட்பட்ட இந்தியா, கனடா முதலிய ராஜ்ஜியங்களுக்கு மிடையிலுள்ள சம்பந்தமே ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரமென்பது வாஸ்தவமே யாயின், இந்தப் பல்பொருட்காட்சி நிலைபெற்ற காலத்தில் இங்கி

லாந்தில் நடந்த விருந்துகளும், கச்சேரிகளும், கூட்டங்களும் அந்தச் சம்பந்தத்தையும் பந்துத்துவத்தையும் பன்முறை உறுதிப்படுத்தின. உவெம்பிளிப் பல்பொருட் காட்சியினுல் ஏற்பட்ட மகாசக்தியை இங்கிலாந்தின் ஒவ்வொரு பட்டணத்திலும் காணக்கூடியதாயிருந்தது. இந்த சக்தி லண்டன் நகரில் அபாரமாய்க் காணப்பட்டது. உவெம்பிளிக் காட்சியினுல் விசேஷ பலனை யடைந்தது லண்டன் நகரமே. அக்காலத்தில் லண்டன் நகரத்தில் நடந்த வியாபாரம் எவ்வளவினதென்றறிவது சாத்தியமாயின், அது பிரமாண்டமான தொகையா யிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. பல்பொருட்காட்சியின் பொருட்டு லண்டன் நகரில் வந்து தங்கின ஜனங்களின் தொகை என்ன? அவர்கள் அங்கு செலவுசெய்த பணம் எவ்வளவு? அவற்றை மனதில் நிதானிப்பதும் கூடாத விஷயம்.

கல்வி விஷயமாய் நோக்குமிடத்தும் உவெம்பிளி பல்பொருட் காட்சி முன்னெருபோதும் எவ்விடத்தும் அமையப்பெருத கல்வி யபிவிர்த்தி ஸ்தானமாய் விளங்கிற்று. காட்சி பார்க்க வந்த ஜனங்கள் காட்சிப் பொருட்களை நேரிற் கண்டு அவற்றாலடையுமறிவை நாம் இங்கு கூறவில்லை. இங்கிலாந்திலுள்ள சிறுவர்க்கு இந்தப் பல் பொருட் காட்சியாலுண்டான கல்வியறிவையே நாம் குறிப்பிக்கின்றோம். இங்கிலாந்திலுள்ள வித்தியா தலைவர்கள், கலாசாலைச் சிறுவர்கள் பல்பொருட்காட்சிக்குச் சென்று காட்சிப் பொருட்களைக் காண்பது மிக்க பயனைத் தருமெனக் கருதி, அவ்வாறு சிறுவர்களை அழைத்துச் செல்வதற்கு வேண்டிய வேறபாடுகளைச் செய்தனர். சுமார் ஐந்து லக்ஷம் சிறுவரும் சிறுமிகளும் இப்பெருங் காட்சிக்குச் சென்று காட்சிப் பொருட்களைக் கண்டுகளித்து அறிவடைந்தனரென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

பல்பொருட்காட்சியைத் திறப்பதற்குப் பல மாசங்களுக்கு முன்னர் முதற்கொண்டு பாடசாலை மாணுக்கருக்கென்று ஒரு வாராந்தர பத்திரிகை ஏற்படுத்தப்பட்டது. அதில், ஆங்கிலேய ராஜ்ஜியத்தைப் பற்றியும் அதற்குட்பட்ட நாடுகளின் ராஜ்ஜிய உபகரணங்கள், விளை பொருட்கள், தாதுவர்க்கங்கள் முதலியவற்றைப்பற்றியும் கிரமமாய்ப் பல வியாசங்கள் தோன்றினதுமன்றி, மாணுக்கர் பல்பொருட்காட்சிச் சாலைக்குச் சென்று இன்னின்ன காட்சிப் பொருட்களைக் காண்ப தவசியமென்றும் கூறப்பட்டது. அந்தப் பத்திரிகையை ஏற்படுத்திச்

சில வாரங்களாவதற்குள் ஒரு லக்ஷத்தைம்பதினாயிரம் காப்பிகள் செலவாயின. ஆகையால் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை பிற்கால சந்ததியாருக்கும் இப்பல்பொருட்காட்சி தெரிவிப்பதாயிற்று.

ஐரோப்பிய மகா யுத்தத்தாலேற்பட்ட கெடுதிகள் யாவும் ஒருவாறு நீங்கி, சந்தோஷமும் சமாதானமும், வர்த்தக விருத்தியும், கைத்தொழில் விருத்தியும் பழையபடியுமுண்டாயிற்றென்பதை இப்பெருங்காட்சி காண்பித்தது. ஆங்கிலேயர், தூர தேசத்திற்குச் சென்று தைரியமாய் வர்த்தகம் செய்வதிலும், கப்பல்களை திருப்பதிலும் அவற்றைச் சமுத்திரத்திலோட்டுவதிலும் மிகக் கீர்த்திபெற்றவர்கள். ராஜ்ஜியத்தின் பல பாகங்களிலுமுள்ள பொருட்களை ஒன்றுசேர்த்து, அவற்றை எவ்வாறு உபயோகப்படுத்தி ராஜ்ஜியத்தை விருத்தியடையச் செய்யலாமென்பதே உவெம்பிளிக் காட்சியின் நோக்கம். ஆகையால் ஆங்கிலேயர் இத்தகைய பிரமாண்டமான பல்பொருட்காட்சியை ஆரம்பித்து நடத்தினது, அவர்களுக்கு மிக்க கீர்த்தியைத் தரக்கூடியது.

---

## ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எவ்வாறு தன்னுள் அடங்கினதாய் இருக்கிறதென்பது

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எவ்வளவு விஸ்தீரணமுடையதென்றும் அதின் குடி ஜனத்தொகை எவ்வளவென்றும் முதலாம் அதிகாரத்திற் கூறப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலுமுள்ள ஜனங்களில் நாலிலொருபாகம் ஆங்கிலேயர் அரசாட்சிக்குட்பட்டவர்கள். ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட நாடுகள் சகரா வனாந்தரத்தைப்போலவும் ஸ்பீரியாவிலுள்ள குளிர்ந்த பனிநாடுகளைப் போலவும் வெறுமையான பூமியல்ல. அந்நாடுகளிற் பெரும்பாலானவை சகல வளங்களும் பொருந்தினவையாய் அஷ்டலக்ஷ்மி தாண்டவமாடும் செல்வ நாடுகளாய் விளங்குகின்றன. அவற்றின் விளைபொருட்கள், கைத்தொழில், தாதுவர்க்கங்கள் முதலியவற்றின் விபரங்கள் முன்னரே விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. கைத்தொழிற்றிறமையும் செல்வப்பேறுமுடையவர்களுக்கு இன்னின்ன உபயோகமான சாமான்கள் இன்னின்ன விடத்தில் அகப்படுமென்று நன்றாய்த் தெரியும்.

அவற்றை நேரிற் போய்ப்பார்த்து வாங்குவது, அதிக சிரமத்தையும் வெகு செலவையும் உண்டாக்கும்; காலதாமசமுமுண்டாகும். ஆகையால் அவ்வாறு செய்தல் சாத்தியமன்று. அவ்வித கஷ்ட மொன்றுமில்லாது வேண்டிய வஸ்துகளைத் தருவிப்பதற்கு ராஜ்ஜிய மெங்ஙனும் பலவிதமான சாதனங்களும் சௌகர்யங்களும் ஏற்படுத் தப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தில் எத்தனையா யிரம் தபாற்சாலைகளும் தந்திச்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின் றன? இந்தியாவிலிருக்கும் வர்த்தகனொருவன் இங்கிலாந்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகளை இரண் டணுச் செலவில் ஆறு வாரங்களில் தருவிக்கலாம். ஒரு தேசத்தி லுள்ளவர்கள் மற்றொரு தேசத்திலுள்ளவர்களிடத்தில் சரக்குகளைப் பற்றியும் விலை விபரங்களைப்பற்றியும் ஒரேதினத்தில் விசாரித்தறிய லாம். இவை தபாற்சாலைகளாலும், தந்திச்சாலைகளாலும் சாத்தியமா கின்றன. சென்னையிலுள்ள பிரபல வர்த்தகரொருவர் காலையில் வெறுங்கையோடு வர்த்தகசாலைக்குச் சென்று மாலையில் ஒரேதினத் தில் ஒரு லக்ஷம் ரூபாய் சம்பாதித்துக்கொண்டு வீட்டுக்குத்திரும்பின ராம். இது தந்தி மூலமாகச் செய்த வர்த்தகத்தின் பலன். நீலமருந் தின் விலையை இங்கிலாந்திலிருந்து தந்திமூலமாக விசாரித்து, வாங்க ஏற்பாடுசெய்த ஒரு பிரபுவுக்கு, பவுண் ஒன்றுக்கு ஒரு அணு லாபம் வைத்து ஏற்பாடு செய்ததனுல் இந்தப் பெரிய தொகை அந்த வர்த்த கருக்கு லாபமாய்க் கிடைத்தது. ஆகையால் தபால், தந்தி முதலிய சாதனங்கள் எவ்விதமான பூரணநிலையை யடைந்திருக்கின்றன வென்பது நன்கு விளங்குகின்றது.

ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள புகை வீதிகள் எத்தனை? அதின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற் குச் சமுத்திர மார்க்கமாய் சரக்குகளை ஏற்றிச்செல்லும் கப்பல்களெத் தனை? அப்புகை வீதிகள் மூலமாகவும் கப்பல்கள் மூலமாகவும் வருஷவாரி ஏற்றுமதி இறக்குமதியாகும் சரக்குகள் எத்தனை டன் இடையுள்ளவை? அவற்றின் விலை யென்ன? அவற்றால் வர்த்த கரும் வர்த்தக சங்கங்களும் அடையும் லாபமென்ன? இவற்றை நன்றாய் ஆலோசிக்குமிடத்து, பிரயாண சாதனங்களும் வர்த்தகவிருத் திக்குரிய பல சௌகர்யங்களும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தில் ஏரா ளமாய் உண்டென்று தெரிகிறது.

கைத்தொழிற் பொருட்களாகச் செய்யப்படாத பருத்தி, கொப்பரு, எண்ணெய் தரும் விதைகள் முதலிய மூலபொருட்களைப் பலவித உபயோகமான சரக்குகளாகச் செய்ய வல்ல புத்திசாதுரியமுள்ள தொழிலாளர் எங்குமுண்டு. அவற்றைப் பலவிதமான சாமான்களாகச் செய்ய வல்ல யந்திரங்கள் எங்கும் காணப்படுகின்றன. உவெம்பிளி யந்திரமாளிகையிற் காணப்படாத யந்திரம் பூவுலகிலில்லை. ஆகையால் ஆங்கிலேய ராஜ்ஜியம் யந்திரசக்தி விஷயத்திலும் நிகரற்றதாய் இருக்கின்றது. ஆகவே, மூலபொருட்களாயுள்ள பலவற்றை அழைப்பித்து, அவற்றை உபயோகமும் அழகுமுள்ள சாமான்களாகச் செய்வதிலும் அது மிக்க சாமர்த்தியமுடையது. இந்தியாவிலுள்ள பருத்திப்பஞ்சுகள் எத்தனை வகையானவை? அவை வருஷவாரி எத்தனை டன் இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகின்றன? மான்செஸ்டர் நகரத்திலுள்ள பெரிய நெசவுசாலைகளெல்லாம் பெரும்பாலும் இந்தியாவின் பருத்தியையே எதிர்பார்க்கின்றன. அக்காரணத்தினால் ராஜாங்கத்தாரே இந்திய மத்திய பருத்திச்சங்கம் என்றொரு சங்கத்தை ஏற்படுத்தி, பருத்தியைப் பயிரிடும் தொழிலைச் சாஸ்திர முறைப்படி நடத்துவதற்கும், பருத்தி வர்த்தகத்தை விருத்தி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதுமன்றி அதற்கென்று ஒரு சட்டத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் பருத்தி, பலவிதமான வஸ்திரங்களாகவும் நாணயமான துணிகளாகவும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வருவதுமன்றி உலகத்தின் பற்பல நாடுகளுக்கும் செல்லுகின்றன. நெசவு சாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பெரிய நெசவு யந்திரங்களின் ஒரு புறத்திலுள்ள தொட்டியில் பஞ்சைக் கொட்டினால் அது மறுபுறத்தில் வஸ்திரமாக மணியொன்றுக்கு நூறடிவீதம் வெளிப்படுவது என்ன விந்தை! இந்தியாவில் விளையும் பஞ்சு உலகம் முழுவதற்கும் செல்லுகின்றதென்று கூறுதல் தவறாகாது.

இதேபிரகாரம் தோலை எடுத்துக்கொள்ளுவோம். இந்தியாவிலிருந்து வருஷவாரி இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகும் தோல் எத்தனை டன் இடையுள்ளது. ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் வேறு நாடுகளிலிருந்து அங்கே அனுப்பப்படும் தோல்கள் எவ்வளவின? இவையெல்லாம் பழையபடியும், ஜோடுகளாகவும், பைகளாகவும், பெட்டிகளாக-

வும், ஜீனி, குதிரைச்சாமான் முதலியவைகளாகவும், அரைக்கச்சு, பணப்பை முதலிய சிறிய சாமான்களாகவும் இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் அனுப்பப்படவில்லையா?

மேற்கூறியவை போலவே இந்தியாவிலும் மற்ற ராஜ்ஜியங்களிலுமுள்ள ஒவ்வொரு பொருளும் மாறுதலடைந்து சிறந்த வர்த்தகப் பொருளாய் அதிக லாபத்தைத் தருகிறது. பனைமட்டையைச் சுத்தி கொண்டடித்து அதிலுள்ள நாரை இங்கிலாந்திற்கு அனுப்புகிறோம். தேங்காய் மட்டையிலுள்ள நாரை விசேஷமாய் இங்கிலாந்திற்கு அனுப்புகிறோம். அவை மறுபடியும் சிறந்த துடைப்பங்களாகத் திரும்பி வருகின்றன. இப்படியே ஒவ்வொரு பொருளும் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் போய் மாறுதலடைந்து மிக்க உபயோகமான சாமானாகின்றது. இவற்றால், ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வேறு தேசத்தினுதவியை நாடாமல் சமஸ்த பொருட்களையும் தன்னகத்தே அடக்கியிருக்கிறதென்றும், அதின் நாடுகள் சுக ஜீவியத்தின்பொருட்டு ஒன்றுக்கொன்று உதவிசெய்யவேண்டியனவாய் இருக்கின்றனவென்றும் ஒன்றின் செல்வாக்கு மற்றொன்றிற் பொறுத்திருக்கின்றதென்றும் அறிகிறோம். ஆகையால் ஜனங்கள் எவ்விதத்திலும் ஒத்துழைத்துக் கைத்தொழிலையும், வர்த்தகத்தையும் விருத்திசெய்து ராஜ்ஜியம் முன்னேற்றமடையச் செய்வது அவர்கள் கடமையாகும்.

C. L. S. PRESS, MADRAS—1925